www.tamilarangam.net

அன்பளிப்பு 40P

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் பத்திரிகை 08-07-1994

உள்ளே...


- 'விடிவெள்ளி' நிறுவனம்
- பெண் ஒடுக்கு முறையும் ஆயுதப் போராட்டமும்
- தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம்
- சீதனம்: காலம் போட்ட கைவிலங்கு
- சொத்தி உபாலி யார் ?
- சிறுகதை - சுவடுகள் தொடரும்
- சிறிமாவோவின் குறி ஜனாதிபதிப்பதவி


# நாம் எமது இலக்கை நெருங்கிக் கொண்டிருக்கிறோம்

## யாழ். மக்கள் புளகாங்கிதம்

"நாம் எமது இலக்கை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். எமக்கான நீதிமன்றம், பொலிஸ், பொருளாதார முறைமைகள், கல்வி முறைமைகள் என்பவற்றை ஏற்படுத்தி நடாத்தி வருகிறோம்."

இவ்வாறு, யாழ்ப்பாண மக்கள் தம்மிடம் பெருமையுடன் கூறியதாக, சமீபத்தில் யாழ். குடா நாடு சென்று வந்த கடல் கடந்த நாடுகளின் உதவிக்கான கத்தோலிக்க நிதியத்தின் இலண்டன் பிரதிநிதி, தமிழ் அகதிகள் பிரதிநிதிகளை உத்தியோகபூர்வமற்ற முறையில் சந்தித்த போது கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது, "இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்கள் மனித நடமாட்டம் இல்லாத சூனியப் பிரதேசங்களாக உள்ளன. அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மக்கள் எந்நேரமும் மரண பயத்துடன் நடைப் பிணங்களாக வாழ்வதைக் காணக்கூடியதாக இருந்தது. அதேவேளை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்கள் பச்சைப் பசேலென திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியைக் காட்டி நிற்கிறது. யுத்த சூழலுக்கு உரிய அவலங்கள் இருந்தபோதிலும், மக்கள் மன உறுதியுடன் வாழ்ந்து வருகின்றனர். சிறீலங்கா அரசாங்கப் பாதுகாப்புப் படைகள் தான் தோன்றித் தனமான முறையில் குண்டு வீச்சுக்களையும் செல் அடிகளையும் பொதுமக்கள் குடியிருப்புக்கள் மேல் நிகழ்த்துகின்றன. 'பாதுகாப்பாக இருப்பதானால் புலிகளின் முகாமுக்குள் இருக்க வேண்டும். ஏனெனில் சிறீலங்காப் படைகள் அந்தப் பக்கம்கூட திரும்பிக் கூடப்

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...

## செல்லடி , குண்டடி தொடர்கிறது

சிறீலங்காப் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னரும் மாதகல், அளவெட்டிப் பகுதிகளில் செல்லடிகளும் குண்டடிகளும் சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளின் தரைநகர்வு முயற்சிகளும் தொடர்கின்றன. ஆயினும் உசார் நிலையில் உள்ள விடுதலைப் புலிகள் அனைத்து தாக்குதல்களையும் தரைநகர்வு முயற்சிகளையும் எதிர்த்து நிறுத்தி வருகின்றனர்.

இதேவேளை திருகோணமலை பகுதிகளில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் வேகமடைந்திருப்பதை அடுத்து கிழக்கில் சிறீலங்கா இராணுவத்தினரும்

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...

## ஜனாதிபதி தெரிவு முறையை மாற்றுவதற்காகவே பொதுத்தேர்தல்

### அரசியல் நெருக்கடியை தவிர்க்க முயற்சி

சிறீலங்கா ஜனாதிபதித் தெரிவுமுறையை மாற்றியமைப்பதற்காகவே, சிறீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா சிறீலங்காப் பாராளுமன்றத் தேர்தலுக்கு முதலிடம் கொடுத்துள்ளார் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். இன்றைய சிறீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா, தனது பதவியைத் தக்கவைத்துக் கொள்வதற்கான 'பதவி காப்பாற்றும்' திட்டமே இது எனக்கூறப்படுகின்றது.

சிறீலங்காவின் அரசியலமைப்புப் படி, சிறீலங்கா ஜனாதிபதித் தெரிவுக்கான தேர்தல் இலங்கைத்தீவு முழுவதிலும் நடைபெற வேண்டும். அத்துடன் மொத்த வாக்குகளில் குறைந்தது 50 வீதமான வாக்குகளையாவது ஜனாதிபதியாகத் தெரிவுபெறுபவர் பெற்றிருக்கவேண்டும் என இருவிதிகள் உள்ளன. இன்றுள்ள சூழலில் தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவரீதியாக வெல்ல முடியாது என்பதே சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளின் ஏகோபித்த முடிவு. எனவே இலங்கைத்தீவு முழுவதும் ஜனாதிபதித் தேர்தலை நடாத்த முடியாது என்பது வெளிப்படை.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றாலும், சிங்களவர்களிடமும் தமிழர்களிடமும் முஸ்

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...

# சிறீலங்காவின் அரசியல் சதி; தமிழீழத்தில் தேர்தல் நடத்த முயற்சி

அங்கீகாரத்தை நோக்கி நிற்கும் தமிழீழ அரசு நோக்கிய அரசின் இருக்கைநிலையை சர்வதேச சமூகம் ஏற்கத் தொடங்கியுள்ளது. இதற்கு அறிகுறியாக சமீபகாலமாக வெளிவரும் சர்வதேச விமர்சகர்களின் செய்திகள், கட்டுரைகளில் தமிழீழத்தவர் 'மக்கள்' எனவும் அவர்கள் அரசற்ற நாட்டினத்தவர் எனவும், இவர்களது மீட்கப்பட்ட பிரதேசங்களில் மக்களின் நிர்வாகம் விடுதலைப் புலிகள் ஊடாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது எனவும் கருத்துக்கள் எழுதப்பட்டு வருகின்றன. இதனால் கிலி கொண்டுள்ள சிறீலங்கா பௌத்த பேரினவாத அரசாங்கம், இராணுவச் சதி மூலம் வெற்றியடைய முடியாதென்பதை உணர்ந்து அரசியல் சதி முயற்சியில் இறங்கியுள்ளது.

இதன் முதலடியாக, சிறீலங்காப் பாராளுமன்றத்தைக் கலைத்த சிறீலங்கா ஜனாதிபதி வடக்கு - கிழக்கிலும் தேர்தல் நடைபெறும் என அறிவித்துள்ளார்.

அதிலும் வடக்கைப் பொறுத்தமட்டில் மக்கள் நடமாட்டம் அற்ற பகுதிகள் மட்டுமே சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. இப்பிரதேசங்களில் சிக்கிக் கொண்ட சில ஆயிரம் தமிழர்களை பயணக் கைதிகள் போல் சிறீலங்கா தடுத்து வைத்திருக்கின்றது. சிறீலங்கா ஆயுதப் படைகளால் சுதந்திரம் மறுக்கப்பட்ட நிலையில் உள்ள இம் மக்களைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்தி, இப்பிரதேசங்களில் வாக்குச் சாவடிகள் அமைத்து நேர்மையற்ற முறையில் தேர்தலை நடத்தக் கூடுமென்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாக உள்ளது.

அதேவேளை கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் இராணுவப் பயமுறுத்தல் மூலம் தேர்தல் நாடகத்தை ஒப்பேற்றலாம் என சிறீலங்கா அரசு திட்டம் தீட்டியுள்ளது.

அத்துடன் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறத்திலும் வாழ்கின்ற தமிழ் மக்களை நிர்ப்பந்திப்பதன் மூலம் தேர்தலில் வாக்குப் பதிவுகளை ஏற்படுத்தலாம் எனவும், மக்கள் வாக்களிக்காது விட்டாலும் கூட நேர்மையற்ற முறைகளில் வாக்குப் பிரயோகத்தை நடாத்தி தேர்தலில் தமக்கு விருப்பமான விளைவுகளைப் பெறலாம் எனவும் சிறீலங்கா அரசாங்கமும் அதன் அடிவருடி தமிழ்க் குழுக்களும் கங்கணம் கட்டி நிற்கின்றன.

ஆயினும் சிறீலங்காப் பாராளுமன்றத்தின் இறைமையிலிருந்து தன்னை மீட்டுக் கொண்ட தமிழீழ மக்கள், தம்மேல் மேற்கொள்ளப்படும் அரசியல் அடக்

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...

## பதவிப் போட்டிக்காக நீதிமன்றம் செல்ல முயலும் தமிழர் விடுதலைக்கூட்டணி

### ☆ சிறீலங்காவின் அரசியல் சதிக்கு பக்கத்துணை

சிறீலங்கா அரசாங்கம் தமிழீழப் பிரதேசத்தில் இழந்துவிட்ட இறைமையை இருப்பதாகக் காட்டுவதற்கும், அங்கீகாரத்தை நோக்கி நிற்கும் தமிழீழ அரசைச் சிதைப்பதற்கும் நடத்த முயலும் சிறீலங்காப் பாராளுமன்றத் தேர்தலில் பங்குபற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி, யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களிலும் தாம் போட்டியிடுவதாக அறிவித்துவிட்டது. இதன் மூலம் தமிழீழப் பிரதேசங்களில் இராணுவ ரீதியாக ஆக்கிரமிப்புச் செய்துள்ள சிறீலங்கா அரசாங்கத்தின் செயலை மூடிமறைக்கும் அரசியல் சதியையும் தமிழர் விடுதலைக் கூட்டணி செய்கின்றது.

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தேசக்கடமை

ஆண்டுகள் பதினொன்று ஆனாலும்கூட, ஆடி 23 என்றதுமே தமிழ் மக்களின் நெஞ்சங்களில் இனம்தெரியாத வேதனை தோன்றுகிறது. கூடவே அந்தக் கொடுமைகளுக்கு நியாயம் கேட்கும் ஆர்வமும் தொடர்கிறது. இதனால்தான் ஒவ்வொரு ஆடி 23 ஐ அடுத்தும், உலகெல்லாம் வாழும் தமிழர்கள் எழுச்சிப்பேரணிகள் நடாத்தியும், கூட்டங்கள் கூட்டியும் தமது இனத்தின் மேல் நடாத்தப்பட்ட இனஒழிப்புக்கு எதிராகக் குரல்கொடுத்து நியாயம் கேட்பது வழமையாகி நிற்கின்றது.

இந்தவகையில் ஆடி 23 உலகத்தமிழர்களின் அரசியல் நாளாக மாறிவிட்டது. 1983 இல் தமிழ் மக்கள் மேல் சிங்கள பௌத்த பேரினவாதிகளால் சிங்கள அரசின் துணையுடன் பிரகடனப்படுத்தப்பட்ட ஒருபக்க யுத்தம், அவர்களது நிராயுதபாணியிலான ஜனநாயக அகிம்சைவழி எதிர்ப்புகளுக்கு சிங்கள பௌத்த பேரினவாதமும் அதனைப் போற்றிப் பாதுகாத்து வழிநடாத்தும் சிறீலங்கா அரசாங்கமும் கொடுத்த பரிசாக அமைந்தது. இதனால் அதுவரை 'கெரில்லா' தாக்குதல்கள் மூலம் ஆயுத எதிர்ப்பை வெளிப்படுத்திவந்த தமிழ் இளைஞர்கள், தமிழ் மக்களின் தேசிய பாதுகாப்பை வழங்கக் கூடிய மரபுவழி இராணுவமாகத் தம்மை மாற்றவேண்டிய நிலைக்கு ஆளாகினர். ஆகவே தமிழ் மக்களின் ஆயுத எதிர்ப்புக்கு சட்டரீதியான வலுவை ஏற்படுத்துவதில், 1983 சம்பவங்கள் கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளன.

அவ்வாறே இவ்இனஒழிப்பு முயற்சியில் தமிழீழத்திற்கு வெளியே வாழ்ந்த தமிழர்கள் மேல் ஆயுதபலாத்காரத்தைப் பிரயோகித்து, அவர்களை அகதிகளாகத் தமிழர் தாயகம் நோக்கி சிறீலங்கா அனுப்பிய செயலானது, "தமிழர் தாயகத்துக்கு வெளியே தமிழர்கள் தொழில் முயற்சிகள், பொருளாதார முறைமைகளில் பங்குபற்றக்கூடாது" என்ற, எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா காலம் முதல் உருவாக்கி வளர்த்து வந்த பௌத்த சிங்களப் பேரினவாதக் கோட்பாட்டின் செயல்வடிவமே ஆகும்.

அதேவேளை இந்தக் கட்டாய நாடுகடத்தல் மூலம், தமிழர் தாயகம் இலங்கைத் தீவின் வடக்கு -கிழக்கு மாகாணங்கள் தான் என்பதை சிறீலங்கா அங்கீகரித்துக்கொண்டது.

மேலும், தமிழர்களுடைய தொழில் முயற்சிகளுக்கு இவ் இனஒழிப்பின் மூலம் மட்டும் 953 மில்லியன் ரூபாக்கள் சேதமேற்படுத்தப்பட்டது. இதன்மூலம் தமிழர்கள் சிங்களவர்களுடன் கூட்டுப்பொருளாதார முயற்சிகளை நடாத்த முடியாது என்பது நிருபிக்கப்பட்டு, தமிழர்களுடைய தனியான பொருளாதார முறைமை ஒன்றுபற்றிய தேடலை இது ஊக்குவித்தது.

அரசியல் ரீதியாகவும், தமிழர்களை சிங்களவர்கள், பகைமையுள்ள நாட்டினமாக நோக்குவதை "போர் என்றால் போர்" என்ற அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் போர்ப்பிரகடனம் உறுதிப்படுத்தியது. கூடவே ஆடி 25 இல் ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கு எதிராகப் பேசுவதுகூட குற்றம் என சிறீலங்காப் பாராளுமன்றம் நிறைவேற்றிய சட்டமானது, தமிழர்களின் அடிப்படைச் சுதந்திரங்களான பேச்சுச் சுதந்திரம், அரசியல் உரிமை என்பவற்றை மறுத்ததும் அல்லாமல், 1992 இல் அரசற்ற நாட்டினமாக்கப்பட்ட தமிழீழ மக்களின் ஆக்கிரமிப்பாளராகவும் சிறீலங்காவை மாற்றிக்கொண்டது.

எனவே 1983 சம்பவங்கள் தனது விளைவுகளினூடாக 3,000 இற்கு மேற்பட்ட தமிழர்களை உயிர்ப்பலி எடுத்து 200,000 இற்கு மேற்பட்ட தமிழர்களை அகதிகளாக மாற்றிய அதேவேளை, தமிழர்களை ஆளும் உரிமையைச் சிறீலங்கா இழந்துவிட்டது என்பதையும் உலகுக்கு உணர்த்தியது.

ஆகவேதான் 1983 சம்பவங்கள் பற்றி அனுதாபம் தெரிவிக்கும் உலகத்தமிழினம் அதேநேரத்தில், இச்சம்பவங்களினூடாக தமிழர்களை ஆள்வதற்கு சட்ட அருகதையற்றவர்களாகிவிட்ட ஆக்கிரமிப்பாளரான சிறீலங்கா அரசாங்கத்திடம் இருந்து தமிழர்கள் விடுதலை பெறுவதற்கு உதவும்படியும் கோருகின்றனர்.

இதற்கு ஒரேவழி தமிழீழ மக்களின் தாயக உரிமையை ஏற்றுக்கொள்வதும், அவர்களுக்கு தேசியப் பாதுகாப்பு வழங்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் 'அரசுநோக்கிய அரசை' அங்கீகரிப்பதுமேயாகும்.

உலகின் மனச்சாட்சி உள்ள மனிதர்களும், சர்வதேச சமூக அரசியல் தலைவர்களும் இந்த உண்மையை உணரவைக்கவென வைக்கப்படும் எழுச்சிப் பேரணிகளில், கூட்டங்களில் கலந்துகொள்ளவேண்டியது, கட்சி பேதங்களுக்கு அப்பாற்பட்ட முறையில் ஒவ்வொரு தமிழரதும் தேசக்கடமையாகும். ■

# நீர்வேலியில் அகோர குண்டு வீச்சு தந்தை, மகள் உட்பட மூவர் பலி

## பல வீடுகள் முற்றாக நாசம்

நீர்வேலிப் பகுதியில் அண்மையில் சிறீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான இரண்டு சுப்பர் சொனிக் விமானங்களும் புக்காரா விமானமொன்றும் நடத்திய அகோர குண்டு வீச்சுத் தாக்குதலில் தந்தை, மகள் உட்பட மூன்று பொது மக்கள் பலியாகினர். இருவர் படுகாயமடைந்தனர். பல வீடுகளும் உடைமைகளும் சேதமடைந்தன.

காலை சுமார் 6.00 மணியளவில் இரு சுப்பர் சோனிக் விமானங்கள் நீர்வேலிப் பகுதியில் குண்டுகளை மாறி மாறி வீசின.

பின்னர் புக்காரா குண்டு வீச்சு விமானமும் குறிப்பிட்ட இடத்தில் 5 தடவைகள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடாத்தியது. இத் தாக்குதல்கள் சுமார் 20 நிமிடநேரம் நீடித்தது.

இக் குண்டு வீச்சு விமானங்களின் தாக்குதலின்போது, ஒரே குடும்பத்தில் தந்தையும் மகளும் கொல்லப்பட்டனர். இவர்களின் உறவினர் ஒருவரும் கொல்லப்பட்டார். இறந்தவர்களில் ஒருவர் உயர்வகுப்பு மாணவி என்பது குறிப்பிடத்தக்கது.

வேலுப்பிள்ளை சின்னத்தம்பி (65) நீர்வேலி, (இவர், நீர்வேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவராவார்) இவரின் மகளான சிவதர்சினி (18) (இவர், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி க.பொ.த. உயர்தரமாணவி ஆவார்.) கணபதிப்பிள்ளை புஸ்பலதா (22) ஆகியோரே விமானங்களின் தாக்குதலுக்குப் பலியானவர்களாவார்கள்.

கே. ஜெயவீரசிங்கம் (17) கோண்டாவில், முத்துப்பிள்ளை (78) நீர்வேலி ஆகியோர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இக் குண்டு வீச்சுத் தாக்குதலின்போது மூன்று வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன, வேறும் பல வீடுகளும் பாதிப்பிற்குள்ளாகின.

மேலும், பாடசாலை அறை குண்டுச் சிதறலால் தாக்கப்பட்டபோதும், அங்கு பிரத்தியேக வகுப்புகளில் பயின்று கொண்டிருந்த மாணவர்கள் பாதுகாப்பான இடங்களை நாடியதால், தப்பித்துக் கொண்டனர்.

கால்நடைகளும் இறந்தன. தென்னை, கமுகு, பலா மரங்களும் செய்கைபண்ணப் பட்டிருந்த மரவள்ளி, வாழை, வெங்காயம், கரட், குரக்கன் பயிர்களும் அழிந்து சின்னாபின்னமாயின. ■

# 'நாட்டுப்பற்றாளர்' என நித்திக்கு தலைவர் பிரபாகரன் கௌரவம்

அண்மையில் மறைந்த ஒலிப்பதிவாளர் திரு. துரைராசா நித்தியானந்தன் அவர்கள், தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களால் 'நாட்டுப்பற்றாளர்' எனக் கௌரவிக்கப்பட்டுள்ளார். நீண்டகாலமாகத் தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் தன்னை இணைத்துக்கொண்டவர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நெஞ்சார நேசித்ததுடன் விடுதலைப் புலிகளின் தலைமையை உற்றுணர்ந்து ஏற்றுக்கொண்டு, நீண்ட காலப் போராட்டத்துடன் தன்னை முடிந்தளவு இணைத்து செயலாற்றிய உத்தமரும் ஆவர்.

இவர் நிதர்சனம் வளர்ச்சிக்குத் துணையாக நின்றவர்; தமிழீழத்திலிருந்து வெளியான ஒலி, ஒளி நாடாக்களுக்கு தமது தொழில் நுட்ப ஒத்துழைப்பைப் பூரணமாக வழங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. ■

# வீரமுனை கிராம மக்கள் படையினரால் விரட்டல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் வீரமுனை கிராமத்தில் வாழும் தமிழர்கள் சிலரை, குடும்பத்துடன் வெளியேறிக் காடுகளுக்கு சென்றுவிடுமாறு படையினர் மிரட்டி வருகின்றனர். இதனையடுத்து இக்குடும்பங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் புகார் செய்துள்ளன. இதேவேளை தம்பிலுவில, திருக்கோயில், விநாயகபுரம் பகுதிகளைச் சேர்ந்த காவல் அரண்களில் நிற்கும் பொலிசார், பெண்களை தகாத வார்த்தைகளால் பேசுவது, எதிர்ப்போரைத் தாக்குவது போன்ற செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. ■

## 1983 ஆடி இனக்கலவரத்தை நினைவுகூரும் மாபெரும் எழுச்சிப்பேரணி

*1994 ஆடி 23, சிறீலங்கா அரசாங்கத்தினாலும் அதன் பாதுகாப்புப் படைகளினாலும் 1983 ஆடி 23 இல் திட்டமிட்டவகையில் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனஅழிப்பு நடவடிக்கையின் பதினோராம் நிறைவு ஆண்டாகும். வெலிக்கடைச் சிறையில் வைக்கப்பட்டிருந்த தமிழ் விசாரணைக் கைதிகளைத் துடிக்கத் துடிக்க வெட்டியும், கண்களைத் தோண்டியும் வதைசெய்தமையும் 1983 ஆடி இனஅழிப்பின் ஓர் அங்கமே, இலங்கைத் தீவில் தமிழீழத்திற்கு வெளியே வாழ்ந்த, தொழில்பார்த்த தமிழ் மக்களை இனஅழிப்புச் செய்து, அவர்களின் சொத்துக்களைச் சூறையாடியதுடன், எஞ்சியோரைத் தமிழீழம் நோக்கித் துரத்தியமை இனஒழிப்பின் உச்சக்கட்டமாகும். அன்று இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் தமது சொந்தமண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டனர்.*

*சிறீலங்காவின் இவ் இனஅழிப்பும், தமிழ் மக்களின் அவலவாழ்வும் இன்றும் தொடர்கதையாகவேயுள்ளன. சிறீலங்கா அரசின் திட்டமிட்ட இனஅழிப்பு நடவடிக்கைகளையும், எம்மக்கள் மீது போடப்பட்ட பொருளாதாரத் தடைகளையும் சர்வதேச சமூகத்தின் முன் எடுத்துக் கூறுவதற்காகவும், இனஅழிப்புக்கெதிரான எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தன்மையினை விளக்கி, சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுவதற்காகவும், தமிழ் மக்களின் 'அரசு நோக்கிய அரசின்' யதார்த்த நிலையை விளக்குவதற்காகவுமே புலம்பெயர்ந்துள்ள நாடுகளில் வாழும் தமிழீழ மக்கள் வருடந்தோறும் ஆடி இனக்கலவரத்தை நினைவுகூர்ந்து வருகின்றனர். இதற்காக எதிர்வரும் 23 ஆம் நாள் அமைதியான எழுச்சிப் பேரணிகளையும், அதன்தொடர்பாகக் கூட்டங்களையும் தாம் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளனர். இப்பேரணியில் பங்கெடுத்து, எம்மக்களின் நீதியான போராட்டத்தைச் சர்வதேச உலகிற்கு எடுத்துரைத்து, சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுப்பது எமது தலையாய தேசியக் கடமையாகும். அதனால், இப்பேரணியில் பெருந்திரளாகப் பங்கெடுத்துக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.*

**இலண்டனில் எழுச்சிப்பேரணி**

**காலம்:- 23. 07. 1994 (சனிக்கிழமை)**
**நேரம்:-பிற்பகல் 1.30 மணிக்கு**
**இடம் :- Temple place,**
**London WC2,**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மேலதிக செலவிற்கு 1100 கோடி ரூபா பாதுகாப்பு அமைச்சு கோருகிறது

## ஆயுத கொள்வனவிற்கு தேவையாம்

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்தும் யுத்தம் நடைபெற்று வருவதினால் வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டதைவிட மேலதிகமாக 1100 கோடி ரூபா தருமாறு பாதுகாப்பு அமைச்சு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது. இதே சமயம் பாதுகாப்பு அமைச்சின் இக்கோரிக்கைக்கு ஏற்ப நிதி ஒதுக்கீடு செய்வதில் திறைசேரி பெரும் நெருக்கடியை எதிர் நோக்கி உள்ளதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

யுத்தம் இன்னும் முடிவிற்குக் கொண்டுவரப்பட முடியாமல் இருப்பதினால், மேலும் ஆயுத தளபாடங்களும் விமானங்களும் கொள்வனவு செய்யவேண்டியிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இதன் காரணமாகவே வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 2200 கோடி ரூபா போதாது என்றும், மேலும் 1100 கோடி ரூபா தேவை எனவும் பாதுகாப்பு அமைச்சு கோரியுள்ளது.

இது குறித்து திறைசேரியின் பிரதம கணக்காளர் தெரிவிக்கையில்; புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி வேலைகள் அதிகரிக்கப்பட்டிருப்பினும் அதற்கு வெளிநாட்டு நிதி கிடைக்கக் கூடியதாக உள்ளது. ஆனால் இதிலிருந்து பாதுகாப்பிற்கு மேலதிக நிதியை ஒதுக்க முடியாது. எனவே பாதுகாப்பு வரியை நூற்று வீதத்தால் அதிகரிப்பதன் மூலமே இந்நிதியைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பாதுகாப்பு வரி அறவிடப்பட்டால் பணம் அச்சிட்டு வெளியிடுவதை விட, விரைவாக பொருட்களின் விலை அதிகரிக்குமென்றும் இதனால் மக்கள் பல இன்னல்களுக்கு ஆளாக வேண்டிவரும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இரு தேர்தல்களைச் சந்திக்க வேண்டியுள்ள நேரத்தில் இது உசிதமானதாக இல்லை எனவும் அரசாங்க வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

1994 ஆம் ஆண்டு பாதுகாப்பு செலவீனம் தொடர்பாக வரவு-செலவு திட்டத்தில் 2200 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மேலதிகமான யுத்தச்செலவாக 150 கோடி ரூபா இதற்கு முன்னர் ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே பாதுகாப்பு அமைச்சு கேட்ட 1100 கோடி ரூபாவை ஒதுக்கினால் 1994 இல் பாதுகாப்புச் செலவு 3300 கோடி ரூபா என்பது குறிப்பிடத்தக்கது.

1993 ஆம் ஆண்டின் பாதுகாப்பு மொத்தச் செலவு 2078 கோடி ரூபாவாகும். ■

# அம்பாறை - வளத்தாப்பிட்டியில் சிங்களக் குடியேற்றம்

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் புதிதாக சிங்களக் குடியேற்றமொன்று அமைக்கப் பட்டு வருகிறது.

வளத்தாப்பிட்டியில் நவீன வசதிகளுடன் இந்தக் குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது. இதற்கான ஆரம்ப வேலைகள், சிறீலங்கா புனர்வாழ்வு புனர் அமைப்பு சமூக நலத்துறை அமைச்சின் உத்தரவின் பேரில் அம்பாறை மாவட்ட அரச அதிபரால் மேற்கொள்ளப் படுகிறது.

ஐம்பது ஏக்கர் விஸ்தீரணம் உள்ள நிலப்பரப்பில் உருவாகும் இக்குடியேற்றத் திட்டத்தில், சுமார் ஆயிரம் பேரைக் கொண்ட 242 குடும்பங்கள் குடியேற்றப்படவுள்ளன. இதனிடையே பாரம்பரியமாக வளத்தாப்பிட்டியில் வாழ்ந்துவந்த தமிழ்மக்கள் அப்பகுதியில் இருந்து சிறீலங்காப் படையினராலும் முஸ்லீம் காடையர்களாலும் விரட்டப்பட்டதையடுத்து அவர்கள் தொடர்ந்தும் காரைதீவு இடம்பெயர்ந்தோர் முகாமிலேயே வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கான உதவிகள் எவையும் சிறீலங்கா அரசினால் வழங்கப்படுவதில்லை. ■

# தந்தையைக் கொன்றது புலிகள் என்று சாட்சியமின்றி நம்ப மாட்டேன்

## பிரேமாவின் மகள் துலாஞ்சலி கூறுகிறார்

"எனது தந்தையார் பிரேமதாசாவை விடுதலைப் புலிகள்தான் கொன்றனர் என்பதை சரியான சாட்சியங்களின்றி எனது குடும்பத்தினர் நம்பத்தயாராக இல்லை" என பிரேமதாசாவின் மகளான துலாஞ்சலி ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

'ஐலண்ட்' பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியில், "எனது தந்தையை விடுதலைப் புலிகளே கொன்றதற்கான போதுமான சாட்சிகள் இல்லை" எனவும் அவர் குறிப்பிட்டார். "கடந்த வருட மேதினக் கொலை குறித்து அரசு முழுமையான ஒரு விசாரணையை நடத்தவேண்டும் எனவும் தமக்கு உண்மை தெரியவேண்டும்" எனவும் துலாஞ்சலி ஜெயக்கொடி மேலும் குறிப்பிட்டார்.

"ஒருவருடம் சென்றும் அன்றைய தினம் என்ன நடந்தது என எமக்குத் தெரியவில்லை. இக் கொலை குறித்து விசாரிக்கும்படி மே 12 ஆம் திகதி ஜனாதிபதி விஜேதுங்காவைக் கடிதம் மூலம் கேட்டுள்ளேன். இக்கடிதத்தின் பிரதிகள் பிரதமர் ரணில், அரசியல்யாப்பு அமைச்சர் சொக்சி, ஐ. தே. க. பொதுச்செயலர் காமினி விஜேசேகரா, சட்டமா அதிபர் திலக் மாரப்பன பொலிஸ் மா அதிபர் பிராங்டி சில்வா ஆகியோருக்கு அனுப்பப்பட்டது. ஆனால் இதுவரை எந்தப் பதிலும் இது குறித்துக் கிடைக்கவில்லை.

குண்டுவெடிப்பு நடைபெற்ற இடத்தை உடனடியாக சுத்தமாக்க வேண்டிய அவசியமென்ன? இது புணிப்புரைகளுக்கமைய மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது. முழுஅளவிலான விசாரணை நடைபெற வேண்டும். அவசியமானால், வெளிநாட்டு நிபுணர்களும் விசாரணை நடத்த சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். எனக்குத் தேவை எனது தந்தையைக் கொல்ல யார் கட்டளையிட்டது என்பதுதான். ஐ. தே. கவில் உள்ள சிலர் எப்போதும் எனது தந்தைக்கு எதிராகவே இருந்துள்ளனர்.

நாட்டிற்கு உறுதியான தலைவர் தேவை. எனது தந்தையிடமிருந்து நன்மைகளைப் பெற்றவர்கள் அவர் கொல்லப்பட்டபின், அவரது குடும்பத்தைக் கவனிக்கவில்லை. அரசு இப்போது தென் மாகாணசபைத் தேர்தல் தோல்வியின்பின், பிரேமதாசாவின் கொள்கைகளைப் பின்பற்ற முடிவெடுத்திருக்கின்றது.

பிரேமதாசா 1977 முதல் கட்சிக்கு செய்த சேவையை, கட்சித் தலைவர்கள் உணரவேண்டும். எனவே இக்கொலைக்குக் காரணமானவர்களைத் தண்டிக்கவேண்டும்" என துலாஞ்சலி மேலும் தெரிவித்தார். ■

# விமானப்படை செலவு அதிகரிப்பு

## தளபதி ஒலிவர் ரணதுங்கா காரணம்

சிறீலங்கா விமானப்படையின் புதிய தளபதி ஒலிவர் ரணதுங்காவின் நியமனத்துடன் விமானப்படையின் செலவுகள் அதிகரித்துள்ளதாக, சிறீலங்கா விமானப்படை தலைமையகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

விமானப்படையிடமுள்ள பழுதடைந்துள்ள விமானங்களை மீண்டும் உபயோகிக்கத் தக்க வகையில் திருத்தியமைப்பது பற்றி இவர் கொண்டு வந்த திட்டம் தற்போது விமானப்படை அதிகாரிகளின் விசனத்துக்கு உள்ளாகியுள்ளது.

கனடாவைச் சேர்ந்த நிறுவனமொன்று பழுதடைந்த விமானங்களை திருத்துவதற்கான ஒப்பந்தத்தை பொறுப்பேற்று உள்ளது. இந்நிறுவனத்தின் நிர்வாக முகாமையாளர் டேவிட் கில்றோய் என்பவர் இவ் ஒப்பந்தம் தொடர்பாக 18 இலட்சம் ரூபாவினை இரு மாதங்களுக்குள் பெற்றுக்கொண்டுள்ளார்.

டேவிட் கில்றோய் தொழில்நுட்ப ஆலோசகராக மட்டுமே கடமையாற்றி வருகின்றார். இதனால் நிர்மாண வேலைக்காக சிறீலங்கா விமானப்படையின் தொழில் நுட்பவியலாளர்களை பயன்படுத்தவிருக்கிறது. டேவிட் கில்றோயின் ஆலோசகர் பதவிக்காக அவருக்கு 12,500 டொலர் வரையில் கொடுப்பதற்கு உடன்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அமெரிக்க விமானத் தயாரிப்பு நிறுவனமான பெல் கம்பனியிடமிருந்து விமானங்களின் அனைத்து உதிரிப் பாகங்களையும் வரவழைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் சம்பந்தப்பட்ட வகையில் 10 வீதமான தொகை சிறீலங்கா பிரதிநிதிக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ■

# வடபகுதிப் படையினரை மகிழ்விக்க சிங்களக் கலைஞர்கள் விஜயம்

வடபகுதியில் யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சிறீலங்காப் படையினரை மகிழ்விக்கும் பொருட்டு, பிரபல சிங்களக் கலைஞர்கள் குழுவொன்று வடபகுதிக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் பணிப்புரையின் பேரில் அம்பலாங்கொட தேசப்பிரேமி சங்கம், லேக்கவுஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் இவ் விஜயத்துக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

படையினரின் உபயோகத்துக்கென பலதரப்பட்ட பொருட்களை இக்கலைஞர்கள் குழு எடுத்துச் செல்லும் என மேலும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை வடக்கு -கிழக்குப் பகுதிகளில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் படையினருக்கென ஒலிப்பதிவு நாடா ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

"ரத்துமன்புப்பரா" எனப் பெயரிடப்பட்டிருக்கும் இவ் ஒலிப்பதிவு நாடாவில் உடுதா துனாஞ்சினி சந்திரசேகர என்ற பாடகியின் 12 பாடல்கள் உள்ளடங்கியுள்ளன. ■

# உலக சுகாதார ஸ்தாபனத்தின் குறும்படங்கள் வடக்கே வர இராணுவம் தடை விதிப்பு

உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுவரும் வீடியோ சஞ்சிகைகள், மற்றும் குறும்படங்களை வடபகுதிக்கு எடுத்து வருவதற்குச் சிறீலங்கா இராணுவத்தினர் தடைவிதித்துள்ளனர்.

சர்வதேச ரீதியாகக் கடைப்பிடிக்கப்பட்டுவரும் மருத்துவ, சுகாதார நடைமுறைகள் மற்றும் செயற்திட்டங்கள் குறித்தும், பல்வேறு நோய்கள் குறித்த தகவல்களை வெளியிடும் வகையிலும், இவ்வாறான நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விளக்கம்தரும் வகையிலும் அமைந்திருக்கும் மேற்படி வீடியோ சஞ்சிகைகளை, வடபகுதிக்கு எடுத்துவருவதற்குச் சிறீலங்காப் படையினர் தடைவிதித்துள்ளனர். இதேபோன்று பொது மக்கள் கடைப்பிடிக்கவேண்டிய சுகாதார மற்றும் மருத்துவ நடைமுறைகளை விளக்கும் வகையில் தயாரிக்கப்பட்டு உலக சுகாதார ஸ்தாபனத்தினால் வெளியிடப்பட்ட குறும்படங்களையும் வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்குப் படையினர் அனுமதி மறுத்துள்ளனர். ■

# ஏனைய மதங்களை விட பௌத்த மதத்திற்கு அரசு உரிய அந்தஸ்து வழங்க வேண்டும்

□ கையெழுத்து வேட்டை மகஜர் ஜனாதிபதி டி.பி.யிடம் சமர்ப்பிப்பு

பௌத்த சாசனத்துக்குரிய இடம் வழங்கப்பட வேண்டும் என்றும், ஏனைய மதங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடத்திற்கு சமனான இடம் வழங்கப்பட்டால் மட்டும் போதுமானதல்ல எனவும், பத்து இலட்சம் கையெழுத்து இட்ட மகஜர் ஒன்று ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு பௌத்த நாடு. இதில் வாழுகின்ற மக்களில் பெரும்பான்மையானவர்கள் சிங்கள பௌத்தர்களாக இருக்கின்றார்கள். இந்த நிலையில் எவ்வாறு ஏனைய மதங்களுக்கு வழங்கும் அந்தஸ்த்து மட்டும் இதற்கு வழங்குதல் போதுமானது எனவும் அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பௌத்த சாசனத்தை பாதுகாக்க வேண்டியது நம் எல்லோரினதும் கடமை. எனவே அதற்கான முழுமையான ஒத்துழைப்பை அரசாங்கம் வழங்க வேண்டும் என அதில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதற்கு உடனடியான மாற்றத்தை உண்டுபண்ண ஆவன செய்யுமாறும், இது தூய பௌத்த தலைவனின் கடமை எனவும், தமது எதிர்பார்ப்புக்களையும் நம்பிக்கையையும் முறியடிக்க வேண்டாமெனவும் அம்மகஜர் மூலம் வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது. ■

### மட்டு. மாவட்டத்திலுள்ள

# சிறீலங்காப்படை அதிகாரிகள் மீது 22 மனித உரிமை மீறல் வழக்கு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சிறீலங்காப் படைகளின் ஒருங்கிணைப்பு அதிகாரிகள் மீது, "இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் மனித உரிமைகள் மையம்" அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பாக குற்றம் சாட்டியுள்ளது.

இந்த அமைப்பு, 22 சம்பவங்களில் படையினர் அடிப்படை மனித உரிமைகளை மீறியிருப்பதாக சுட்டிக்காட்டி மனுத்தாக்கல் செய்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் சார்பில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த 22 வழக்குகளில் 12 இல் எவ்வித காரணமுமின்றி ஒரு ஆண்டுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாங்கொக் ஆசிரிய சம்மேளன மாநாட்டில் தமிழர் தாயக கல்விப் புறக்கணிப்புக்கு கண்டனம்

## விடுதலைப்புலிகளுடன் பேசும்படி வற்புறுத்தல்

பாங்கொக்கில் நடைபெற்ற சர்வதேச ஆசிரியர் சங்க ஆசிய பிராந்திய மகாநாட்டில், சிறீலங்கா அரசாங்கம் தமிழர் தாயகத்தில் கல்வி உரிமையை மறுப்பதைக் கண்டித்தும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி பிரச்சினையை தீர்க்கும்படியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இம்மகாநாட்டில் 600க்கும் மேற்பட்ட சர்வதேச ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். அச்சமயம் இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் நீண்டதொரு அறிக்கையை வாசித்தது.

"வடக்கு கிழக்கு போரினால் பெருந்தோகையான ஆசிரியர்கள், மாணவர்கள் கொல்லப்பட்டுள்ளமை, பலர் ஊனமுற்றுள்ளமை, படுகாயம் அடைந்துள்ளமை, பாடசாலைகள் இராணுவ முகாம்களாக மாற்றப்பட்டுள்ளமை, மின்சார எரிபொருள் தடையினால் மாணவர்களின் பாதிப்புக்கள், கற்பித்தல் கருவிகள் பொருளாதாரத் தடைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதால் நிலவும் பிரச்சினைகள், போசாக்கின்மையால் மாணவர் எதிர்நோக்கும் சிக்கல்கள், இவற்றால் ஏற்படும் குறைப் பிரவசங்களினால் அக்குழந்தைகளின் கல்விக்கு ஏற்படும் பிரச்சினைகள் போன்றவை எடுத்துச் சொல்லப்பட்டன.

அத்துடன் மக்கள், அடிப்படை வசதிகளை சிறீலங்கா மறுத்த நிலையில் செல் -விமானக் குண்டு வீச்சுக்களால் கொல்லப்படலாம் என்ற அச்சத்துடன் வாழ்வதாகவும், இதனால் தமிழ் மாணவர்கள் கல்வியில் சமத்துமற்ற நிலைக்கு சிறீலங்கா அரசாங்கத்தால் தள்ளப்படுவதாகவும் எடுத்துரைக்கப்பட்டது.

இவற்றைத் தீர்க்க புலிகளுடன் பேச்சு வார்த்தைக்கு போகும்படி சிறீலங்காவை மகாநாடு கோரியுள்ளது. தமிழாசிரியர் சங்கம் கொண்டு வந்த இத்தீர்மானங்களை இலங்கை சுதந்திர ஆசிரியர் சங்கமும் மற்றும் அவுஸ்திரேலியா, கொரியா, பிஜி, ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர், இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஸ், நேபாளம், பிலிப்பைன்ஸ், நியூசிலாந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் ஆதரித்தமைக்கு தமிழாசிரியர் சங்கம் நன்றி கூறியுள்ளது. ■

# ஆலடிக் குளத்தில் நந்நீர் ஊற்று

யாழ் மாநகர சபையினர் குளங்களைத் தோண்டி ஆழமாக்கும் பணியில், யாழ் ஆலடிச்சந்திக்கு அருகாமையில் உள்ள வயலில் காணப்படும் குளம் ஒன்றைத் தோண்டிய போது, அதனுள் இருந்த பெரிய கல்லொன்றை அகற்றிய வேளை அதற்கடியில் இருந்து நந்நீர் ஊற்றுப்பெருக்கெடுத்து குளம் நிரம்பியது.

மேற்படி குளம் கோம்பையன் மணல் மயானத்திற்கு முன்பாகவுள்ள வயலில் அமைந்துள்ளது. இக்குளத்தை ஒரு அடி ஆழமாக்கிய போது, அங்கு தென்பட்ட பெரிய கற்களில் ஒன்றை கட்டி டிராக்டர் மூலம் இழுத்து எடுத்த போதே இவ்வூற்று சீறிப்பாய்ந்தது. மேற்படி ஊற்று வாயில் வந்த நீரை பருகிப் பார்த்த ஊழியர்கள், அந்நீர் மிகவும் நன்றாக இருந்ததை அவதானித்தனர். ஒரு அடி ஆழத்தில் அதுவும் நந்நீர் ஊற்று வெளிப்பட்டது ஒரு அதிசயமாகவே கருதப்படுகின்றது. ■

# அத்தியாவசியப் பொருட்களை களஞ்சியப் படுத்தவேண்டும்

## □யாழ். கூட்டுறவு சமாசம் தீர்மானம்

யாழ். மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருட்கள் நீண்ட காலத்திற்குரியதாக பெரியளவில் இல்லாத காரணத்தினால் இடையிடையே இப்பொருட்களுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது. இதனால் வர்த்தகர்கள் சில அத்தியாவசியப் பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர் என்று யாழ். கூட்டுறவு சங்கங்களின் சமாச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ். மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருட்கள் யாவும் குறைந்தது ஆறு மாதங்களுக்கு நுகர்வோரின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியளவிற்கு, களஞ்சிய அறைகளில் சேமித்து வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்ற போதிலும், சில பொருட்கள் மிகக்குறைந்தளவில் குறிப்பிட்ட காலத்திற்குப் போதுமான அளவிலேதான் உள்ளன.

இதனால் இப்பொருள்கள் திடீர் என்று முடிந்து போகின்றன. இதனால் இப்பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

சீனி போன்ற பொருள்களுக்கு இடையிடையே தட்டுப்பாடு நிலவுவது இதனாலேயே. சம்பந்தப்பட்டவர்கள் தட்டுப்பாடான பொருள்களை கூடிய அளவில் கொள்முதல் செய்து களஞ்சியப் படுத்துவதில் ஈடுபட வேண்டும் என்றும் அவ்வட்டாரங்கள் கேட்டுக்கொண்டன. ■

# நம்பிக்கை மோசடிக்கு அபராதம் விதிப்பு

## பருத்தித்துறை நீதிமன்று தீர்ப்பு

எண்ணாயிரம் ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டியை ஒருவரிடம் இருந்து வாங்கி நம்பிக்கைமோசடி செய்தவருக்கு, பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றம் குற்றப்பணமாக ஐயாயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

நம்பிக்கை மோசடிசெய்த பளை வண்ணாங்கேணியைச் சேர்ந்த மகாதேவன் தேவராசா என்பவரை, வல்வெட்டித்துறை காவல் துறையினர் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

பருத்தித்துறை தமிழீழ நீதிமன்ற நீதியாளர் பிரதீபா, அந்நபரிடம் மேற்படி குற்றப்பணத்தைச் செலுத்துமாறு உத்தரவிட்டார். ■

# விளையாட்டுத்துறையிலும் கவனம் செலுத்தவேண்டும் பிரதிக் கல்விப்பணிப்பாளர் கருத்து

"மாணவர்கள் கல்வியுடன் விளையாட்டுத்துறையிலும் முன்னணியில் திகழும் போதுதான், முழுமையான அறிவைப்பெற்று எதிர்காலத்தில் திடகாத்திரமான நாட்டிற்குகந்த சிறந்த பிரஜைகளாகத்திகழ முடியும். ஆகவே மாணவர்களின் விளையாட்டுத்துறை அபிவிருத்தியிலும் கூடிய கவனம் செலுத்த வேண்டியது முக்கியமாகும்".

இவ்வாறு. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மாதிரிகிராமமான அம்பன் ராஜன் நகரில் உள்ள, அம்பன் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் ஆரம்பப் பாடசாலையின் இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியிலே உரையாற்றிய வடமராச்சி கிழக்குப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. செல்வராசா குறிப்பிட்டார். பாடசாலை அதிபர் திரு. மு. சிறிஸ்கந்தராஜா தலைமையிலே நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டியிலே தொடர்ந்து உரையாற்றிய பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. செல்வராசா குறிப்பிட்டதாவது,

ராஜன் நகர் பாடசாலையில் உள்ள மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு கல்வித்திணைக்களம் வேண்டிய உதவிகளையும், வளங்களையும் வழங்கி வருகின்றது. புனர்வாழ்வுக்கழகமும் இக்கிராம மாணவர்களின் கல்வி அபிவிருத்திகளுக்கு வேண்டிய ஒத்துழைப்புக்களை சிறப்பாக வழங்கி வருகின்றது. எனவே இப்பகுதி மாணவர்கள் கல்வி அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்டுவரும் இந் நடவடிக்கைகளை முழுமையாகப் பயன்படுத்திக் கல்வியில் உயர்ந்து எதிர்காலத்தில் பூரணமான மனிதர்களாக திகழவேண்டும். மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். இவ்விளையாட்டுப் போட்டி மிகச் சிறப்பாக நடைபெற்றது மகிழ்ச்சிக்குரியதாகும்.

யாழ். இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி த. சிங்கராஜா தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ் மாவட்ட இணைப்பாளர், திரு.- ரவி, திருக்குடும்ப கன்னியர்மட அருட்சகோதரி வேட்டன் உட்பட இன்னும் பலர் உரையாற்றினர். விளையாட்டுக்களிலே வெற்றியீட்டிய வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டதையடுத்து விளையாட்டுச் செயலாளர் திரு. ஜெயம் சபாபதி நன்றியுரை நிகழ்த்தினார். ■

# புத்தூர் சிறுப்பிட்டி பகுதியில் கிராமிய பாசறை ஆரம்பம்

தமிழீழத் தாயகத்தை மீட்டெடுப்பதற்கு உதவிக்கரம் நீட்டும் பொருளாதாரப் போராட்டத்தினை வென்றெடுக்கும் நோக்கில் வறுமைச் சூழலில் சிக்கித் தவிக்கும் மக்களை இனம் கண்டு, அவர்களது அடிப்படைப் பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக சமூக, பொருளாதார, அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் முகமாக கிராமிய பாசறை நிகழ்வுகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தவகையில் இந் நிகழ்வு அண்மையில் வடமராட்சி இராஜ கிராமத்திலும், தென்மராட்சி கோயிலாக் கண்டி, மறவன் புலோ கிராமத்திலும் நடைபெற்றது. இச்செயற்பாட்டின் தொடர் நிகழ்வு வைகாசிமாதம் வலிகாமம் கோட்டத்தில் 20-ம் திகதி முதல் 25-ம் திகதி வரை புத்தூர் மேற்கு-வடக்கு, சிறுப்பிட்டி மேற்கு-கிழக்கு ஆகிய கிராமங்களை உள்ளடக்கி நடைபெற்றது. இதில் தமிழீழ கிராமிய மேம்பாட்டு நிறுவனம், கிராமிய மேம்பாட்டு தொடர்பான வேலைத் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது குறிப்பிடத்தக்கது. ■

# கமக்காரர் அடையாள அட்டை கொண்டுவர ஏற்பாடு

இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்த காலத்திலிருந்து தமிழீழத்திற்குக் கொண்டுவரப்படும் உள்ளீடுகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளன. இதனைக் கருத்தில்கொண்டு அனைத்து விவசாயிகளையும் விவசாயத்தில் ஈடுபடச்செய்வதற்காக, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் 'கமக்கார அறிமுக அட்டை' நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. தமிழீழத்திற்குக் கொண்டுவரப்படும் உள்ளீடுகள் சரியான முறையிலும், சமபங்கீட்டு அடிப்படையிலும் இக்கமக்கார அறிமுக அட்டைமூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

யாழ். மாவட்டத்தில் தற்போது அண்ணளவாக 40, 000 விவசாயிகள் உள்ளனர். இவர்கள் விவசாய உள்ளீடுகளை சிரமமின்றிப் பெற்று விவசாயத்தில் ஈடுபடச் செய்வதற்காகவே இவ்வட்டை அறிமுகப்படுத்தப்பட்டது. இது வரை காலமும் யாழ். மாவட்டத்தில் 25, 000 விவசாயிகளே அறிமுக அட்டைகளைப் பெற்றுள்ளார்கள். ஏனைய விவசாயிகளும் இவ் அட்டையை விரைவில் பெற்று உள்ளீடு வழங்கலில் ஏற்படும் சிரமத்தைத் தவிர்த்துக்கொள்ளுமாறு, தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக் கொள்கின்றது. ■

# இராணுவத்தின் தாக்குதலுக்கு மூன்று பொதுமக்கள் பலி

திருகோணமலை மாவட்டம் கட்டைபறிச்சான் பகுதியிலுள்ள கணேசபுரம் என்னும் இடத்தில், சிறீலங்கா இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூதூர் மணற்சேனையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கந்தவேல் கிருபா என்பவரும், அதே இடத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான சுந்தர் என்பவரும், ஈச்சிலம்பற்றையைச் சேர்ந்த 55 வயதான செல்லத்துரை என்பவரும் உயிரிழந்துள்ளனர். இச் சம்பவம் நண்பகல் பன்னிரண்டு மணிக்கு நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. ■

# யாழ் குடாநாட்டில் மலேரியா பெருமளவில் குறையவில்லை

யாழ் மாவட்டத்தில் மலேரியாவின் தாக்கம் தொடர்ந்து அதிகரித்த நிலையிலேயே இருப்பதாக, யாழ். பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பிரிவு வெளியிட்டுள்ள புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. சென்ற ஏப்ரல் மாதம் சுமார் 2922 பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதில் 407 பேர் மூளை மலேரியாவினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அப்புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. மார்ச் மாதத்தைவிட இது அதிகரிக்கப்படாத போதும் சில சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் ஒழுங்கான முறையில் மலேரியா தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளாமையினால் அப்பகுதியில் இந்நோயின் தாக்கம் கட்டுப்படுத்த முடியாத நிலையில் இருப்பதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாண சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 964 பேர் மலேரியாவினால் பாதிக்கப்பட்டதாகவும் இதில் 287 பேர் மூளை மலேரியாவினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் எனவும் தெரியவருகிறது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 1073 பேர் மலேரியா நோயாளர் என இனம் காணப்பட்டுள்ளதாகவும், இதில் அறுபத்து நான்கு பேர் மூளை மலேரியா நோயாளர் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரியவருகிறது.

இதேவேளை மலேரியாவின் தாக்கம் அதிகமாக காணப்படும் இடங்களில் இன்னும் மலத்தியோன் தெளிக்கப்படவில்லை என்றும், இது தொடர்பாக தொடர்ந்தும் சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகள் அசிரத்தை காட்டிவருவதாகவும் தெரியவருகிறது. ■

# கேட்டது 240 மில்லியன், கொடுத்தது 10 மில்லியன் ஆனால் வெளிநாட்டில் பெற்றதோ 500 மில்லியன்

## சிறீலங்காவின் நிதி மோசடி அம்பலம்

சிறீலங்கா அர்சாங்கம் வெளிநாட்டு அரசாங்கங்களிடம் வடக்கு கிழக்கின் அபிவிருத்திப் புனரமைப்புக்கு என, 500 மில்லியன் அமெரிக்க டாலர்களை உதவியாகப் பெற்றுக் கொண்டுள்ளது.

அதேவேளை கிழக்கில் இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள பகுதிகளில் புனரமைப்புக்கு என 240 மில்லியன் டொலரை வழங்கும்படி கேட்டதற்கு, 10 மில்லியன் டொலரை மட்டுமே வழங்கியுள்ளதாக சிறீலங்காப் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு புனரமைப்பு என்ற போர்வையில் வெளிநாட்டு உதவிகளைப் பெறும் சிறீலங்கா அரசாங்கம், அதற்காகப் பயன்படுத்தாது ஆயுத நோக்குகளுக்காகப் பயன்படுத்துவதை தகவல்கள் மேலும் மேலும் உறுதி செய்கின்றன. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறிமாவோவின் குறி ஜனாதிபதிப் பதவி: இதில் விட்டுக்கொடுப்பிற்கு இடமில்லை

சுதந்திரக் கட்சியின் செயற்குழுக்கூட்டம் கடந்த மே மாத இறுதியில் டாலி வீதியிலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றது. கட்சியின் தலைவியாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் பொதுச்செயலாளராக தர்மசிறி சேனநாயக்காவும் தெரிவு செய்யப்பட்டதுடன், பிரதித் தலைவியாக திருமதி குமாரணதுங்காவும், உதவிப் பொதுச்செயலாளராக எஸ். பீ. திசநாயக்காவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இக்கூட்டத்தில் பல குத்து வெட்டுக்கள் இடம்பெறலாமென எதிர்பார்க்கப்பட்டபோதும், அத்தகைய நிலைமை எதற்கும் இடமளிக்காத வகையில், கட்சியின் மத்திய கமிட்டி மிக சமயோசிதமாகவே நடந்துகொண்டது எனக் கூறப்படுவது மிகையானதொன்றல்ல.



திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கா

வருடா வருடம் நடைபெறவேண்டிய இச்செயற்குழு கூட்டமானது, கட்சியில் தோன்றிய பதவிப் போட்டிகளின் காரணமாகவே கடந்த சுமார் எட்டு வருடங்களுக்கும் மேலாக கூட்டப்படவில்லை. கட்சியின் உறுப்பினர்கள் பலர் கட்சியில் உண்மையான ஜனநாயகம் இல்லை என்றும் பகிரங்கமாகவே விமர்சனம் செய்து வந்தனர். அந்த நிலை ஓரளவுக்குத் தணிந்திருக்கிறது என்பதையே இப்போது நடத்தப்பட்டுள்ள கட்சியின் செயற்குழுக் கூட்டம் எடுத்துக் காட்டுகின்றது.

### ஆட்சியை பிளவுபடுத்தும் சதி

ஆயினும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தொடர்ந்து 35 வருடங்களுக்கு மேலாக வகித்துவரும் கட்சித் தலைவி பதவிக்கு, இம்முறை ஒருவிதத்தில் அச்சுறுத்தல் இருந்தது. மேல் மாகாண உறுப்பினர்கள் சிலர், திருமதி சந்திரிகா குமாரணதுங்காவை கட்சியின் தலைவராகவும் ஜனாதிபதி வேட்பாளராகவும் கொண்டுவரவேண்டும் என்ற எண்ணத்தில் கையெழுத்து வேட்டையில் இறங்கினர். கையெழுத்துக்கள் அடங்கிய மகஜர் ஒன்றை செயற்குழுக் கூட்டத்திலேயே கொண்டு வருவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இதனைத் தெரிந்துகொண்ட திருமதி சிறிமாவோ, கட்சியின் பொதுச்செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா மூலம் அறிக்கை ஒன்றை வெளியிட வைத்தார். கட்சியின் ஒற்றுமையை விரும்பாத சில சதிகார சக்திகளும் ஐ. தே. கவும் இணைந்து சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்தி சிதைத்துச் சின்னாபின்னமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அந்த அறிக்கையில் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார். அத்துடன் இச்சதிச் செயலுக்கு கட்சி ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை எனவும், திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தொடர்ந்தும் கட்சியின் தலைவியாக நீடிப்பார் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த அறிக்கை வெளியாகிய பின்னர், தாயாரின் அறிவுறுத்தலின் பேரில் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தாயாரின் அடிச்சுவட்டைத் தானும் பின்பற்றப் போவதாகவும், இதில் எந்த வேறுபாடும் இருக்கப் போவதில்லை எனவும், தாயாரான திருமதி சிறிமாவோ தலைமைப் பதவிக்கு பொருத்தமானவர் எனவும் அறிக்கை வெளியிட்டார்.

இதேவேளை கொட்டிகாவத்த பிரதேச சபையில் தென் மாகாணசபைத் தேர்தல் வெற்றிக்காக பொதுசன ஐக்கிய முன்னணிக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டது. இத்தீர்மானத்தில் திருமதி சந்திரிகாவின் பெயரும், அமரசிறி தொடங்கொடவின் பெயரும் மட்டுமே இடம்பெற்றிருந்தது. ஆனால் இத்தீர்மானத்தில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைப் பற்றி ஒரு வார்த்தையேனும் குறிப்பிடவில்லை. தேர்தல் வெற்றிக்கு வழிகாட்டியவர்கள் சந்திரிகாவும் தொடங்கொடவும் மட்டுமே என்றால், திருமதி சிறிமாவோவின் நிலை என்ன என்பது பல உறுப்பினர்கள் மத்தியில் கேள்வியாகியது.

இது தொடர்பாக ஒருவித கருத்து மாயை நிலவியது. சிறிமாவோ தூக்கி எறியப்பட்டுவிடுவாரா என்ற சந்தேகத்தைக் கூட கட்சியின் மட்டங்களில் ஏற்படுத்தியிருந்தது. இந்தச் சந்தேகத்தை கொட்டிகாவத்தை முல்லேரியாப் பிரதேசசபை உறுப்பினரான சுகத் ஏவாவிதாரண பகிரங்கமாகவே குரல் எழுப்பியிருந்தார். இதன் காரணமாக இத்தீர்மானத்தை தான் ஆதரிக்கப் போவதில்லை எனவும் அவர் வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார்.

சுதந்திரக் கட்சியில் தனது தலைமைப் பதவிக்கு ஆபத்து ஏற்படுமே என்ற அச்சத்தினாலேயே சிறிமாவோ பண்டாரநாயக்கா கடந்த எட்டு வருடங்களுக்கும் மேலாக கட்சியின் செயற்குழுக் கூட்டம் கூட்டப்படுவதை ஒத்திவைத்து வந்தார். அனுராவின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து நிலைமை ஓரளவுக்குத் தணிந்து காணப்பட்டது. ஆனால் தற்போது அது வேறு ருபத்தில் விஸ்வருபம் எடுத்து வருவது தெளிவு. இந்த நிலையில்தான் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக சிறிமாவோ பண்டாரநாயக்கா மீண்டும் தெரிவுசெய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### சிறிமாவோவின் ஆசை

சிறீலங்காவின் ஜனாதிபதி ஆசனத்தில் ஒரு நாளேனும் அமரவேண்டும் என்பதுவே சிறிமாவோவின் நீண்டநாள் ஆசையாகும். இந்த இலக்குடனேயே அவர் இப்போதும் செயற்பட்டு வருகின்றார் என்பதை மிகவும் தெளிவாக உணரமுடிகின்றது.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியைக் கொண்ட இன்றைய அரசியலமைப்பை எதிர்ப்பதாகவும், மீண்டும் பாராளுமன்றத்திற்கு அதிகாரத்தைக் கொண்டுவரும் ஒரு புதிய அரசியலமைப்பை ஏற்படுத்த தான் முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்து வருகின்றார். இந்த நிலையில் அவர் ஏன் ஜனாதிபதிப் பதவிக்கு வரவிரும்புகின்றார் என்ற கேள்வி எழும்பக்கூடியதே.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டால், இளைய தலைமுறையின் வாக்குகள் எதிர்பார்க்கப்படுவதுபோல் அவருக்குக் கிடைக்குமா என்றும் கேள்வி எழுப்பப்படுகிறது. 1971 ஆம் ஆண்டில் ஜே. வி. பியினரின் கிளர்ச்சி ஏற்பட்டபோது

**விமலராஜன்**

இளைஞர்களை வகைதொகையின்றிக் கொலை செய்து சிறிமாவோ அடக்கியதே இந்தக் கேள்வி எழுப்பப்படுவதற்கான அடிப்படையாகும். இதன் காரணமாக இளைய தலைமுறையின் குறிப்பாக சிங்கள இளம் தலைமுறையின் வெறுப்பு சிறிமாவோவிற்கு எதிராக இருக்கும் எனவும், இது வாக்குகளைக் கவருவதில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் தமிழ் இனத்திற்கு எதிரான கல்வி, தொழில் வாய்ப்புக்களில் தரப்படுத்தல் முறையைக்கொண்டு வந்ததன் மூலம் தமிழ் மக்களின் எதிர்ப்பும் இவருக்கு இருப்பதும், சிறிமா - சாத்திரி உடன்படிக்கை மூலம் மலையக மக்களை வெளியேற்றியதும், அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு



திருமதி.சந்திரிகா குமாரணதுங்கா

ஏற்பட எழுந்த கியூ யுகம் பற்றிய அம்சங்களும், சிறிமாவோ ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக நிற்கும்போது மேலெழும்பும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதுபோன்ற அம்சங்களால் வாக்குகளை வெல்வது கணிசமான கடினமாக இருக்கும் என்றும், தேர்தலின் இறுதி முடிவுகள் வெளியிடப்படும் வரை வெற்றியை உறுதி செய்வது கடினமாகவே இருக்கும் எனவும் கூறப்படுகின்றது.

ஆனால் சந்திரிகா குமாரணதுங்கா போட்டியிட்டால், இந்த அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பு கிடைக்கும். இதன் மூலமாக இவரது வெற்றி தேர்தலுக்கு முன்னரே பெரும்பாலும் உறுதிசெய்யப்பட்டுவிடும் எனவும் திருமதி சந்திரிகா ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகினால், மாற்றத்தை விரும்பும் அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பு கிடைப்பது சந்தேகத்திற்கு இடமற்றது எனவும் இவ் அவதானிகள் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

### சுதந்திரக் கட்சியில் தலைமைப் போட்டி

சுதந்திரக் கட்சியில் தலைமைப் போட்டி தீவிரம் அடைவது இதுதான் முதல் தடவையல்ல. பண்டாரநாயக்காவின் மறைவைத் தொடர்ந்து 1959 ஆம் ஆண்டில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது தலைமைப் பதவியைப் பெறுவதில் போட்டி ஏற்பட்டது. சுதந்திரக்கட்சி பிக்கு பெரமுனவின் தலைவராக விளங்கிய களனிய ரஜமகா விகாராதிபதி விமல விஜயவர்த்தன தேரோ, கன்னங்கரா, சம்பி குணவர்த்தனா, தகநாயக்கா போன்றோருக்கு இடையே கடுமையான மோதல் நடைபெற்றது. இந்த நிலையில் செயற்குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. நீண்ட சமாதான முயற்சிகளின் பின்னர் செயற்குழு கூட்டப்பட்டு தகநாயக்கா தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதன் பின்னர் 1961 ஆம் ஆண்டில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்திலே சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவிக்கு தகநாயக்காவிற்கும் சிறிமாவோவிற்கும் இடையே போட்டி ஏற்பட்டது. எனினும் பண்டாரநாயக்காவின் மறைவினால் ஏற்பட்டிருந்த அனுதாப அலையின் காரணமாக, திருமதி சிறிமாவோ தலைவராகத் தெரிவானார். இதன் பின்னர் சுதந்திரக் கட்சியின் பதவியில் திருமதி சிறிமாவோ நீடித்து வருகின்றார்.

எனினும் தலைமைப் பதவிக்கான போட்டிகள் காணப்பட்டால், அதனை வெற்றிகரமாக முறியடித்தும், தன்னையும் மீறி செயற்படுவோரை கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதாகக் குற்றம் சுமத்தி வெளியேற்றியும், திருமதி சிறிமாவோ தமது நிலையை உறுதிப்படுத்திக்கொள்ளத் தவறவில்லை.

குடியுரிமை பறிக்கப்பட்டிருந்த நிலையிலும், கட்சி மிகவும் பலவீனப்பட்டிருந்த வேளையிலும்கூட கட்சியில் தனது தலைமைத்துவத்தை தக்க வைத்துக்கொள்வதில் திருமதி சிறிமாவோ கணிசமான வெற்றியையே பெற்றிருந்தார். 1982 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிய சமயத்தில் சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக கெக்டர் கொப்பேக்கடுவ நிறுத்தப்பட்டபோதும், கட்சியின் மூத்த உறுப்பினர்களான ரி. பி. இலங்கரத்னா, கே. பி. ரத்நாயக்கா போன்றோர் ஒரம்கட்டப்பட்டனர். இந்தத் தேர்தல் பிரச்சாரத்தின்போது தனது சொந்தத் தோட்டத்தையே விற்று கட்சியின் வெற்றிக்காகப் பாடுபட்ட விஜயகுமாரணதுங்கா, கட்சியில் தனக்கென ஒரு இடத்தைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இருந்தவேளையில் அவர் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார். அனுராவுக்கும் இதேபோன்ற நிலைதான் அண்மையில் ஏற்பட்டது.

அனுரா பண்டாரநாயக்காவும், அவரது ஆதரவாளர்களும், அவருக்கு நெருக்கமான உறவு உடையவர்கள் எனக் கருதப்படுபவர்களும் சுதந்திரக் கட்சியின் இளைஞர் பிரிவு, மகளிர் பிரிவு, பிக்கு பெரமுன போன்ற அமைப்புக்களின் முக்கிய பதவிகளுக்கு தெரிவு செய்யப்பட்டதும் தனது தலைமைப் பதவிக்கு ஆபத்து ஏற்படும் அச்சத்தை உணர்ந்து கொண்ட சிறிமாவோ அவரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தார்.



அனுரா பண்டாரநாயக்கா

இதேவேளை அனுரா பண்டாரநாயக்கா தனக்கென ஒரு அணியை சுதந்திரக் கட்சிக்குள் உருவாக்கிக் கொண்டதும், அதற்கு முழு ஒத்துழைப்பையும் முன்னாள் சிங்கள மகாஜன பெரமுன என அழைக்கப்பட்ட கெல உறுமய அணியினர் இதற்குப் பின்னணியிலிருந்து ஒத்துழைப்பு வழங்கினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருமதி சந்திரிகா குமாரணதுங்காவின் வருகையைத் தொடர்ந்து, அனுரா பண்டாரநாயக்கா மீது கட்சி நடவடிக்கையை மேற்கொண்டது. திருமதி சந்திரிகாவின் வருகை, சுதந்திரக் கட்சியில் அனுராவைச் 'செல்லாக் காசாக்கியது'. சு. கட்சியின் தற்போதைய 67 பாராளுமன்ற உறுப்பினர்களில் 42 பேரின் ஆதரவு தனக்கு இருப்பதாக அனுரா அடிக்கடி கூறிக்கொண்ட போதும், அவரின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து அவர்கள் அனைவரும் 'பெட்டிப் பாம்பாக' அடங்கிப் போயினர் என்றே கருதப்படுகிறது.

அனுராவின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து கட்சியின் பிரதான பதவிகளை இறுகப் பிடித்துக் கொண்டு ஒரு அணிக்குத் தலைமை தாங்கும் தளபதியைப் போன்று கட்சியை புதிய பாதையில் வீறு நடை போட்டு நடக்கத் தொடங்கினார் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா. அது கட்சியின் ஒருசாரார் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியிருந்தபோதும் மாகாணசபைத் தேர்தல் வெற்றிகளும், திருமதி சந்திரிகாவின் பின் அணிதிரண்ட மக்களும் அதனை வெளிக்காட்டும் சந்தர்ப்பத்தை வழங்கவில்லை.

திருமதி சந்திரிகா சிறீலங்கா மக்கள் கட்சி, ஐக்கிய சோசலிச முன்னணி, பி. என். பி. ஆகிய கட்சிகளைச் சிதைத்து சின்னாபின்னமாக்கியவர் என்றும், நான்காவதாக சுதந்திரக் கட்சிக்கும் இதே நிலையைத் தான் அவர் ஏற்படுத்துவார் என்றும் பகிரங்கமாகவே தெரிவித்தவர்கள்கூட மௌனத்தையே கடைப்பிடிக்க வேண்டியதாகியது.

திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தனது தந்தையாரின் அடிச்சுவட்டையும், விஜயகுமாரணதுங்காவின் செயலாற்றலையும், இடது சாரிகளின் ஆதரவையும் ஈர்த்து தீவிரமாக முன்னேறுவார் என்றே சாதாரணமாக பலரும் நம்பிக்கைகொண்டுள்ளனர். இந்த நிலை அவருக்கு அசைக்க முடியாத ஒரு

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 'விடிவெள்ளி' நிறுவனம்

## உழைக்கும் பெண்களின் நம்பிக்கை ஒளி

பெண்களின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்குமான வேலைத்திட்டங்கள் பலவற்றில் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு ஈடுபட்டுள்ளது. அவற்றுள் ஒன்றுதான் கோப்பாயில் அமைந்துள்ள 'விடிவெள்ளி' நிறுவனம். இந்நிறுவனத்தின் சிறப்பம்சம் என்னவென்றால், இங்கு பெண்கள் மட்டுமே எல்லா வேலைகளிலும் ஈடுபடுகின்றமையாகும். இந்நிறுவனத்தைப் பற்றி விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ரதி அவர்களிடம் கேட்டபோது;

"ஆரம்பத்தில் நாம் இதை இலாபநோக்கம் கருதி ஆரம்பிக்கவில்லை. குற்றங்களில் ஈடுபட்ட தண்டனைக்குரிய பெண்கள் வேலைசெய்த பண்ணையாகத்தான் இருந்தது. நாளடைவில், இங்கு பல பெண்களை உற்பத்தியில் ஈடுபடுத்தி, நிறுவனமாக்கினால், அதன்மூலம் பல பெண்களுக்குத் தொழில்வாய்ப்பு வழங்கலாமே என்று ஒரு எண்ணம் எங்களுக்குத் தோன்றியது. அந்த எண்ணத்தை உடனேயே செயல்வடிவமாக்கிவிட்டோம். ஐந்து பெண்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் இன்று முப்பத்தைந்து பெண்களுடன் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

மூலையில் முடங்கிக் கிடந்த பல பெண்கள் இங்கே வெளிச்சத்துக்கு வந்திருக்கின்றார்கள். ஆண்கள் மட்டுமே செய்துவந்த சில வேலைகளை இன்று இவர்களும் செய்கின்றார்கள். சரக்கு உந்துருளியில் (லொறி) போய் உமிமூடைகளைத் தாமே ஏற்றி இறக்குகின்றார்கள்.

விடிவெள்ளி நிறுவனம் பெண்களுக்கான வேலைவாய்ப்பு நிறுவனம் என்ற தனித்துவத்துடன் தொடர்ந்து இயங்கவேண்டும்; குறைந்தது நூறு பெண்களுக்காவது வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும் என்பதே எமது நோக்கம்" என்றார் அவர்.

இந்நிறுவனத்தின் ஆரம்பத்தில் தோட்டவேலைகள் மட்டுமே செய்தார்கள். பின்னர் கோழிவளர்ப்பு, ஆடுவளர்ப்பு, பற்பொடி தயாரித்தல் என்று வேலைகள் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளன. இவற்றைவிட கோப்பித்தூள், மஞ்சள்தூள், இறைச்சிக்கூட்டு, சாம்பிராணி, ஏலம், விபூதி, குரக்கன்மா, அரிசிமா, மிளகாய்த்தூள், பப்படம் போன்ற பொருட்களையும் தயாரிப்பதுடன், தேனைப் போத்தலில் அடைத்தல், வேப்பெண்ணையைப் போத்தலில் அடைத்தல் போன்ற வேலைகளும் நடைபெறுகின்றன.

இந்நிறுவனத்தின் விற்பனை நிலையம் ஒன்று திருநெல்வேலியில் திறக்கப்பட்டிருக்கின்றது. அங்கிருந்துதான் வாடிக்கையாளர்களும், விற்பனையாளர்களும் பொருட்களைக் கொள்வனவு செய்கின்றார்கள்.

இந்நிறுவனத்தில் வேலைசெய்யும் பெண்களின் செயற்பாட்டுத் திறன்பற்றி விடிவெள்ளி நிறுவன இயக்குனர் குயிலினி அவர்களுடன் கதைத்தபோது;

"இங்கு வேலைசெய்யும் எல்லாப் பெண்களுக்கும் இங்கு நடக்கும் எல்லா வேலைகளையுமே பழக்கியிருக்கின்றோம். ஏனென்றால் எல்லோருக்கும் எல்லாம் தெரிந்திருக்க வேண்டும் என்று நாம் நினைக்கின்றோம். அப்போதுதான் நாளைக்கு அவர்கள் தனியாகப் போனாலும் தமது சொந்தக் காலிலேயே நிற்பார்கள். ஆரம்பத்தில் அவர்கள் இருந்த நிலையோடு ஒப்பிடும்போது இப்போது மிகவும் முன்னேறியிருக்கின்றார்கள். நாளை இவர்களால் தனியாகவே ஒரு நிர்வாகத்தை நடாத்தமுடியும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது" என்றார்.

வேலைக்கு ஒவ்வொருநாளும் வந்துபோக வசதி இல்லாதவர்களுக்கு, நிறுவனத்திலேயே தங்கிநிற்கும் வசதி கொடுக்கப்பட்டுள்ளது. கல்வியறிவு குறைந்த பெண்களுக்கு இங்கே விடுமுறை நாட்களில் கல்வி அளிக்கப்படுகின்றது. ஒரு காலத்தில் எந்த உழைப்பிலுமே ஈடுபடும் எண்ணமின்றி இருந்தவர்கள், இன்று தமது பிரகாசமான எதிர்காலத்திற்காகக் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இங்கு வேலைசெய்யும் பெண் ஒருவருடன் கதைத்தபோது, "இங்கே வேலைசெய்வதால் வருமானமும் கிடைக்கின்றது. நல்ல பொழுதுபோக்காகவும் இருக்கின்றது. வீட்டில் இருக்கும்போது, பக்கத்தில் இருக்கும் கடைக்குக்கூடப் போகமுடியாது.

'தம்பி இருக்கின்றான்தானே. தம்பி போகட்டும் கடைக்கு. நீ போகவேண்டாம்'

என்று சொல்வார்கள். எதற்கெடுத்தாலும் 'நீ பெண்பிள்ளை, பெண்பிள்ளை' என்று சொல்லித் தடுப்பார்கள்" என்றார்.

'ஏன் பெண்கள் கடைக்குப் போகக்கூடாது? ஏன் தம்பி வாங்கும் பொருட்களை என்னால் கடையில் வாங்கமுடியாது'? என்று நான் யோசிப்பதுண்டு.

ஆனால் நான் இங்கே வந்த புதிதில் இங்கிருந்த பெண்கள் செய்த வேலையைப் பார்க்க,

'ஆண்கள் செய்யும் வேலைகளையெல்லாம் எப்படி இவர்கள் செய்கின்றார்கள்'?

என்று யோசனையாக இருந்தது.

"ஆனால் நினைத்தால் பெண்களால் எதையுமே சாதிக்கமுடியும் என்ற நம்பிக்கையுடன் நாம்



'விடிவெள்ளி' நிறுவனத்தில் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் பெண்கள்

எமக்குப் பொறுப்பாக இருந்த பெண் போராளியால் வளர்க்கப்பட்டோம். ஆரம்பத்தில் கடினம் போல் தோன்றிய வேலைகளெல்லாம் இப்போது துரும்பு போலாகிவிட்டன".

"இங்கே வேலைசெய்வதால் எமக்குப் பல நன்மைகள் கிடைக்கின்றன. எமக்குத் தேவையான பொருட்களை நாமே வாங்குகின்றோம். வீட்டுச் செலவுக்குப் பணம் கொடுக்கின்றோம். இதனால் குடும்பத்தினரும் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள். நாங்களும் மகிழ்ச்சியாக இருக்கின்றோம். எங்கும் போய் வரமுடிகிறது. எந்தப் பயமுமே இல்லாமல், என் காலில் நான் நிற்பேன் என்ற நம்பிக்கை எம்மிடம் இருக்கின்றது".

என்று அவர் மேலும் எம்மிடம் சொன்னார்.

இன்னொருவருடன் உரையாடிக் கொண்டிருந்தபோது.

"வீட்டில் இருக்கும்போது பப்படத்தைச் சாப்பிடமட்டுமே தெரியும். இங்கே வந்துதான் அதை எப்படிச் செய்வது என்று தெரிந்துகொண்டேன். முன்பு யாழ்ப்பாணம் என்றால், யாழ். நகர்ப் பகுதியை மட்டும்தான் தெரியும். இப்போது யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு மூலையும் தெரியும். வீட்டில் இருந்தபோது, சிறைக்கைதி போலத்தான் வாழ்ந்தோம். இப்போது சுதந்திரமாக வாழுகின்றோம். எங்களின் இந்த முன்னேற்றத்திற்கு 'விடிவெள்ளி' நிறுவனம்தான் காரணம்" என்று கூறினார்.

"நாங்கள் எல்லோரும் சரக்கு உந்துருளியில் போய் உமி எல்லாம் ஏற்றிவருகின்றோம். ஆண்களுக்குக் கொடுக்கப்படுவது போன்றே, எமக்கும் சம்பளம் தருகின்றார்கள். சில நாட்களில் திடீர் என்று கூடுதலான கேள்வி வந்தால், இரவிரவாகக்கூட வேலை செய்வோம். எமக்குத் தெரியாத எவ்வளவோ விடயங்களை நாம் இங்கு வந்தபின்தான் தெரிந்துகொண்டோம். எங்களெல்லோரினதும் கூட்டு முயற்சியால் இந்நிறுவனம் மேலும் முன்னேறிவருகின்றது. 'விடிவெள்ளி' என்றொரு நிறுவனம் இருக்கின்றது என்று எல்லோருக்கும் தெரியவேண்டும்; பல பெண்கள் இந்நிறுவனத்தடன் இணைந்துகொண்டு முன்னேறவேண்டும் என்பதே எமது நோக்கம்". என்று இன்னொரு பெண் கூறினார்.

இருள்தான் வாழ்வு என்று எண்ணி இருளிலேயே வாழ்ந்தவர்கள் வெளிச்சத்துக்கு வந்ததும், இருளிலிருக்கும் ஏனையவர்களையும் வெளிச்சத்துக்கு அழைத்துவரவே விரும்புவார்கள்.

இந்தப் பெண்களும் அத்தகையவர்கள்தான். வீட்டுக்கு வெளியே வந்து, இந்த நிறுவனத்தில் இணைந்து உழைப்பதன் மூலம் இவர்கள் சமூகத்தின் சில தடைகளை உடைத்து விட்டார்கள். நாமும் அதைத்தான் எதிர்பார்க்கின்றோம். வீட்டிலிருக்கும் பெண்கள் வெளியே வரவேண்டும் என்பதற்காகவே நாம், 'விடிவெள்ளி' நிறுவனம் போன்று வேலைத்திட்டங்களை முன்வைத்திருக்கின்றோம். இவற்றில் தம்மை ஈடுபடுத்துவதன் மூலம் தமது வாழ்வு நிலையை உயர்த்துவதற்குப் பெண்கள் முன்வரவேண்டும். ■

**கீத்தா**

நன்றி:'சுதந்திரப் பறவைகள்'

"எமது சமூகத்தில் சனத்தொகையில் பெரும்பான்மை இடத்தைவகிக்கும் பெண்கள், தொடர்ந்தும் அடிமைத்தனத்தில் வாழ்ந்துவந்தால் எமது விடுதலைப் போராட்டத்தை ஒரு தேசியப் போராட்டமாக முன்னெடுப்பது கடினம். இதனை உணர்ந்துதான் எமது இயக்கம் பெண் விடுதலையை முதன்மைப்படுத்தியது. பெண்களை அரசியல்மயப்படுத்தி போராட்டத்துக்கு அவர்களை அணிதிரட்டியது. இவ்வகையில் நாம் தமிழீழப் பெண் சமூகம் மத்தியில் ஒரு பெரிய புரட்சியை நிகழ்த்தியிருக்கின்றோம். தமிழர் வரலாற்றிலேயே நடைபெறாத புரட்சி ஒன்று தமிழீழத்தில் நடைபெற்றிருக்கிறது".

■ தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள்

# உணவு விடுதி முகாமைத்துவ கற்கைநெறிகள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், யாழ். பல்கலைக்கழக புறநிலை படிப்புக்கள் அலகினரும் இணைந்து; உணவு விடுதிகளுக்கான முகாமைத்துவமும், பொதுச்சுகாதாரமும் என்ற கற்கைநெறியை ஆரம்பித்துள்ளனர்.


உணவு விடுதிகளை திறம்பட நடாத்துவதற்குத் தேவையான உள்ளீடுகளைப் பெற்றுக்கொள்ள முடியாத இச் சூழ்நிலையில், உள்ளூரில் கிடைக்கக் கூடிய மூலப்பொருட்களைக் கொண்டு பாவனையாளர்களைத் திருப்திப்படுத்தவும், பொதுச்சுகாதாரத்தைப் பேணவும், முதலீட்டாளர்கள் நன்மை பெறக்கூடிய வகையிலும் இக்கற்கை அமைந்துள்ளது.

இக்கற்கைநெறி சம்மந்தமாக யாழ், நல்லூர் வர்த்தகச்சங்கத்திற்கு உட்பட்ட உணவுச்சாலை உரிமையாளர்களுக்கும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினருக்குமிடையே இடம்பெற்ற கலந்துரையாடலில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இக் கற்கைநெறியில் சகல உணவுச்சாலை உரிமையாளர்களும் அல்லது அவர்களின் பிரதிநிதிகள், கட்டாயமாகக் கலந்து கொள்ள வேண்டும்.

இக்கற்கைநெறியில் வழங்கப்படும் சான்றிதழை உணவுச்சாலைகளில் பார்வைக்கு வைக்க வேண்டும். சுகாதாரப்பகுதியினர் சோதனைக்குட்படுத்தும் போது அதனைக் காண்பித்தல் வேண்டும்.

கற்கைநெறியில் வழங்கப்படும் ஆலோசனைக்கு அமைவாக உணவுச்சாலைகள் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சொத்தி உபாலி யார்?

# ஐ.தே.கவின் சட்டபூர்வமற்ற கொலைப்படையா? கிரிமினல்களின் பாதாள உலக மன்னனா?

அதிகாரப் போட்டியில் வெற்றிவாகை சூடுவதற்காக, குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுப்பது சரியா என்ற கேள்வியே, கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் இருக்கும் கோப்பிக் கடைகள், மற்றும் மக்கள் சந்திக்கும் மையங்களில் மட்டுமன்றி, அதிகார பீடத்தின் சந்து பொந்துகளிலும் அண்மைக் காலங்களில் விவாதிக்கப்பட்ட முக்கிய விடயமாக இருந்தது. ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களின் பிடியிலிருந்து கட்சியைக் காப்பாற்ற வேண்டும் என்றும், குற்றச் செயல்களில் ஈடுபடும் காடையர்களின் அரசியலில் இருந்து கட்சி விடுபட வேண்டும் என்றும், பொதுவான கருத்து இப்போது காணப்படுகிறது என்று மேலும் கூறப்படுகிறது.

டி. பி. விஜேதுங்கா அரசு பாதாள உலக மன்னர்கள் மீது, திடீரெனக் கவனம் செலுத்தத் தொடங்கியது ஏன்? நீண்டகாலமாக அபயம் அளித்து வந்த அரசியல்வாதிகள், தற்போது குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களைக் கைவிட்டிருப்பது அல்லது காட்டிக் கொடுத்திருப்பது ஏன்? இந்த நபர்கள் உண்மையிலேயே குற்றவாளிகளா? அல்லது ஆளும் கட்சி முக்கியத்தர்கள் சுட்டிக்காட்டும் இலக்குகளை நிறைவேற்றும் நாயகர்களா? இந்தக் கேள்விகளுக்கான விடைகள் இன்று மூடிமறைக்கப்பட, உண்மைகள் இப்போது அம்பலத்துக்கு வந்துகொண்டிருக்கின்றன. இந்தவகையில் சொத்தி உபாலியின் விவகாரம் ஒருவகை மாதிரி மட்டுமே.

### யார் இந்த சொத்தி உபாலி?

கொழும்பு நகரின் நாரகேன்பிட்டிய பகுதியிலுள்ள அறுபதாவது தோட்டத்தின் சேரிப்பகுதியில் வாழ்ந்து வந்தவன் டொன்ரஞ்சித் உபாலி. சிறுவயது முதலே கசிப்புக் காய்ச்சுதல், சட்ட விரோத கடத்தல்கள், போதைப் பொருட்களின் வியாபாரம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தவன். போதைப் பொருட்களைப் பயன்படுத்தும் பழக்கமுடையவன், வீட்டுக்கு வெளியே உலர விடப்படும் சாதாரண உடுப்புக்களைக் கூட திருடி விற்று, தனக்குத் தேவையான போதைப் பொருள் கொள்வனவுக்குப் பணம் தேடிக் கொள்ளும் சுபாவம் உடையவன்.

ஒருமுறை தான் வசித்து வந்த அறுபதாவது தோட்ட உரிமையாளரின் மேலாடையைத் திருடும்போது கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு, இரும்புக் கம்பியினால் தாக்கப்பட்டபோது இவனது கை ஒன்று முறிந்தது. இந்தச் சம்பவத்துக்குப் பின்னர் டொன் ரஞ்சித் உபாலி 'சொத்தி உபாலி' என்று அழைக்கப்படலானான். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து தோட்டப் பக்கம் தலைகாட்ட முடியாத உபாலி வீதிகளில் அலைந்து திரிந்தான்.

இவனது இந்த நிலையைக் கேள்வியுற்ற, அப்போது அமைச்சராக இருந்த பிரபல அரசியல்வாதி ஒருவர், தனது நாரகேன்பிட்டி வீட்டுக்கு அருகேயுள்ள தொடர்மாடியொன்றில் ஒரு வீட்டை உபாலிக்கு ஒதுக்கிக் கொடுத்தார். எந்தப் பொலிசார் உபாலிக்கு வலைவீசித் தேடினரோ, அவர்களே பாதுகாப்பு வழங்க வேண்டிய நிலை அன்று முதல் ஏற்பட்டது. சட்டபூர்வமற்ற வகையில் ஆனால், சட்ட அமுலாக்கல் அதிகாரிகளால் கட்டுப்படுத்த முடியாத ஒரு நிலையில் நின்று, சட்டவிரோதமான வியாபாரங்கள், கள்ளக் கடத்தல்கள், கொலை என்பவற்றை மிகவும் பகிரங்கமாகவே செய்யக்கூடிய நிலை உபாலிக்கு வாய்த்திருந்தது.

தனக்கென ஒரு குழுவை அமைத்தான். தன்னை எதிர்ப்பவர்களையும், தனது தொழில்களுக்குப் போட்டியாக வருபவர்களையும், பட்டப்பகலில் கூட பலர் முன்னிலையிலும் கொலை செய்தான். தனக்கு எதிராகத் தகவல் கொடுப்பவர்களைப் பொலிசார் மூலமே தாக்க வைத்தான். புகார் எழுதும்படி அல்லது புகார் எழுதக்கூடாது என்று பொலிசாருக்கு கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கும் அளவிற்கு உபாலியின் அதிகாரம் இருந்தது. பொலிசாரின் பூரண மரியாதையும், அமைச்சர்களின் நல்லாசியும் அவனுக்குத் தாராளமாகவே கிடைத்தது. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது கண்ணீரை மட்டுமே விட முடிந்தது. வாய்விட்டுக் கதறி அழுவதற்குக் கூட அவர்களுக்குச் சுதந்திரம் வாய்த்திருக்கவில்லை.

அரசியல் நாடகத்தில் தோன்றும் வில்லன்களை ஒழித்துக் கட்டுவதற்கு ஐ. தே. க. உயர்பீடத்தைச் சேர்ந்தவர்கள் இவனைத் தட்டிக் கொடுத்தனர்; உற்சாகம் ஊட்டினார்கள். இதனால் பகல் வேளைகளில் ஆயுதங்களுடன் தனியார் வாகனங்களில் தன்னிச்சையாக நடமாடி, தனது இலக்குகளை தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தான். அரசியல் காரணங்களுக்கான பல கொலைகள் உபாலியினால் கனகச்சிதமாகச் செய்து முடிக்கப்பட்டன.

சாதாரண பொலிஸ் கான்ஸ்டபிளிலிருந்து இராணுவ அதிகாரிகள் வரை, பலரும் இவனது எடுபிடிகளாகவே செயற்பட்டிருப்பது இப்போது அம்பலமாகி இருக்கிறது. இதனால் சட்டரீதியான அங்கீகாரம் இல்லாத போதும், அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அமைப்புப் போலவே உபாலி செயற்பட்டான். இவனது நடவடிக்கைகள் நாட்டைக் கதிகலக்கி வந்தது. வெலிக்கடைச் சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டிருந்த ஒருவர் அங்கு வைத்தே தாக்கப்பட்டு, கால்முறிந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமான சம்பவத்திலும், 1989 செப்டெம்பரில் கொழும்பு இராஜகிரியப் பகுதியில் இறைச்சிக்கடை ஒன்றைப் பெற முனைந்த வேலுப்பிள்ளை தோட்டப்பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு, அதனைக் கிடைக்காமற் செய்வதில் அரசியல்வாதியின் உதவியைப் பெற்றதுடன், அதே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் கொல்லப்பட்ட விடயத்திலும் உபாலிக்கு நேரடித் தொடர்புகள் இருந்துள்ளது என்பது உபாலியின் செல்வாக்கை உணர்த்தும்.

இத்தனைக்கும் மேலாக, கடந்த மே மாதம் மூன்றாம் திகதியன்று நீர்கொழும்புப் பகுதியிலுள்ள நீதிமன்ற வளவில் வைத்து,



நீதிமன்றம் நடந்து கொண்டிருந்த வேளையிலேயே, சிந்தக அமரசிங்க என்பவரை சுட்டுக் காயப்படுத்திய சம்பவத்தில் உபாலிக்கு இருந்த பங்குதான், இப்போது அவனைப் பொலிசார் தேடவேண்டிய நிலையை ஏற்படுத்தியது. சிந்தக அமரசிங்காவின் குடும்பத்தைச் சேர்ந்த எட்டுப் பேரின் மரணத்திற்கு உபாலி காரணமாக இருந்துள்ளான். இக்குடும்பத்தைச் சேர்ந்த பசில் அமரசிங்க 1988 ஏப்ரல் 29 இலும், நோவேச் அமரசிங்க 19-88 யூலை 6 ல் வெலிக்கடைச் சிறையில் வைத்தும், 1988 ஆகஸ்ட் 15 இல் ஜோன்சோமபால பெரேராவும், 1988 அக்டோபர் 23 ல் ஜோசப் அமரசிங்கவும், ஓவா அமரசிங்க என்ற பெண் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் கற்குழி என்ற இடத்தில் வைத்தும் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறான கொலைகளை எந்தச் சஞ்சலமும் இல்லாமலேயே இவனது அடியாட்கள் செய்துள்ளனர். அரசியல்வாதிகள் திரைமறைவில் வழங்கிய ஒத்துழைப்புத்தான் உபாலியின் இத்தகைய செயல்களுக்குக் காரணமாகும்.

### ஐ. தே. கவின் திடீர் திருப்பம்

மே 3ம் திகதி நீர்கொழும்பு நீதிமன்ற வளவில் இடம்பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து, உபாலி பொலிசாரால் தேடப்பட்டான் என்றாலும், இதற்கு முன்பாக இத்தகைய குற்றச் செயல்கள் இடம்பெற்றபோது காட்டியிராத அசாதாரணமான அக்கறையை, இச்சம்பவத்தில் பொலிசார் காட்டியிருந்தனர். இதற்கும் பின்னணியில் அரசியல் காரணங்கள் பல இருப்பதாகவே கருதப்படுகிறது. குற்றச்செயல்களில் தொடர்புள்ளவர்களிடம் இருந்து கட்சியையும், அரசியலையும் மீட்பதற்காகவே உபாலி போன்றோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா காட்டிக் கொள்ள முற்படுகிறார். பொதுச்செயலாளர் பதவியிலிருந்து விலக்கப்பட்ட சிறிசேனகூரேயின் ஆதரவாளர்கள், தமது நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் காட்டிவரும் எதிர்ப்பைக் கட்டுப்படுத்தவும், குற்றச் செயல்களில் தொடர்புடைய கிரிமினல்களுடன் தமக்குத் தொடர்பு எதுவும் இல்லை எனக் கூறித் தப்பித்துக் கொள்ளவும் டி. பி. விஜேதுங்கா இத்தகைய போக்கைக் கடைப்பிடிப்பதாகச் சொல்லப்படுகிறது.

சிறிசேன கூரேயையும் அவரது ஆதரவாளர்களையும் ஓரம் கட்டுவதற்கும், கொலைகள் மற்றும் அரசியல் வன்முறைகளில் ஈடுபட்டார்கள் எனக் காரணம் காட்டுவதற்கும் டி. பி. விஜேதுங்கா முற்பட்டுள்ளார். இவ்வாறு தெரிவிப்பதன் மூலம், இத்தகைய தமது அரசியல் எதிரிகளை இலகுவில் முறியடித்து விடலாம் என்பதே அவரது எதிர்பார்ப்பாக உள்ளது. டி. பி. யின் இத்தகைய எதிர்பார்ப்பு எவ்வளவுக்குச் சாத்தியம் என்பதே இப்போதைய பிரச்சினை. உபாலி பொலிசாரினால் தடுத்து வைக்கப்படும்வரை, இறுக்கமான மௌனத்தைக் கடைப்பிடித்து வந்த சிறிசேன கூரே இப்போது, உபாலி ஐ. தே. க. வின் அங்கத்தவர்களில் ஒருவர் என்றும், கிளைக் கமிட்டியின் முக்கியத்தவர்களில் ஒருவர் என்றும், திடீரெனத் தகவல்களை வெளியிட்டிருப்பது, கொலைக் கும்பல்களுக்கும் ஐ. தே. க. வுக்கும் இடையிலான உறவு எப்படி இருந்துள்ளது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

ஜே. வி. பி. யினரின் செயற்பாடுகள் உச்சம் பெற்றிருந்த வேளையில், கட்சிக்காக சுவரொட்டி ஒட்டுவதற்குக் கூட எல்லோரும் பயந்துகொண்டிருந்த வேளையில், உபாலி துணிவுடன் செயற்பட்டார் என்றும், கட்சி முதலில் அதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்றும், சிரேட்ட அமைச்சரும் முன்னாள் பொதுச் செயலாளருமான சிறிசேன கூரே, உபாலியின் கைது தொடர்பாக கருத்து வெளியிட்டிருக்கிறார். அதாவது இவர் கட்சியின் நலனுக்காகச் செய்தவற்றை மறந்துவிடக் கூடாது என்றும், ஐ. தே. க. ஆட்சி பீடம் ஏறுவதற்கு இத்தகையவர்களின் செயற்பாடே காரணம் என்றும் கருதும் சிறிசேன கூரே, இவர்களைக் கைது செய்வது சரியானதா, தகுந்த செயலா என்றும் மறைமுகமாகக் கேள்வி எழுப்புகின்றார்.

### கைதா? சரணா?

சொத்தி உபாலி பொலிசாரால் கைது செய்யப்பட்டாரா? அல்லது பொலிசாரிடம் அவர் சரண் அடைந்தாரா? என்பது தொடர்பாக இப்போது பொலிஸ் திணைக்கள மட்டத்திலேயே அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன. கட்டுகஸ்தோட்டப் பகுதியிலுள்ள வீடொன்றில் சொத்தி உபாலி தங்கியிருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து கட்டுகஸ்தோட்ட பொலிசார் அப்பகுதியைச் சுற்றிவளைத்து அவரது சகோதரிகளான சுனீதா, சாந்தி, மாகிரட் ஆகியோரைக் கைது செய்ததுடன், அவர்களது வீட்டிலிருந்து ஆயுதங்கள் மற்றும் ரவைகளையும் கைப்பற்றியுள்ளனர். கட்டுகஸ்தோட்டப் பொலிசார் தொடர்ந்து விசாரணையில் ஈடுபட்டிருக்கையில் பம்பலப்பிட்டியிலிருந்து இப்பகுதிக்கு விரைந்து வந்த வேறொரு பொலிஸ் குழு, அதிகாலை நான்கு முப்பது மணியளவில் உபாலியைக் கண்டுபிடித்து பம்பலப்பிட்டிக்குக் கொண்டு வந்துள்ளது.

கட்டுகஸ்தோட்ட அனுலா வித்தியாலயமருகே உபாலி நடமாடுவதாக தகவல் கிடைத்தது எனவும், கட்டுகஸ்தோட்ட பகுதியில் உபாலி வாடகைக்கு பெற்றதாகக் கூறப்படும் வீடு உட்பட அப்பகுதியைச் சுற்றி வளைத்து காவல் புரிந்ததாகவும், எனினும் காலையில் புத்தகக்கடை ஒன்றிற்கு புதினப் பத்திரிகை வாங்குவதற்கு உபாலி வந்தபோது, இனங்காணப் பட்டு கைது செய்யப்பட்டதாகவும் பம்பலப்பிட்டி பொலிசார் கூறியுள்ளனர்.

பல குற்றச் சம்பவங்களுடன் நேரடித் தொடர்புடைய பல கொலைச் சம்பவங்கள் தொடர்பாகப் பொலிசாரால் தேடப்பட்டுவந்த ஒருவர், பொலிசாரைக் கண்டதும் தப்பி ஓடவோ அல்லது திருப்பித் தாக்கவோ முற்படவில்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கதே. கட்டுகஸ்தோட்டவில் கண்டுபிடிக்கப்பட்ட உபாலி பத்திரமாக பம்பலப்பிட்டிக்கு அழைத்து வரப்பட்டார்.

வேறு பொலிசாரிடம் சிக்குண்டால் இவர் தாக்கப்படலாம் என்பதனால் கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட விசேட குழு உபாலியைக் கைது செய்தது எனவும், இதுவும் அரசியல்வாதிகளுக்கும் பொலிசாருக்கும் இடையிலான கூட்டு ஒப்பந்தத்திற்கு உதாரணம் எனவும் கூறப்படுகிறது.

தற்போது விளக்கமறியலில்

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்...

---

கொழும்பை மட்டும் மையமாகக்கொண்டு பதினொரு குழுக்களின் தலைமையில் பாதாள உலகம் இயங்கிவந்துள்ளது. இக் குழுக்களிடையே இடம்பெற்ற மோதல்களில் மட்டும், எட்டு வருடங்களிலும் 119 பேர் கொல்லப்பட்டிருப்பதாகப் பொலிஸ் திணைக்களத்தின் புலன்விசாரணைப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

பயங்கர ஆபத்து விளைவிக்கும் நவீன துப்பாக்கிகள், மற்றும் ஆயுதங்கள், வாகனங்கள் இவர்கள்வசம் இருக்கின்றன. தத்தமக்கென எழுதாத உடன்பாட்டின் மூலம், வரையறுக்கப்பட்ட பகுதிகளில் பல கொலைகளிலும், சட்டவிரோத நடவடிக்கைகளிலும் இவர்கள் ஈடுபட்டுவருகின்றனர்.

1986 இல் மட்டும் ஒப்பந்த அடிப்படையில் 13 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இராஜகிரிய பகுதியில் செயற்பட்ட குழுவே இக்குழுக்களில் பெரியதாகும். பாலத்துறை, கொலன்னாவ, இராஜகிரிய, கடுவல, தெகிவளை, இரத்மலானை, பத்தரமுல்ல, கொம்பனித்தெரு, மாளிகாவத்தை, மருதானை, புறக்கோட்டை என்பவை இக்குழுக்களின் மையங்களாக இருந்துள்ளன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண் ஒடு
# ஆயுதப் பே

'விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள்' (WOMEN FIGHTERS OF LIBERATION TIGERS) என்ற தலைப்பில் நான் எழுதிய நூலுக்கு, கொழும்பில் இருந்து வெளிவரும் தமிழ்ப் பத்திரிகை ஒன்றில், ஓர் மதிப்பாய்வு வெளிவந்திருக்கிறது. 'விடுதலைக்கு துப்பாக்கியை மட்டும் நம்பிப் பயனில்லை' என்ற தலைப்பில் இந்த மதிப்புரை செய்யப்பட்டுள்ளது. எனது நூலின் முன்னுரையிலிருந்து சில பகுதிகளை மட்டும் மேற்கோள் காட்டி, ஆயுதப் போராட்டமே பெண்களின் வாழ்க்கை நிலையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தவல்லது என நான் கருதுவதாக மிகவும் தவறான, விசமத்தனமான குற்றச்சாட்டு ஒன்றை அப்பத்திரிகையின் குறிப்பிட்ட செய்தியாளர் முன்வைக்கிறார். "விடுதலைப் புலிகளின் இராணுவ வாதத்தின் ஒரு பகுதியாகவே இந்நூல் அமைந்துவிடுகிறது" என்ற தீர்ப்பையும் வழங்கிவிடுகிறார்.



இந் நூலின் பொருளடக்கம் என்ன அதன் ஆய்வுக் குறிக்கோள் என்ன, என்பது பற்றி முன்னுரையில் தெளிவாக எடுத்துச் சொல்லப்படுகிறது. இதனை மதிப்புரை செய்த அச்செய்தியாளர் தெளிவாக கிரகித்துக் கொள்ளவில்லைப் போலத் தெரிகிறது. இந்த நூல், விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியினது ஆறு ஆண்டு கால ஆயுதப் போராட்ட வரலாற்றை பதிவு செய்கிறது. காட்டுப்புற கெரில்லாப் போர் முறையிலிருந்து தொடங்கி, பெரும் படையணியாக நவீன மரபுவழி சமர்களில் பங்குபற்றி வியக்கத்தகு சாதனைகளைப் படைக்கும் அளவிற்கு புலிகளின் பெண் போராளிகள் அமைப்பு படிப்படியான பரிணாம வளர்ச்சி கண்டிருக்கிறது என்பதையும், இந்த வளர்ச்சிப் போக்கில் பெண் போராளிகள் பெற்ற அனுபவங்கள், அவர்களது அர்ப்பணிப்புகள், அவர்களது துணிகர சாதனைகள் பற்றியும் இந்நூல் எடுத்துச்சொல்கிறது. ஒட்டு மொத்தத்தில், இந்நூல் எமது பெண் போராளிகளின் போராட்ட வரலாற்று அனுபவத்தை மட்டும் சித்தரிக்க முனைகிறது. இதில் தமிழீழப் பெண்ணினத்தின் சமூகச் சிக்கல்கள் பற்றியோ, பெண்ணிய கருத்தியல் பிரச்சினைகள் பற்றியோ விவாதிக்க முயலவில்லை. இது, இந்த ஆவணத்தின் வரையறைக்கு அப்பாற்பட்டது என முன்னுரையில் நான் தெளிவுபடுத்தியிருக்கிறேன். இந்தப் போராட்ட வரலாற்றுப் பதிவேட்டின் நோக்கையும், வரையறைகளையும் புரிந்துகொள்ளாமல் தமிழீழ தேசிய போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பை இழிவுபடுத்தும் வகையில் இந்த மதிப்பாய்வு செய்யப்பட்டிருப்பது ஏமாற்றத்தையும் கவலையையும் தருகிறது.

எனது நூலில், தமிழீழ தேசிய போராட்டத்தின் வரலாற்றுப் பின்னணியை சுருக்கமாகக் கூறும் பொழுது கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறேன்.

"ஆரம்பத்தில், தமிழர்கள், தேசிய ஒடுக்கு முறைக்கு எதிராக அகிம்சை வடிவத்தில் அரசியல் போராட்டத்தைத் தொடுத்தனர். காந்தியின் அகிம்சைத் தத்துவத்தைத் தழுவிக்கொண்ட தமிழ்ப் பாராளுமன்ற அரசியல் தலைமை, தமிழ்த் தேசத்தை முழுமையாக அணிதிரட்டி, தேசிய ரீதியில் வெகுசனப் போராட்டத்தை நடத்தியது. ஐம்பதுகளின் இறுதியிலும் அறுபதுகளின் ஆரம்பத்திலும் தமிழ் அரசியல் அரங்கில் பெரும் ஆதிக்கம் செலுத்திய இந்தத் தேசியப் போராட்டங்களில் நேரடிப் பங்குதாரர்களாக தமிழ்ப் பெண்கள் முக்கிய பங்கு வகித்தனர். ஆர்ப்பாட்டங்கள், மறியல் போராட்டங்கள் மற்றும் எதிர்ப்பியக்கங்களில் பெண்கள் பங்கு கொண்டனர். 1961 ஆம் ஆண்டு பெப்ரவரியில் தொடங்கி, மூன்று மாதங்களுக்கு மேலாக நிகழ்ந்த ஒத்துழையாமை இயக்கத்தில், பல்லாயிரக் கணக்கில் பெண்கள் பங்குபற்றினார்கள். சத்தியாக்கிரகங்களின் இந்த இயக்கம் தமிழ்ப் பகுதிகளில் அரச நிர்வாகத்தை செயலிழக்கச் செய்தது. இதனால் அச்சம்கொண்ட சிங்கள அரசு சத்தியாக்கிரகங்களின் மென்முறைப் போராட்டத்திற்கு எதிராக வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டது. அமைதி வழியில் ஆர்ப்பாட்டம் செய்தவர்களுக்கு எதிராக ஆயுதப் படைகள் ஏவிவிடப்பட்டன. அரச படைகள், சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட பெண்கள்மீதும் வன்முறையைப் பிரயோகித்தன. பெண்கள் தாக்கப்பட்டனர். குண்டாம் தடிகளாலும், துப்பாக்கிப் பிடியாலும் தாக்கப்பட்டனர்.

தேசிய நெருக்கடி பற்றி தமிழ்ப் பெண்கள் அரசியல் விழிப்புணர்வு பெற்று அமைதிவழியான அரசியல் போராட்டங்களில் பங்கு கொண்டமையானது, இவ் வரலாற்றுக் கால கட்டத்தில் ஒரு முக்கிய நிகழ்வாகும். இக் கால கட்டத்தில், அரசியல் போராட்டங்களில் பெண்கள் பங்கு பற்றிய நிகழ்வானது, தமிழர் சுதந்திர இயக்கத்தின் தேசியத் தன்மையை செழுமைப் படுத்தி சிறப்புறச் செய்தது எனலாம். அமைதி வழியிலான இந்தத் தேசிய எதிர்ப்பியக்கம், பரந்து பட்ட வெகுசனங்களை தேசிய ரீதியில் அணி திரட்ட முடிந்தது என்பதால், அதில் முற்போக்கான, சனநாயக அம்சங்கள் இருந்துள்ளது என்பதை மறுக்கமுடிந்தது. ஆயினும், இந்த இயக்கம், சாராம்சத்தில் பழமைவாத சித்தாந்தத்தையும் தலைமையையும் கொண்டிருந்தது.

கோட்பாட்டு ரீதியாகவும் சரி, செயற்பாட்டு ரீதியாகவும் சரி, பழைய தலைமையின் அரசியலானது பெண்களின் சமூக ஒடுக்குமுறைப் பிரச்சினைகளை எதிர்கொள்ளத் தவறியது. இனவாத ஒடுக்குமுறைக்கு எதிரான தேசிய விடுதலை என்ற சுலோகத்தின் கீழ், தமிழ்ச் சமூக அமைப்பிலுள்ள பிரதான முரண்பாடுகள் மூடிமறைக்கப்பட்டன. பெண் அடக்குமுறை உட்பட, பன்முகப்பட்ட சமூக ஒடுக்குமுறைகளைத் தீர்த்து வைப்பதற்கு ஒரு புரட்சிகரமான வேலைத் திட்டத்தைத் தயாரிக்க பழமைவாத பாராளுமன்றத் தலைமை தவறிவிட்டது என்றே சொல்லலாம். அகிம்சைவாத அரசியலானது, தேசியப் போராட்டத்தில், பெண்கள் உட்பட பரந்துபட்ட வெகுசனத்தை அணிதிரட்டிய போதும், நடைமுறை அரசியலின் வறுமை காரணமாக, மிக முக்கியமான தேசிய சமூகப் பிரச்சினைகளை எதிர்கொள்ளத் தவறியதால் காலப்போக்கில் அதன் கவர்ச்சியும், முக்கியத்துவமும் சரிந்து போனது"

மேற்குறிப்பிட்ட இந்தப் பந்திகளில், அமைதி வழிப் போராட்டத்தையோ, அதில் பெண்களின் பங்களிப்பையோ நான் குறைகூற முயற்சிக்கவில்லை. இந்தப் போராட்டத்தில் பெண்கள் பங்குகொண்டமை ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வு என சுட்டிக் காட்டியிருப்பதுடன், இது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு செழுமையையும் சிறப்பையும் அளித்தது என்கின்றேன். இந்தப் போராட்டத்தை முன்னின்று நடத்திய தலைமையிடம் பெண் விடுதலை சம்பந்தமான ஒரு தெளிவான பார்வையோ அல்லது உருப்படியான வேலைத்திட்டமோ இருக்கவில்லை என்பதே எனது விமர்சனம். இதனைத் தவறாகப் புரிந்து கொண்டு மதிப்பாய்வு செய்த அச்செய்தியாளர், நான் அமைதி வழியிலான, சனநாயகப் போராட்டங்களை அவமதிப்பதாக வீண் பழி சுமத்த முயல்கிறார்.

தமிழரின் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில், அன்றைய காலகட்டத்தில் அகிம்சைப் போராட்டத்திலும் பெண்கள் பங்கு கொண்டனர். "ஆயுதப் போராட்டத்தில் பெண்களின் பிரவேசமானது, அரச ஒடுக்குமுறைக்கு எதிராக அவர்களின் நீண்ட கால அரசியல் பங்களிப்பின் ஒரு வளர்ச்சிப் போக்கைக் காட்டுகிறது," என்பதை இந்நூலில் நான் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

"அமைதிவழிப் போராட்டங்களிலும் பாராளுமன்ற அரசியலிலும் பெண்களின் பங்களிப்பானது அவர்கள்பற்றிய பண்பாட்டுப் படிமங்களில் அடிப்படையான மாற்றம் எதையும் நிகழ்த்தவில்லை. ஏனென்றால், இந்த அரசியல் ஈடுபாடானது பெண்களின் செயற்பாடுகள் குறித்து சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரையறைக்குள் அமைகிறது. ஆயினும், ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடும் பெண்களின் வரலாறு ஒரு வித்தியாசமான பரிமாணத்தைக் கொண்டது. ஆயுதம் ஏந்தும் பெண்கள் ஒரு புதிய உலகத்தைச் சார்ந்தவர்கள். இது சாதாரண பெண்கள் வாழும் சாதாரண உலகத்திலிருந்து வேறுபட்டது."

எனது நூலில் வரும் இந்தப் பந்தியைப் மேற்கோள் காட்டி, 'பெண்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டாலன்றி அவர்களது வாழ்க்கையில் புரட்சிகரமான மாற்றமோ, அவர்களைப் பற்றிய சமூகக் கருத்தோட்டத்தில் அடிப்படை மாற்றமோ, நிகழ்ந்துவிடாது' என நான் எண்ணுவதாக குறிப்பிட்ட செய்தியாளர் ஒரு தவறான, விசமத்தனமான மதிப்பீட்டை முன்வைக்கிறார். இது அவரது சொந்தக் கற்பனாவாதமின்றி எனது கருத்தல்ல. ஆயுதப் போராட்டமானது, அமைதிவழிப் போராட்டத்தைவிட அடிப்படையில் வேறுபட்டது; புரட்சிகரமானது. ஆயுதம் தரித்து நிற்கும் பெண் போராளிகளின் வாழ்க்கையானது சாதாரண பெண்களின் வாழ்நிலை அனுபவத்திலிருந்து வித்தியாசமானது, என்பதையே நான் சுட்டிக்காட்ட முனைந்தேன். அன்றைய அமைதி வழிப் போராட்டங்கள் பழமைவாத அரசியல் தலைமையால் வழிநடத்தப்பட்டதாலும் பெண் விடுதலையைக் குறிக்கோளாகக் கொள்ளாததாலும், அப்போராட்ட செயல்முறைகள் சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நியமங்களுக்குள் அமைந்ததாலும், பெண்கள்பற்றிய பண்பாட்டுப் படிமங்களில் அடிப்படையான மாற்றங்கள் நிகழவில்லை. ஆனால், ஆயுதப் போராட்டத்தில் பெண்களின் பிரவேசம் அவர்கள் பற்றிய பழமை வாதப் படிமங்களைத் தகர்க்கவே செய்தது. இந்தக் கருத்தைத் தவறாகப் புரிந்து கொண்ட அச்செய்தியாளர், அதனை இராணுவ வாதமாக திரிக்க முனைகிறார்.



காட்டு வாழ்க்கையில் கனரக ஆயுதத்துடன் எதிரியைக் குறிபார்த்து நிற்கும் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள்..

உலகத்தில் நிகழ்ந்த சமூகப் புரட்சிகளிலும், தேசிய விடுதலைப் போராட்டங்களிலும் பெண்கள் பங்குபற்றினார்கள்; ஆனால் அவர்களது வாழ்க்கை நிலையில் பெரிய மாறுதல் நிகழவில்லை எனச் சுட்டிக்காட்டும் அவர், "பிறநாடுகளில் பிற சமூகங்களில் என்ன நிகழ்ந்திருக்கிறது என்பதுபற்றி கவனம் கொள்ளாது எம்மிடையே எல்லாம் உள்ளது என மனப்பால் குடிக்கும் போக்கைக் கைவிடவேண்டும். பெண்கள் தமது வாழ்க்கையைத் தமது கையில் எடுத்துக்கொள்ளவேண்டும். விடுதலைக்கு துப்பாக்கியை மட்டும் நம்பிப் பயனில்லை." என எழுதுகிறார்.

சோசலிசப் புரட்சிகளிலும்,



கடினமான இராணுவ பயிற்சி ஒன்றில்
தமிழீழ விடுதலைப்புலிகள் மகளிர் படையணி.

www.tamilarangam.net

# குமுறையும் ராட்டமும்

தேசிய விடுதலைப் போராட்டங்களிலும் பங்குபற்றிய பெண்களின் நிலைபற்றியும், அவர்கள் எதிர்கொண்டு நிற்கும் சிக்கல்கள் பற்றியும் நாம் நன்கறிவோம். எமது தேசத்தின் விடுதலைக்கு ஆயுதப் போராட்டம் அவசியமானது. ஆனால் பெண் விடுதலை என்பது பிரத்தியேகமான சமூகப்பிரச்சினை. இந்தப் பெண் விடுதலைப் போராட்டத்தை பெண்களே முன்னெடுக்கவேண்டும். இது ஒரு தொடர்ச்சியான போராட்டம். தேச விடுதலைக்குப் பின்னரும் சமூக மாற்றத்தின் பின்னரும் இந்தப் போராட்டம் தொடரவேண்டும் என்பதே எனது கருத்து. சமூகப் புரட்சியிலும், தேசிய விடுதலையிலும் பங்கு கொண்ட பெண்களின் நிலை எவ்வாறு அமைந்தது என்பதை விளக்கி ‘சோசலிசமும் பெண் ஒடுக்குமுறையும்’ என்ற தலைப்பில் நான் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரை சுதந்திரப் பறவைகள் 1991 வைகாசி -ஆனி இதழில் வெளிவந்தது. இக்கட்டுரையிலுள்ள முக்கிய பகுதிகளை இங்கு மறுபிரசுரம் செய்கிறோம். எமக்கு அனைத்துலகப் பெண்ணினம் பற்றிய தெளிவான உலகப்பார்வை தேவையென பரிந்துரை வழங்கும் அச்செய்தியாளருக்கு இது ஒரு நல்ல பதிலாக அமையும்.

”கோபன்கேகன் மாநாட்டை அடுத்து சோசலிச சமூகப் புரட்சிதான் பெண்ணின் விடுதலைக்கு ஒரே வழி என்ற கருத்து ஐரோப்பிய பெண்நிலைவாதிகள் மத்தியில் வேரூன்றிப் பரவியது. சமூக, அரசியல் பொருளாதார வாழ்வில் பெண்கள் சமத்துவம்

**அடேல் ஆன்**

பெறுவதாக இருந்தால் ஒடுக்குமுறைகள் நிறைந்த சமூக அமைப்பு மாற்றியமைக்கப்படுவதுடன் பழமையில் புதைந்திருந்த சித்தாத்தங்களும், சம்பிரதாயங்களும், சடங்குகளும் தூக்கி எறியப்பட வேண்டும் என்ற பார்வை உலகரீதியாகப் பெண்ணுரிமை இயக்கங்கள் மத்தியிலும் பரவியது. ருசியா, சீன, கியூபா புரட்சிகளின் போதும், மற்றும் தேசிய விடுதலைப் போராட்டங்களிலும் இந்தக் கருத்துக்கள் பெண் விடுதலைக்கான கோட்பாடுகளாகவும், கொள்கைத் திட்டங்களாகவும் முதன்மை பெற்றன.

உலகின் பல நாடுகளில் நிகழ்ந்த சோசலிசப் புரட்சிகளில் பெண்கள் முழுமையாக பங்கு பற்றினர். ஆண்களுடன் கைகோர்த்துப் புரட்சிக் களத்தில் குதித்தனர். போராடினர். மூன்றாம் உலக நாடுகளில் நிகழ்ந்த தேசிய விடுதலைப் போராட்டங்களிலும் பெண்கள் முழுப் பங்களிப்பைச் செய்தனர். ஆயுதம் ஏந்தியும் போராடினர். இந்தச் சோசலிசப் புரட்சிகளிலும், விடுதலைப் போராட்டங்களிலும் பழைய சமூக அமைப்புக்கள் உடைதெறியப்பட்டு புதிய சமூக வடிவங்கள் தோற்றம் பெற்றன. முதலாளித்துவ வர்க்க முரண்பாடுகள் ஒழிக்கப்பட்டு தனியார் சொத்துடமை அழிக்கப்பட்டு, புதிய சமூக உறவுகள் உருவாக்கப்பட்டன. புதிய உலகம் படைக்கப்பட்டது.

இந்தப் புதிய சமூக உலகத்தில், புரட்சிகர சமூகப் பொருளாதார மாற்றங்கள் நிகழ்ந்த நாடுகளில், பெண் ஒடுக்குமுறை முற்றாக நீக்கப்பட்டதா? என்ற வினாவை எழுப்பினால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். சமூக அமைப்புக்கள் மாற்றப்படலாம், பொருளாதார உற்பத்தி உறவுகள் மாற்றப்படலாம். புதிய சமூக வடிவங்கள் உருவாக்கப்படலாம், வர்க்க முரண்பாடுகள் ஒழிக்கப்படலாம். ஆயினும் ஆணாதிக்கமும் ஆணாதிக்கத்திற்கு அடிப்படையான பழமைவாத உலகப் பார்வையும் தொடர்ந்து இருக்கும் வரை பெண் ஒடுக்குமுறை ஒழியப்போவதில்லை என்ற யதார்த்த உண்மையை இன்றைய சோசலிச பெண்நிலைவாதிகள் நன்கு உணர்ந்துள்ளனர். புரட்சி நிகழ்ந்த நாடுகளில் ஆட்சியதிகாரம் ஆண்வர்க்கத்தின் கைகளுக்கு மாறுவதும், ஆணாதிக்க சர்வாதிகார ஆட்சிகள் தலைதூக்குவதும், இந்த ஆட்சிகளில் பெண்களின் உரிமைப் பிரச்சனைகள் தட்டிக்கழிக்கப்படுவதும், பெண்கள் அந்நியப் படுத்தப்படுவதும் வழமையான நிகழ்ச்சிகளாக மாறி முற்போக்கான பெண்நிலைவாதிகளுக்கு உலக ரீதியாக பெரும் ஏமாற்றத்தையும் கசப்புணர்வையும் கொடுத்திருக்கின்றது.

சோசலிசப் புரட்சி நிகழ்ந்த நாடுகளில் பெண் உரிமைப் போராட்டம் எத்தகைய வரலாற்றுப் பாதையில் இட்டுச் செல்லப்பட்டது என்பதை இங்கு சுருக்கமாகப் பார்ப்போம். இதிலிருந்து பெண் ஒடுக்குமுறையானது சமூக மாற்றங்களுக்கு அப்பாலான ஒரு தனித்துவமான பிரச்சினை என்பது புலனாகும்.

சோவியத்யூனியனில் புரட்சிக்கு முந்திய காலகட்டத்தில் பெண் இயக்கமானது ருசிய கம்யூனிஸ்ட் கட்சியில் ஒரு அங்கமாகச் செயற்பட்டது. புரட்சிக்குப் பெண்களை அணி திரட்டி சோசலிச சமூக மாற்றத்திற்காகப் போராடுவதே சோவியத் பெண் இயக்கத்தின் பிரதான குறிக்கோளாக இருந்தது. எனினும் முற்போக்கான ருசிய பெண்நிலைவாதிகள் பெண்களின் பிரத்தியேகப் பிரச்சினைகளை முதன்மைப்படுத்தி அந்தப் பிரச்சினைகளைத் தீர்மானிப்பதற்குப் பெண் இயக்கம் தனித்துவமான முறையில் போராட வேண்டுமெனக் கருத்துத் தெரிவித்தனர். ஆண்களின் ஆதிக்கம் மேலோங்கியிருந்த கட்சித் தலைமைப்பீடம் இதனை விரும்பவில்லை. தனியார் சொத்துடமையின் அடிப்படையில் தோன்றியுள்ள வர்க்க முரண்பாடுகள் ஒழிக்கப்பட வேண்டும் என்றும், தொழிலாளர் அரசு உருவாக்கப்



எதிரியின் முகாமைத் தகர்ப்பதற்கான திட்டமிடலில் விடுதலைப் புலிகளின் ஆண் போராளிகளுடன் மகளிர் படையணி.

பட்டு தொழில் துறையில் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டால் பெண் ஒடுக்குமுறை தானாகவே ஒழிக்கப்பட்டு விடுமென கட்சித் தலைமை வாதிட்டது. எனவே பெண்ணினத்தின் பிரதான கடமை, சோசலிச சமூக மாற்றத்திற்காகப் போராடுவதுதான் எனத் தலைமைப்பீடம் வரித்த கொள்கையை ருசியப் பெண்ணியக்கம் ஏற்றுக் கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டது. இந்தக் கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் ருசியப் பெண்கள், கட்சியின் தலைமையின் கீழ் அணி சேர்ந்து புரட்சிப் போராட்டத்தில் குதித்தனர். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முதலாவது சோசலிசப் புரட்சி வெற்றி பெற்றது. பழைய நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ சமூக அமைப்பு மாற்றப்பட்டு புதிய சமதர்ம சமுதாயம் அமைக்கப்பட்டது.

ருசியப் புரட்சியை அடுத்து ஏற்பட்ட சமூகமாற்றங்களில் சோவியத் பெண்களின் வாழ்க்கை நிலையிலும் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏட்பட்டது என்பது உண்மையே. ஆண்-பெண் சமத்துவம் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டது. கல்வித் துறையிலும், தொழில் துறையிலும் பெண்களுக்கு கூடிய வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டன.



நமீபியப் புரட்சியில் ஆண் போராளிகளுடன் இணைந்து நிற்கும் பெண் போராளிகள்.

தொழிலாளர் சக்தியாகப் பெண்கள் அணிதிரட்டப்பட்டனர். கர்ப்பிணிகள், குழந்தைகள் பராமரிப்பில் அரசு பல சலுகைகளை வழங்கியது. இந்த நடவடிக்கைகள் பாராட்டப்பட வேண்டியவைதான். ஆயினும் பெண்களின் பிரத்தியேகப் பிரச்சினைகள் உதாசீனம் செய்யப்பட்டன. தேசிய அரசியல் தலைமையிலிருந்தும் பெண்கள் ஒதுக்கப்பட்டனர்.

ருசியப் புரட்சியை அடுத்து பாட்டாளி மக்களின் ஆட்சிக்கு பதிலாக, கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் சர்வாதிகாரியான ஸ்டாலினின் தலைமையில் அரச அதிகாரம் முழுவதும் ஆணாதிக்கவாதிகளின் கைகளில் சிக்கியது. தனித்துவமான ஒரு பெண் இயக்கம் வளர்வதைக் கட்சித் தலைமை விரும்பவில்லை. அத்துடன் பெண்களின் பிரத்தியேகப் பிரச்சினைகள் பற்றியும் அக்கறை காட்டவில்லை. தேசிய அரசியல் தலைமைப்பீடத்தில் பங்களிக்கவோ, தேசிய சமூகப் பிரச்சினைகள் பற்றி விவாதித்து முடிவு எடுக்கவோ பெண்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. பெண்ணினத்தை வெறும் உற்பத்திச் சக்தியாக, தொழிலாக்கச் சக்தியாக ஆணாதிக்கம் படைத்த சர்வாதிகாரத் தலைமை கருதியதே தவிர சமூக, அரசியல், பொருளாதார வாழ்வில் பெண்களுக்கும் சம சந்தர்ப்பம் அளித்து தேசிய ரீதியில் அவர்களது பங்களிப்புக்கு இடமளிக்க விரும்பவில்லை. இதனால் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களாகப் பணியாற்றிய பெண்கள், தேசிய ரீதியில் பெண்களின் பல்வேறு பிரச்சினைகளை முன்னெடுக்க முடியவில்லை.

ஸ்டாலினை அடுத்து பதவி ஏறிய தலைவர்களும் தேசிய தலைமைப் பீடத்தில் பெண்களுக்கு அங்கத்துவம் அளிக்கவில்லை. அரச அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதும் நாட்டை நிர்வகிப்பதும் ஆண்களுக்கு மட்டுமே உரித்தான விசயமென ருசியத் தலைமை கருதியது போலும். சிந்தனைச் செயற்பாடு மற்றெல்லா வகையிலும் பெண்களைவிட ஆண்கள் உயர்ந்தவர்கள் என்று ஆணாதிக்க கருத்தியல் பார்வை கட்சித் தலைமையில் வேரூன்றி இருந்தமையால் தேசிய நிர்மாணப் பணிகளிலிருந்து பெண்கள் அந்நியமாக்கப்பட்டனர்.

பெருந்தொகையான பெண்கள் தொழில் துறைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்ட போதும் அவர்களது குடும்ப நிலையில் மாற்றம் ஏற்படவில்லை. தொழிற்சாலைகளில் இயந்திரமாக முழுநேர வேலை செய்த பின்னர் வீட்டிலும் சமையல் தொடக்கம் குழந்தை பராமரிப்பு வரை முழுக் குடும்ப வேலைப்பழுவையும் பெண்களே சுமக்க வேண்டியிருந்தது. குடும்பத்திலும் ஆணாதிக்கம் தலைதூக்கியதால் பெண்களின் நிலைமை மோசமாகியது. சோசலிசப் புரட்சி பொருளாதாரப் புறநிலைகளில் மாற்றத்தை ஏற்படுத்தியது உண்மையே. ஆனால் பழைமைவாத பிற்போக்குச் சிந்தனைகள் ஆண்களைத் தொடர்ந்து பற்றியிருந்ததால் தேசியத் தலைமையிலிருந்து வீடு வரை, பெண் ஒடுக்குமுறை தொடரத்தான் செய்தது.

ருசியாவைவிட சீனாவில் நிலை வேறாக அமைந்தது. சீனப்பெண் இயக்கம் ஒரு தனித்துவமான புரட்சிகர சூழலில் வளர்ந்து பரிணாமம் பெற்றது. சீனப்பெண் இயக்கம் தனித்துவமான அமைப்பையும், தலைமையையும், கொள்கைத் திட்டத்தையும் கொண்டிருந்தது. பெண்ணியக்கம் தனித்துவமாக வளர்வதைச் சீனக்கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை எதிர்க்கவில்லை. பதிலாக ஊக்குவித்தது. சீன மகளிர் அமைப்பு தனித்துவமாக இயங்கிய போதும் சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கமாகவே செயற்பட்டது. கட்சியின் கொள்கைத்திட்டமும் பெண் விடுதலையைத் தனது பிரதான இலட்சியங்களில் ஒன்றாக வரித்திருந்தது.

சகல துறைகளிலும் ஆண்களுடன் பெண்களுக்கு சமத்துவம் அளிக்கப்பட வேண்டும். கல்வி வசதிகளும், வேலைவாய்ப்புகளும் பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதனைச் சீனக் கம்யூனிஸ்ட் தலைமை அங்கீகரித்திருந்தது. சோசலிச சமுதாய மாற்றம் ஏற்பட்டதும் பெண் ஒடுக்குமுறை தானாகவே ஒழிக்கப்பட்டு விடும் என்ற ருசிய கம்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சீதனம்: காலம் போட்ட கைவிலங்கு

உலகத்தில் இயற்கையின் நியதிக் கேற்ப, ஆண் பெண் என இருவகையான மனிதப்பிறப்புக்கள் தோன்றி வாழ்ந்துவருகின்றன. இவையிரண்டும் உடலமைப்பிலும் குண இயல்பிலும் வேறுபாடுகள் சிலவற்றைக் கொண்டுள்ளன. ஆண் வலியவன். பெண் மென்மையானவள் என்ற அடிப்படையான வேறுபாடு, உடல் தோற்றத்தால் விளங்க; உணர்வுநிலையிலும் சில வேறுபாடுகள் இருந்தன. ஆணும் பெண்ணும் இணைந்து, கணவன் மனைவி எனப் பெயர்பூண்டு, சமூகத்தில் குடும்பம் என்னும் கட்டமைப்பைப் பேணிவந்தனர். காலம் காலமாகக் குடும்பம் என்னும் நிலையில் ஆணும் பெண்ணும் ஒன்றுபட்டு வாழ்க்கை நடத்துகின்றனர். குழந்தைகளை உருவாக்குகின்றனர். இயற்கையின் நியதியில் குழந்தையை வயிற்றிலே தாங்கி அதனைப் பெற்று வளர்க்கின்ற பெரிய பணி பெண்ணிடம் சேர்திருந்தது. இதனால் பண்டைய காலத்தில் பெண் 'பேராற்றல் பெற்றவள் என மதிக் கப்பட்டாள். அவளது சிறப்புக் குணமான தாய்மைப் பண்பு, ஆணையும் வழி நடத்துகின்ற ஆற்றல் பெற்றிருந்தது. எனவே ஆண், பெண்ணோடு இணைந்து வாழ்க்கை நடத்துகையில் இந்தப் பேராற்றலுக்கு பணிந்தே இயங்கினான். இதுவே தமிழர் பண்பாடாக வளர்ந்து வந்தது. தமிழர் பண்பாட்டிலே ஆரியப் பண்பாடு கலந்த வேளையில் இந் நிலை மாற்றமடையலாயிற்று. பெண்ணின் ஆற்றல் ஆணின் ஆற்றலைவிடக் குறைந்தது என்ற நிலை உருவாகியது. இன்னும், பெண் என்பவள் ஆணுக்குக் கட்டுப் பட்டு இருக்க வேண்டியவள். அவளுக்கு தனித்து இயங்குகின்ற ஆற்றலே இல்லை என்ற கருத்துக்களும் உருவாகலாயிற்று. இக் கருத்துக்களை, மனுதர்ம சாஸ்திரம் ஆவணநிலையிலே உறுதிப்படுத்தியுள்ளன. ஆனால் பிற்காலத்தில் இவ்வழக்கம் மாறித் திருமணத்தின் போது பெண் தாய்வீட்டிலிருந்து செல்வங்களோடு வரவேண்டும் என்ற நடைமுறை உருவாகிற்று. அதுவே இன்று சீதனம் கொடுக்கின்ற வழக்கமாய் நின்று நிலைத்துவிட்டது.

திருமண உறவினை ஏற்படுத்தும் நிலையிலே, இன்று சீதனம் பெரும் தடையாக அமைகின்ற அளவிற்கு அதனுடைய ஆற்றல் வளர்ந்துவிட்டது. பெண்ணுடைய ஏனைய ஆற்றல்களை எல்லாம் தடுத்து நிறுத்தி சீதனம் அவளை கட்டுப்படுத்துகின்ற ஒரு சமூக முறையாகவும் மாறிவிட்டது. பெண்ணின் திருமணம், சீதனம் கொடுத்தால் தான் நடைபெறும் என்று இன்று எல்லோராலும் எண்ணப்படுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. பல குடும்பங்களிலே இச் சீதன வழக்கத்தால் திருமண உறவே வணிக நிலையிற் செயற்படுகின்ற ஒரு சடங்காக அமைந்துவிட்டது. பெண்ணின் அழகு, கல்வி, உடல் வலு, செயலாற்றும் திறன் என்பன இச் சீதனத்தின் முன், முற்றாக வலுவிழந்து விட்டன. அவளுடைய தாய்மை என்னும் பேராற்றல் . மதிப்பிழந்தமை பெண்ணடிமையை மேலும் கூர்மைப்படுத்துகின்ற ஒரு செயலாகச் சீதனம் வாங்கும் நடைமுறை இன்று விளங்குகின்றது. இதனால் பெண்கள் மட்டுமன்றி ஆண்களுமே பெரும் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியவராகவுள்ளனர். எனவே இன்று இச்சீதன முறைபற்றி மீளாய்வு செய்து நமது தமிழர் பண்பாட்டிற்கு அதன் பொருத்தமின்மையை கூறவேண்டியது எமது பணியாகவுள்ளது.

ஒத்த வயது, ஒத்த அழகு, ஒத்த கல்வி, ஒத்த குணம் என்ற நிலையில் ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் செய்வதற்குப் பொருத்தமானவர்களாக இருப்பினும், சீதனம்இடையிலே வந்து அவர்களது பொருத்தப்பாட்டை நிலைகுலைய வைக்கிறது. அவர்கள் ஒருவரை ஒருவர் விரும்பி திருமணம் செய்து வாழ முற்பட்டாலும் சீதனம் அதற்கு இடையூறாக நிற்கின்றது. இந் நிலையில் இந்த இடையூறை எப்படி விலக்குவது என்பது எம் முன்னே கேள்வியாக ; விடையைத் தேடவேண்டிய காலமும் வந்துவிட்டது. 'சீதனம்' என்னும் வழக்கத்தின் இடைக்காலத் தோற்றத்தைப் பற்றிஎவருமே இப்போது எண்ணிப் பார்ப்பதில்லை. சீதனம் வாங்குவது என்பது மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே வாழ்க்கை நடைமுறையாக இருந்ததெனப் பலர் எண்ணி வாழ்கின்றனர். சிறப்பாக தமிழர் பண்பாட்டிலே சீதனம் இடைக்காலத்திலேயே இடம் பிடித்துக் கொண்டதை எல்லோருமே மறந்துவிட்டனர். இடையிலே முளைத்த இக் களையைக் கிள்ளிவிடுவதும் எளிதானதே.

இருந்தமையால் உலகமும் அதையே போற்றிப் பேணலாயிற்று.

இத்தகைய ஆணைச்சார்ந்து, அவன் கட்டுப்பாட்டினுள் வாழ்கின்ற பெண்ணுக்கு; அவளுக்கு வாழ்க்கையிலே பொருளாதாரப் பலத்தை ஏற்படுத்துவதற்காக, அவளுடைய பெற்றோர் பொருளைக் கொடுத்து, ஆணுடன் அவளைத் திருமணம் என்ற வாழ்க்கையிலே இணைத்துவிடுகின்ற வழக்கமே தோன்றலாயிற்று. இதுவே வடமொழித் தொடர் நிலையில் 'ஸ்தீரிதனம்' என வழங்கப்பட்டு காலகதியில் சிறீதனம் என மருவித் தமிழிலே சீதனம் என நிலைபெற்றுவிட்டது. தமிழர்பண்பாடு பற்றி அறியத்தருகின்ற பழைய இலக்கிய இலக்கண நூல்களிலே சீதனம் பற்றிய செய்திகள் இல்லை. அதற்கு மாறாக அக் காலத்திலே தமிழரிடையே நிலவிய பிறிதொரு வழக்கமே பழைய இலக்கியங்களில் பேசப்பட்டது. திருமணம் செய்யும் போது பெண்ணுக்கு முலைவிலையாக ஆண் பொருள் கொடுக்கின்ற வழக்கமே இருந்துள்ளது. அந்த முலைவிலையாக நாடு கூடக் கொடுக்கப்பட்டதாகப் பாடற் குறிப்புகள் காணப்படுகின்றன.

சங்க இலக்கியங்கள் இந்நடைமுறையை நன்கு ஆவணப்படுத்

சீதனம் வாங்குதல் இப்போது குற்றம் என்று உணர்த்தப்பட வேண்டிய நிலை உருவாகியுள்ளது. எமது தமிழ்ச் சமூகத்தில் சீதனத்தின் கொடுமைகள் பெருகிவிட்டன. பல தலைமுறையாக மக்களையே வருத்துகின்ற அரக்கனாக இன்று சீதனம் கணிக்கப் படுகின்றது. இந்த அரக்கனின் அழிவிற்கு ஆண்கள் போராடப் பின்னிற்கும் இவ்வேளையிலே, பெண்களே அதைச் செய்ய வேண்டியவர்களாக உள்ளனர். பெண் தனது அறிவாற்றலாலும், அனுபவத்தினாலும் 'சீதனம்' என்னும் சமூகத்திலே புரையோடிப்போன புண்ணுக்கு மருந்திட்டு மாற்ற வேண்டிய மருத்துவராக வேண்டும். கல்வியறிவினால் சீதனத்தின் தேவையின்மை எல்லோருக்கும் விளக்கப்படவேண்டும். இன்று ஆணும் பெண்ணும் சரிநிகராக எல்லா அறிவுத்துறைகளிலும் முன்னேறிவரும் வேளையில், இந்தச் சீதனத்தை முற்றாக அழிக்கின்ற பணியினை பெண்களே செய்ய வேண்டும். தாய்மை நிலையில்

## திருமதி.மனோன்மணி சண்முகதாஸ்

ஆண்களை வழிநடத்துகின்ற பெண்களுக்கு இப்பணி செய்வதும் எளிதே. எனினும் மனத்துணிவும், செயற்றிறனுமின்றி இப் பணி செய்வதென்பது எளிதல்ல. பெண் தன்னளவிலும் குடும்ப நிலையிலும், நாட்டு நிலையிலும், சீதனம் பற்றிய தெளிவினை ஏற்படுத்த வேண்டியவள். அவளுடைய சகல பணிகளுமே 'சீதன ஒழிப்பு' என்ற இலக்கை நோக்கியதாக அமைய வேண்டும். இதற்குரிய இக்காலத்திற்குப் பொருந்தக் கூடிய சில வழிகளை இங்கே எடுத்துரைப்பதும் பொருத்தமாகும். இன்றைய விஞ்ஞான யுகத்திலே, மனித வாழ்க்கை பற்றிய விளக்கங்கள் எல்லோராலும் எளிதாக உணரப்படலாம். அறிவுத்துறையிலே பணியாற்றும் அனைவரும் ஒருங்கிணைந்து 'சீதனம்' என்னும் வழக்கத்தை, வேண்டாத நடைமுறையைப் பற்றி எல்லோரும் உணரும்வகையில் கருத்து நிலையிலே மட்டுமன்றிக் காட்சி நிலையிலும் பல செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். ஆண், பெண் என்ற பாகுபாடின்றி இரு வகுப்பினரும் இணைந்து இதுபற்றி செயற்திட்டங்களை ஆக்கி நடைமுறைப்படுத்த வேண்டும். இதன் ஆரம்ப ஒழுங்காக இன்று சீதனத் தடைச்சட்டம் கொண்டுவரப்படுவதே நன்று. சீதனம் வாங்குதல் மனித தவறுகளில் ஒன்றாக விளக்கப்பட்டால், அது மனிதனால் தவிர்க்கப்படும் நடைமுறையுமாகிவிடும். பாரதி கூறிய புதுமைப் பெண், 'சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' என்றான். இது வெறுமனே புதுமைப் பெண்ணுக்குரிய பண்புகளில் ஒன்றாக மட்டும் அமைந்துவிடாமல் அவளால் நடைமுறைப்படுத்தப் படுகின்ற செயற்பாடாகவும் மாறவேண்டும். சீதன ஒழிப்புச் சட்டத்தைப் பெண்களே முன்னின்று நடைமுறைப்படுத்தவேண்டும். தவறு செய்பவர் யாராக இருந்தாலும் அவர் ஒறுப்புக்குரியவரே. இந் நிலையிலே சீதனம் வாங்கும் நடைமுறையிலே பங்கு கொள்ளும் பெற்றோர், ஆண்கள், திருமணத் தரகர், உறவினர், நண்பர்கள் அனைவருமே அடங்குவர். பெண்களே முன்னின்று இதில் பங்கு கொள்பவரை இனம்கண்டு, அவ்வாறு பங்கு கொள்பவரின் அறியாமையைப் போக்க ஆவன செய்ய வேண்டும்.

பொருள், பணம், நகை, பூமி என்ற பல வடிவங்களிலே தோன்றும் சீதனத்தை சிலவேளைகளில் இனம் காண்பதும் அரிது. நேரடியாக வாங்கும் நடைமுறை தவிர்க்கப்பட்டு, இன்று மறைமுகமாக வாங்கும் - கொடுக்கும் நிலைகளும் உருவாகி உள்ளன. எனவே அத்தகைய மறைமுகமாக இயங்கும் நிலைகளைக் கண்டுபிடித்து இக் குற்றத்தை வேருடன் களைய வேண்டும்.

குடும்ப நிலையிலே பெண், தாய் என்கின்ற தலைமைத்துவ பணியாற்றும் வேளையில், சீதனம் பற்றிய தெளிவான கருத்தினைத் தனது குழந்தைகளுக்குச் சிறந்த முறையில் அறிவூட்ட முடியும். குழந்தைகள் வளர்கின்ற நிலையிலே சீதனம் பற்றிய தெளிவான விளக்கம் மனதிலே பதிய வைக்கப்படவேண்டும். வீடு என்ற வட்டத்திற்கு அப்பால் சமூகம் என்ற நிலையில் பெண்ணினுடைய பங்களிப்பு முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். சமூக மக்களுக்குரிய அறிவூட்டல் நிலையான பணிகளையும் பெண்களே செய்யவேண்டும். சமூக நிறுவனங்களின் தொடர்புடன் சமூகத்தவரை ஒன்றிணைத்து பல செயற்திட்டங்களை அமைத்து அதனை நடைமுறைப் படுத்த வேண்டும். சீதனம் வாங்கவேண்டும் என ஆண்களிடையே நிலவுகின்ற போலியான மதிப்பீட்டையும் அழிக்க வேண்டும். உழைப்பின் பெருமையை யாவரும் உணர்ந்து கொண்டால் சீதன ஒழிப்பும் இலகுவாகும். நாட்டு நிலையிலே சீதன ஒழிப்பு சட்டம் நல்ல முறையிலே நடைமுறைப்படுத்தப்படவேண்டும். திருமணம் தொடர்பான நடைமுறைகளைத் தெளிவாக மக்கள் அறிந்துகொள்ள வகை செய்யவேண்டும்.

சீதனச் சட்டம் நடைமுறையில் பயன்பாடு அற்றது என்றும் பலர் இன்று கருதுகின்றார்கள். ஒரு சட்டம் இயற்றப்படும்போது அதற்குரிய தேவை என்ன என்பது தெளிவாக விளக்கப்படுமானால், அதனை நடைமுறைப்படுத்துவதும் எளிதாக இருக்கும். எனவே இயக்கமாகத் தொழிற்பட்டு எல்லோரும் இணைந்து இச் சட்டத்தை ஆக்குவதுடன் மட்டுமன்றி நடைமுறைப்படுத்தவும் வேண்டும். அதேவேளையில் சமூகத்தின், நாட்டின் சகல மட்டங்களிலும் சீதனம் பற்றிய தெளிவான அறிவூட்டல் நடைபெற வழிசெய்ய வேண்டும். தமிழர் பண்பாடு பேணும் முயற்சியாய், இத்தகைய தமிழர் பண்பாட்டையே கேவலப்படுத்துகின்ற நடைமுறைகளைச் சட்டமூலம் தடைசெய்வது தேவையானதொன்றாகும். பெண்ணின் நல்வாழ்வுக்காக மட்டுமன்றிக் குடும்பம் எனும் கட்டமைப்பின் வளர்ச்சிக்கும், நிலைப்பேற்றுக்கும் இது மிகவும் வேண்டப்படுவதொன்றாகும். சீதனம், விலங்கிட்டு வாழும் பெண்ணின் போலி விலங்கினை உடைத்து, உழைக்கும் கரங்களில் உறுதியான பண்பாட்டு நடைமுறையைக் கையளிக்க இந்தத் தலைமுறையினர் ஆவன செய்யவேண்டும். பெண்ணடிமை என்று பிரித்து நோக்காது ஆணும் பெண்ணுமாய் இணைந்த இனிய குடும்ப உறவு இறுக்கமாய் அமைய இதுவே வழியாகும்.

பெண்களே சீதனம் வாங்குவதில் முன்னிற்கிறார்கள் என்ற கருத்தும் இப்போது நிலவி வருகின்றது. ஆண்குழந்தையைப் பெற்ற தாய்மார் அக்குழந்தைக்காக தாம் செலவிட்ட பணத்தை, அதுவும் அக்குழந்தை வளர்ந்து பெரியவனாகிப் படித்துத் தொழில் பார்க்கின்ற காலம்வரை செலவிட்ட பணத்தை, அவன் திருமணம் செய்கின்றபோது பெண்ணின் பெற்றோரிடம் அறவிட நினைக்கின்றார்கள். இதனால் பெண்ணைப் பெற்றவர்கள் தமது பெண்குழந்தைகள் கல்வியில் திறமைபெற்றுப் பெரிய பணிகளிலே அமைந்திருப்பவர்களாக இருந்தாலும் சரி, பெருந்தொகையான பணத்தைக் கொடுத்தே அவளுக்குத் திருமணம் செய்து வைக்கவேண்டிஉள்ளது. இந்நிலை பெண்களால் மட்டும் மாற்றமுடியாதது. படித்த ஆண்களே திருமணத்தில் தங்களை விற்பதற்குத் தயாராக இருக்கின்றார்கள். 'சீதனம்' வேண்டுவது, தாயின் விருப்பம் என்று தாயைக் காரணமாகச் சொல்லிப் பணத்தை வாங்குகின்றார்கள், இன்றும் படித்த பெண்கள் தங்களுக்குச் சீதனம் வேண்டுமென்று, பெற்றோரை வற்புறுத்துகின்ற நிலையும் காணப்படுகின்றது. ஆண்களும், பெண்ணின் பெற்றோரிடம் பணம் வாங்குவது இழிவான செயல் என்று நினைப்பதில்லை. இத்தகைய நிலைகளில் சீதனம் வாங்குகின்ற நடைமுறை நமது சமூகத்தில் நிலைபெற்றுவிட்டது. எதிர்காலத் தலைமுறையினரும் இதனைத் தொடராவண்ணம் இப்போதே தடுக்கவும் வேண்டியுள்ளது. ஆண்களும் பெண்களும் தத்தம் அறிவாற்றலைப் பயன்படுத்தி இச்சீதனம் என்கின்ற நடைமுறையை நமது சமூகத்திலிருந்து அகற்ற வேண்டும்.

இன்றைய சமூகத்திலே இளைஞர் பலர் சமூகப் பணி செய்வதிலே ஆர்வமுடையவர்களாக இருக்கின்றார்கள் இவர்களின் சமூகப் பணியினை இச் சீதன ஒழிப்புக்கு எனத் திட்டமிட்டு கொடுத்தல் நன்று. நாட்டைப் பாதுகாக்கும் பணியுடன் நமது பண்பாட்டுப் பாதுகாப்பு பணியும் சேரவேண்டும்; பெண்ணை இழிவுபடுத்திக் காட்டும் இலக்கியங்களின் உண்மை விளக்க நிலையை எல்லோருக்கும் எடுத்துக் கூறவேண்டும். சீதனம் இடைச்செருகல் நிலையில், இலக்கியத்தில் இடம்பெற்றதொரு அம்சமாகும் என்பதை அனைவரும் உணர்ந்தால், சீதனம் என்ற இடைக்கால விலங்கு பெண்ணின் கரத்திலிருந்து கழன்றுவிடும். ■

நன்றி:- ஈழநாதம்.
திருமதி. மனோன்மணி - சண்முகதாஸ்

**ஏர் வரிசை கண்டு ஏற்றமுடன் வாழ்ந்த இனம்**
**சீர் வரிசை கேட்டு சேற்றினிலே விழலாமா ?**

**உழைத்து வாழும் உயர்ந்த மனிதன்**
**விலைக்கு தன்னை விற்றிட விரும்பான்**

**சீதனப் பிசாசின் சிரத்தினை அறுக்க**
**பேதமை விட்டே புறப்பட்டு வா**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறு கதை

# சுவடுகள் தொடரும்

காரை-சக்தி

உடலைச் சில்லிட வைக்கின்ற மார்கழி மாதத்துக் குளிர்! பனிப்புகார்கள் இலைகளோடு உறவாடி பனித்துளி முத்துக்களை முக்குளித்து அவற்றை மண்ணிலே விதைக்கின்றன! மனித உடல்களோடு மோதுகின்ற குளிர், தசை நார்களைக் கடந்து எலும்புகளை ஆட்டங்காணச் செய்தது.

பனிக்கட்டிகளோடு வாழ்ந்துவிட்டு வரும் விஜிக்கு சொந்த நாட்டின் கனதியற்ற குளிர் ஒருவித சந்தோசத்தை மூட்டியது. நெஞ்சுக்கெதிரே இரு கைகளையும் இறுகக் கட்டியபடி கிடங்கு முடங்குகளில் ஆடி அசைந்தபடி ஓடிச் செல்லும் வாகனத்துக்கு ஏற்ப தன்னுடலும் ஆடுவதை அவன் தனக்குள்ளேயே ரசித்துச் சிரித்தான். கண்களை வெளியே திருப்பி, அழகு காட்டி ஓடுகின்ற இயற்கைகளின் மீது படியவிட்டான்.

என்ன அழகுமிக்கது எனது தாய் நாடு! இப்படித்தானே எனது கிராமமும். .. இல்லை இல்லை! இதனிலும் மிகவும் அழகாக சலசலத்து ஓடும் ஓடைகள், அதனருகே கவிபாடும் சோலைகள், கதிர் சாய்த்து நிலத்தை முத்தமிடும் வயல்வெளிகள், கொஞ்சிப் பேசியே... செவ்வான ஓரத்தை வட்டமிடும் புள்ளினங்கள், இன்னும் எத்தனை...! உம்...! இவையெல்லாம் மீண்டும் கிடைக்குமா?

தவிப்பு, நெஞ்சிலே தீக்குழம்பை ஊற்றி வேதனையைத் தருகிறது. அவனையும் மீறி கண்ணீர் நிரம்பிய கண்களை மெதுவாகத் துடைத்து விட்டுக் கொண்டான்.



"என்ன தம்பி, கண்ணிலே தூசு பட்டுட்டுது போல...?" அவனுடைய மௌனத்தை உடைத்து, கதைக்க வழிகிடைத்த மகிழ்ச்சியுடன் பக்கத்திலிருந்த பெரியவர் தொடங்கினார். அவன் "இல்லை" என்பதுபோல் தலையாட்டியதையும் கவனிக்காதவராய் அவர் தொடர்ந்தார். "என்ன செய்யிறது தம்பி! அவன் போடுகிற குண்டுகளால ஒரு பக்கம், மண்ணெண்ணையில முக்கி முக்கி ஓடுகிற வாகனங்களால ஒரு பக்கம்., அவன் சுட்டும் வெட்டியும் சாக்காட்டுகிற பிணங்கள் உரிய வழியில அடக்கம் பண்ணாத்தால ஒரு பக்கம் எண்டு, எங்கட சூழல் பயங்கரமா மாசு படுகுது தம்பி! உங்க பாரன் எத்தனை வீடுகள் எரிஞ்சும், சிதைஞ்சும் கிடக்கெண்டு! உதுக்க எத்தனை உயிர்கள் பலியானதெண்டு தெரியுமே? இப்படித்தான்..." பெரியவர் தொடர்கிறார்.

அவனது உள்ளமோ "அம்மா அப்பா" என அலறத் தொடங்கியது. எண்ணமோ பதினைந்து வருடங்கள் பின் நோக்கிப் போகிறது.

இயற்கையின் எழிலும், இனிய பிள்ளைப்பருவமும் நிறைந்த வயது. "விஜி" எனச் செல்லமாக அழைக்கப்படும் விஜயராஜ், அவனது பெற்றோருக்கு தவமிருந்து கிடைத்த ஒரே பிள்ளை. அவனது தாய் தந்தை அவன் மீது வைத்திருந்த அன்பு அளவிடற்கரியது! இவனுக்குப் பெற்றோர் மீது உள்ள பாசமோ சொல்ல வேண்டியதில்லை.

இவனின் வீட்டிற்கருகே உத்தியோக நிமிர்த்தம் சாரங்கினியி ன் குடும்பம் குடிவந்தது. சாரங்கினி! அழகில் இவனுக்குச் சளைத்தவள் அல்ல. இவனை விட இரண்டு ஆண்டுகள் குறைவானவள். இவனைப் போன்றே அவளும் குடும்பத்திற்கு ஒரே பிள்ளை. பத்தே வயது நிரம்பிய சாரங்கினியின் பள்ளி வழித்துணைவனான விஜி ஊர்சுற்றிக் காட்டுபவனுமாகினான். அதிக வயது வித்தியாசமின்மை இவர்களிடையே அன்பு கனிந்த நட்பை உருவாக்கியது. இனிமையான அந்த நாட்களில் தான் நாட்டில் இனக்கலவரம் வெடித்தது! அது இவர்களின் கிராமத்தையும் விட்டுவைக்கவில்லை.

அன்றும் வழமை போலவே விடிந்தது. இவனும் சாரங்கினியும் கைகோர்த்தபடி பாடசாலைக்குச் சென்றனர். வீதியில் ஏற்பட்ட பதற்றத்தைக் கவனிக்கும் நிலையில் அவர்கள் இருவரும் இல்லை. தம்முள் கதைத்துச் சிரித்தபடி சென்ற அந்தச் சிறு உள்ளங்களும் தம்மை ஒரு சோகம் சூழப் போவதை அறியாமலேயே சென்றன. திடீரென ஒரு குண்டுச் சத்தம் -ட்ரக் வண்டிகளில் இருந்து இராணுவம் குதித்துக் கொண்டிருந்தது. நிலைமையை உணர்ந்த விஜி, சாரங்கினியை இழுத்துக் கொண்டு குறுக்கு வழிகளால் வீட்டை நோக்கி ஓடினான்.

இதோ வீட்டை நெருங்கியாயிற்று! ஆ! என்ன அது. அவனின் வீட்டுப் பக்கமிருந்து ஓலங்கள் வருகின்றனவே! அதோ! சாரங்கினியின் அப்பா அம்மா கலக்கம் நிறைந்த விழிகளுடன் இவர்களை நோக்கி ஓடிவருகின்றனர். தனது தாய் தந்தையைத் தேடிய விஜியின் விழிகள் அவனது வீட்டில் நிலைகுத்தி நின்றன.

அங்கே! அவனது வீடு தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தது. அதனைச் சூழ காடையர்கள் வெறியாட்டம் போட்டுக் கொண்டிருந்தனர். 'அம்மா அப்பா' என அவன் அலறத் தொடங்கினான்! அவனையும் இழுத்துக் கொண்டு சாரங்கினியின் பெற்றோர்கள் ஓடினார்கள். இவர்களது ஓட்டம், பாதுகாப்பெனக் கருதிய காட்டினுள் வந்து நின்றது.

எல்லாவற்றையும் இழந்து இவன் அழுது குழறியபடி சாரங்கினியின் அப்பாவைப் பார்த்தபொழுது, "தம்பி இனி உனக்கு எல்லாம் நான் தான் அப்பன். உன்ர அம்மா, அப்பாவை அவங்கள்... அவங்கள்" தழுதழுத்த குரலுடன் அவனை அவர் இறுகக் கட்டியணைத்தார்.

கடந்த கால நினைவுகளால் நெஞ்சுக்குள் அழுது கொண்டிருந்தவனின் தோளைத் தட்டிய பெரியவர், "பாத்தியே தம்பி! இப்படி எத்தனை பேர் தாய் தேப்பனை இழந்து அநாதைகளாய் நிற்குதுகளெண்டு. இதுகளின்ர எதிர்காலம் என்ன?" நினைவு கலந்த இவன் வெளியே பார்த்த போது கந்தல் உடையணிந்த சிறுவர்கள் சிலரைக் காண்கிறான். பெரியவர் நாட்டின் அவலங்களைத் தொடர்ந்திருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்கிறான் "... அவையின்ர எதிர்காலம் என்னவோ? ஆனால் எனக்கொரு எதிர்காலம் இருக்கு. எனக்கு வாழ்க்கைத் துணையாக வர என்ர சாரங்கினி, வாழ்த்துத் தந்து வழிகாட்ட அவளின்ர அப்பா, அம்மா. இன்ஜினியராகி வெளிநாடுகளில் சுளையாக உழைக்கும் என்ர திறமை" என்ற எண்ணம் அவனுள் நம்பிக்கைகளை ஏராளமாக விதைக்க, அவன் எதிர்காலத்தை வரவேற்பதைப் போலச் சிரித்தான்.

"என்ன தம்பி சிரிக்கிறாய்? வெளிநாட்டிலிருந்து வாற உனக்கு எங்கட மண்ணின்ற அவலங்கள் சிரிப்பா இருக்கு என்ன?" அவனது எண்ண ஓட்டங்களைப் புரியாத அந்தப் பெரியவர் தொடர்ந்தார். "தம்பி இப்ப ஏன் இஞ்ச வந்தனி எண்டு எனக்குத் தெரியும்! இஞ்ச ஒரு வடிவான பெம்பிளைப் பிள்ளையைப் பார்த்து முடிச்சுக் கொண்டு போகத் தானே? ஓண்டு சொல்லுறன் கேட்டுக் கொள் தம்பி. இந்த மண் முன்ன மாதிரி இல்ல. இந்த நாட்டுப் பெண்டுகளும் முன்ன மாதிரி இல்ல ஓ!"

"இதென்ன விசர்க்கதை கதைக்குது கிழவன்! எனக்காகச் சாரங்கினி காத்திருக்கிறது இந்தக் கிழவனுக்கு எப்படித் தெரியும்? மூண்டு வருசமாய் இந்த நாட்டுப் பிரச்சினையால் கடிதத் தொடர்பும் இல்லை எண்டபடியால, அவள் துடிச்சுப் போடுவாள் எண்டு ஓடியாறன்! இவர் விழல் கதை கதைக்கிறார்." அவன் தனக்குள் முணுமுணுக்கிறான். அவனையும் மீறி கிழவனின் அறியாமையை நினைத்துச் சிரித்தும் விடுகிறான்.

"என்ன தம்பி அப்ப நீ கல்யாணம் கட்ட வரேல்லப் போல. சரி அதை விடும். போட் ஏறுற இடம் வந்திட்டுது. கெதியா இறங்கும் ஓடிப்போவம்." பெரியவரின் வேகம் அவனையும் தொற்றிக் கொள்ள சுறுசுறுப்படைகிறான்.

போட் ஏறும்வரை படும் கஸ்டங்கள், அதனையும் மீறி மக்களிடம் காணப்படும் சகிப்புத் தன்மை, புத்துணர்ச்சி, புதுவேகம் எல்லாமே அவனுள் வியப்பையும், சிந்தனையையும் ஏற்படுத்துகின்றன. ஒருவாறு போட்டில் இடம் பிடித்து அந்தப் பெரியவரின் அருகிலேயே அமருகிறான்.

"தம்பி முதலெண்டால் இதால போறது சரியான பயம். இப்ப எங்கட பிள்ளையள் கடற்புலிகள் நிக்கிறதால எங்களுக்கொரு பயமுமே இல்லை. அத்தோட எங்கட பிள்ளையள் பூநகரியில குடுத்த அடிக்குப் பிறகு இவை இஞ்சால வாறது இல்லை ஓ..." பெரியவர் பெருமிதத்தோடு மெல்லச் சிரிக்கிறார். "ஓ! நான் வெளிநாட்டுக்குப் போய் எட்டு வருசமாய்ச்சு... இந்த மண்ணையும் அதின்ர மாற்றத்தையும் அறியாமல், உழைக்கிறதிலையும் சொகுசு வாழ்க்கை வாழ்கிறதிலையும் என்ர காலத்தைக் கடத்திப் போட்டன். இந்த மண்ணில ஒரு முக்கியமான மாற்றம், ஒரு எழுச்சி எழும்பித்தான் நிற்குது!" அவனால அதை தெளிவாக இனங்காண முடியவில்லை.

"இம்..! எனக்கென்ன இன்னும் கொஞ்ச நாள் இங்க இருப்பன். திரும்ப சாரங்கினியோட வெளிநாட்டுக்குப் பறந்திடுவன். எனக்கென்னத்துக்கு இதுகளைப் பற்றி" அவன் தன் இயலாமையை இவ்வாறு எண்ணி தன்னைத் தேற்றிக் கொண்டு மனதை வேறு திசைகளில் திருப்புகின்றான். ஆளையாள் தெரியாத இருட்டு. நட்சத்திரம் மட்டும் அடிக்கடி கண் சிமிட்டுகிறது. குளிர் காற்றோடு கடல் தண்ணியும் உடலை நனைக்கின்றது.

"தம்பி இந்தக் கடலிலை எங்களைக் காக்கிறதுக்காக எத்தனை பிள்ளைகளின்ர உடல் காற்றோடு கலந்தது தெரியுமே! மக்களுக்காக அந்தப் பிஞ்சுகள், எங்கட... எங்கட... குஞ்சுகள்" பெரியவர் நாத்தளுதளுத்தார். நீண்ட நேர அமைதியின் பின் ஒரு பெருமூச்சை விட்டு அவர் தொடர்ந்தார் "ஆம்பிள, பெம்பிள, குஞ்சு குருமன் எண்ட பேதமில்லாம எத்தனை பேரை அந்தக் கயவர் வந்து வெட்டியும், சுட்டும் கொண்டவங்கள்! அவங்களைக், கொண்டு அழிச்சு எங்கட பிள்ளையள் அவங்களுக்கு நல்ல பாடம் படிப்பிச்சிட்டினம். எங்கட குஞ்சுகள் தெய்வங்களாப் போச்சுதுகள். தெய்வ.." வீரத்தின் வேகத்தைச் சோகத்தின் சாரம் தாக்க, வார்த்தைகளைத் தேடிக்களைத்து மௌனமானார் அந்தப் பெரியவர்.

அவரின் மௌனமே இவனுக்கு ஆயிரம் கதைகளைச் சொல்லுகிறது. அவனிடமும் நீண்ட பெருமூச்சொன்றே பதிலாக வருகிறது. கடல் பயணம் முடிய தரையில் கால் பதிக்கிறான். எல்லோரிடமும் ஒரு நிம்மதிப் பெருமூச்சு! இவன் போகும் வழியிலேயே பெரியவர் இடமும் அமைந்திருப்பதால் இருவரும் இணைந்து ஒரு ஓட்டோவை அமர்த்துகின்றனர். ஒரு வான் நிறையக் கூடிய அளவு அவன் கொண்டு வந்த பொருட்கள் வழியில் இராணுவச் சோதனைச் சாவடியில் தேய்ந்ததால் ஒரு ஓட்டோவினுள்ளேயே அவை அடங்குகின்றன. எவ்வளவு கனவுகளோடு எதிர்பார்ப்புகளோடு "ஒவ்வொரு பொருட்களாக எடுத்துக் கட்டிவந்தேன். எல்லாம்.... வேண்டாம். இப்ப நான் சாரங்கினியைக் காணப் போறன். மாமா மாமியைப் பார்க்கப் போறன். அந்தச் சந்தோசம் ஒண்டே போதும்."

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சிறிமாவோவின்....

இடத்தை வழங்கும் என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலை கட்சியில் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா நீடிப்பாரா அல்லது அனுராவைப் போல வெளியேற்றப்படுவாரா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது. இது எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படும் எனலாம். ஒரு வேளை திருமதி சிறிமாவோ தனக்குப் பின்னால் வாரிசாக திருமதி சந்திரிகா வருவதற்கு ஒத்துழைப்பு வழங்கினால், திருமதி சந்திரிகாவின் செல்வாக்கு வளருவதைக் கண்டு கொள்ளாமல் இருக்கக் கூடும். அல்லது தனது கட்டை மீறி திருமதி சந்திரிகாவின் செல்வாக்கு வளருமேயானால், அரசியலில் இருந்து ஓய்வு பெறுகின்றேன் என்று திருமதி சிறிமாவோ அறிவிக்கும் சாத்தியக்கூறுகளும் இல்லாமல் இல்லை. ■

## சொத்தி உபாலி யார்?...

ஐ. தே. க. இப்போது உள்ளது. எதனால் குறைந்த பாதிப்பு என்பதைத் தீர்மானிக்கவேண்டியதே, டி. பி. விஜேதுங்காவின் பொறுப்பாக இருக்கின்றது.

புதைகுழிகள் தோண்டி எடுக்கப்பட்டு சொத்தி உபாலி உட்பட தொடர்புடைய அனைவரதும் முகத்திரைகள் விலக்கப்படுமா அல்லது புதைகுழிகளின் மீது கட்டடம் அமைக்கப்படுமா என்பது இன்னமும் தெளிவாகத் தெரியவரவில்லை. எனினும் புதைகுழிகள் தோண்டப்பட்டால், பூதம் கிளம்பும் என்பதும் இப்பூதத்தைக் கட்டுப்படுத்துவது தேர்தல் ஆண்டில் கடினம் என்பதும் கவனிக்கத்தக்கது. புதைகுழியின் மீது கட்டடம் எழுப்பப்பட்டால் மக்கள், அரசியல் நாடகத்தில் ஐ. தே. கவின் பாத்திரத்தைப் புரிந்து கொள்வார்கள் என்பது கண்கூடு. இந்நிலையில் ஐ. தே. கவின் நிலை " இருதலைக்கொள்ளி எறும்பு போன்றுள்ளது" என்பது மட்டும் 'வெள்ளிடைமலை'.

## மலையகக் கல்வியியல் கல்லூரிக்கு சிங்களவர் அதிபராக நியமனம்

மலையகத் தமிழ் மக்களின் கல்வியியல் கல்லூரி எனப்படும் சிறீபாத கல்வியியல் கல்லூரியில் 75 வீதமான மாணவர்கள் தமிழர்கள். மற்றைய கல்வியியல் கல்லூரிகளில் எந்தமொழிபேசும் மாணவர்கள் பெரும்பான்மையாக உள்ளனரோ அந்தமொழிபேசும் அதிபரையே நியமிக்கின்றோம் என சிறீலங்கா கல்வித்திணைக்களம் கூறிவந்தது. ஆயினும் மலையகத்தின் இக்கல்வியியல் கல்லூரியில் அந்தமுறை பின்பற்றப்படாமல், தமிழர் ஒருவருக்குப் பதிலாக சிங்களவர் நியமிக்கப்பட்டிருப்பதை மலையகத் தமிழ் அமைப்புக்கள் கடுமையாகக் கண்டித்துள்ளன. ■

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உலக ஒருமைப்பாட்டுச்சபை முயற்சி

வடக்கு - கிழக்குப் போரை முடிவுக்குக் கொண்டுவரவும் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல்தீர்வு காண்பதற்கும் உலக ஒருமைப்பாட்டுச் சபை என்ற அமைப்பு முயற்சித்து வருகின்றது. சமயத் தலைவர்கள், கல்விமான்கள், மற்றும் நிபுணர்களை உள்ளடக்கிய இச்சபை அரசியல் தீர்வைக் காண உடனடி நடவடிக்கை எடுக்குமாறு சிங்கள அரசியற் கட்சிகளைக் கேட்டுள்ளது.

இலங்கையில் போரை முடிவுக்குக் கொண்டுவருவதில், அரசியல் கட்சிகளுக்கும் உலக நாடுகளுக்கும் ஒரு பொறுப்புள்ளது. நாட்டின் முன்னணிப் பிரசைகளின் மேற்பார்வையின் மூலமாக, பாரபட்சமில்லாதது என்ற உத்தரவாதமுடைய அமைதிகாப்புப் படை ஒன்றையும் இச்சபை வலியுறுத்தியுள்ளது. அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்வதற்காக இலங்கை அரசியலமைப்பு திருத்தியமைக்கப்பட வேண்டும் எனக் கூறியுள்ள இக்குழு, தனது அறிக்கையை சிங்கள ஆளும் கட்சி, எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளது. இக்குழுவில் இரு பௌத்த தேரர்கள், சிலாபம் ஆயர், கொழும்பு ஆயர், சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் அபயக்கோன், இனத்துவ ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையப் பணிப்பாளர் கலாநிதி ராதிகா குமாரசாமி, முன்னாள் ராஜதந்திரி குசையின், சைவ மகா சபைத் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் உட்பட பலர் இடம்பெற்றுள்ளனர்.

ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தமது திட்டங்கள் குறித்து தெளிவாகக்கூற வேண்டும் என இக்குழு வலியுறுத்தியுள்ளது. ■

## புல்மோட்டையில் அதிரடி 5 இராணுவத்தினர் பலி!

### □ உழவு இயந்திரமும் தகர்ப்பு

திருமலை மாவட்டத்தில், புல்மோட்டைப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரின் பூரணகட்டுப்பாட்டுப் பகுதி எனக்கூறப்படும் பகுதிக்குள், விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் ஐந்து படையினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். படையினர் பயணம் செய்த உழவு இயந்திரமும் புலிகளால் தகர்க்கப்பட்டது.

அண்மையில் புல்மோட்டை ஏழாம்கட்டை என்னும் பகுதியிலேயே புலிகள் இத்துணிகரத் அதிரடித் தாக்குதலை நடத்தினர். புலிகளின் இத்தாக்குதலை சிறீலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்ததாக பி.பி.சி. தெரிவித்தது. ஐந்துபேர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் அது மேலும் தெரிவித்தது.

இதேவேளை, கிழக்கு இலங்கைப் பகுதியில், சமீபத்தில் புலிகள் தாக்குதலைத் தொடங்கியுள்ளனர் என்றும், அந்த வாரத்தில் மட்டும் 12 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. ■

## மனித உரிமைமீறலில் ஈடுபட்டோருக்கு விருது

மனித உரிமைமீறல்களில் ஈடுபட்ட பொலிஸ்காரர்களுக்கு சிறீலங்கா அரசு விருது வழங்கிக் கௌரவித்திருப்பதாக கிறிஸ்டியன் வேக்கர் என்ற சஞ்சிகை தெரிவித்துள்ளது.

1980 ஆம் ஆண்டிலிருந்து 1992 ஆம் ஆண்டுவரையான காலப் பகுதியில் 87 பொலிஸ் அதிகாரிகள் இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர் எனவும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன எனவும், இப்பொலிஸ் அதிகாரிகள் பல மனித உரிமைமீறல்ச் சம்பவங்களில் ஈடுபட்டமை தெரியவந்திருக்கின்றது எனவும் அச்சஞ்சிகை மேலும் தெரிவித்துள்ளது. ■

# சுவடுகள் தொடரும்...

ஓட்டோப் பயணம் தொடர்கிறது. பெரியவரின் விளக்கங்கள் இந்த மண்ணின் மாற்றத்தை அவனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் புரியவைக்கின்றன. 'உண்மைதான் இந்தப் பொருளாதாரத் தடையுக்கை பஞ்சத்திலயும் பசியிலயும் பாதிச் சனம் செத்திருக்கும் எண்டு நினைச்சன். ஆனா சனம் எப்பிடி நிமிர்ந்து நிற்குது. என்ர மண் பாரிய மாற்றம் தான் கண்டு நிற்குது. இஞ்ச பாரன் வலு சின்ன வயதுப் பெடியள் கையில துவக்கோட போகுதுகள். அதுகள் எதிரியை எதிர்பார்த்து எல்லையில நிற்குதுகள். அங்கை! வயல்ல உணவு உற்பத்தியில சின்னப் பிள்ளையளும் ஈடுபடுதுகள்'!

ஒவ்வொரு காட்சியும் அவனின் இதயத்தில் இடித்தன. "இவையெல்லம் சேர்ந்து என்ர நாட்டைக் காப்பத்த நான்... ஆ! இதென்ன இவ்வளவு பொம்பிளைப் பிள்ளையள் துவக்கோட போயினம்? யாழ்ப்பாணத்தின்ர கிடுகுவேலிக் கலாச்சாரம் எங்கை போட்டுது? சனமும் இதைப் பற்றிக் கவலைப்படேல்லையே? சீ! நான்தான் மாறேல்ல" அவன் தன்னுள் வெட்கினான். தான் இழந்தவைகளை எண்ணி ஏங்கினான். "இந்த மண்ணிலேயே இருந்திருந்தா இப்ப நானும் தலைநிமிர்ந்து நடந்திருக்கலாம். நாட்டுக்காக பொம்பிளையள் களத்திற்குப் போக நாங்கள்...!

அவனுள் விடுதலை உணர்வை விதைத்த பெரியவர் விடை பெறுகிறார். அவருக்கு நன்றியுடன் விடை கொடுத்தான். மேலும் தொடர்ந்த எண்ண ஓட்டம் வீட்டை நெருங்கியதும் தடை பெறுகிறது. புரியாத ஒருவகைப் புத்துணர்வு அவனுள் புகுந்து கொள்கிறது. சாரங்கினியிடம் தன்னுள் ஏற்பட்ட அந்த மாற்றத்தைக் கதை கதையாகச் சொல்லத் துடித்தான்.

துள்ளிய மனதை மெதுவாக அடக்கியபடி வீட்டினுள் நுழைந்து "மாமா மாமி" என்று குரல் கொடுத்தான். சாரங்கினியின் பெற்றோர் குரல் கேட்டு வெளியே வந்து இவனை அடையாளம் கண்டதும், மகிழ்ச்சியும், பாசமும் எனப் பல்வகை உணர்ச்சிகளால் வார்த்தைகள் இன்றித் திக்குமுக்காடினர். பின்னர் வரவேற்பு, வழமையான குசலங்கள், விசாரிப்புக்கள்..... அவனின் வாய்தான் தன்பாட்டிற்கு அசைந்ததே தவிர, கண்களும், மனமும் சாரங்கினியைத் தேடி அலைந்தன. அவளைக் காணக்கிடைக்காத துடிப்புடன், அவன் தவிப்பதைப் புரிந்து கொண்ட அந்தப் பாச உள்ளங்கள் அதைப் புரியாததுபோல நடித்தன.

கடைப்பிடித்த பொறுமையைத் தொடரத் திண்மையற்ற தவிப்போடு, "மாமி சாரங்கினி எங்க? ஏதேன் படிக்கப் போட்டாவோ இல்ல.." அவன் தொடராது நிறுத்திவிட்டு அவர்களைப் பார்வையால் அளந்தான். சாரங்கினியின் தாயார் ஒரு கடிதத்தை எடுத்து வந்து அவனின் கைகளில் திணித்துவிட்டு, கணவரோடு சற்று விலகிச் சென்றார். படபடத்து, நெஞ்சும் துடிக்க கடிதத்தை உடைத்து அவசரமாக வாசித்தான் விஜி.

"என்றும் அன்புடன் விஜிக்கு;

உன் சாரங்கினி எழுதிக் கொள்வது. நீ எப்படியும் இந்த மண்ணிற்கு என்னைப் பார்க்க ஓடி வருவாய் எண்டு எனக்குத் தெரியும். அப்ப நான் இருப்பனோ தெரியாது. விஜி! உனக்குத் தெரியுமா உன்னைப் போன்ற எத்தனை விஜிக்கள் இந்த மண்ணின் விடிவிற்காக மரணித்துக் கொண்டிருக்கினமெண்டு. நாளைக்கு எனக்கும் அந்த நிலை வரலாம். என்னை இழந்து என்னைப் பெத்தவை தவிக்கலாம். எத்தனையோ இழந்தபின்னும் எங்கட மண் நிமிர்ந்து நிற்குது. இதுக்குக் காரணம் என்ன? இனிவரும் சந்ததியாவது சுதந்திரமா, சுபீட்சமா இந்த மண்ணில வாழவேணும். அதுக்காக நாங்கள்எங்களை ஆகுதியாக்கத் துணிச்சிட்டம். எங்களை வழிநடத்த எங்கட அண்ணன் இருக்கிறார். அவற்றை பாதையில நானும் போறன்.

இந்த மண்ணில இருந்தா, நீ என்ன செய்வாயோ, அந்தக் கடமையை நிறைவேற்றப் போறன். விடியலைத் தேடும் எனது பயணத்தில, நான் வித்தாகலாம். அல்லது முடிவில் திரும்பி வரலாம்!

அன்புடன் சாரங்கினி

அவளது இலட்சியக் கருத்துக்களை கிரகிப்பதைவிட, சாரங்கினி தன்னை விட்டுக் பிரிந்துவிட்டாள் என்ற எண்ணமே மேலோங்க, பித்துப் பிடித்தவனாக கடிதத்துடன் அறையினுள் சென்று, கட்டிலில் விழுந்தான். மீண்டும் மீண்டும் கடித வரிகளை மனனஞ் செய்தான்.

சூழலின் மாற்றங்கள் அவனைத் துணுக்குற வைத்தன. ஒரு நொடி கூட தமது மகளைப் பிரிய ஒவ்வாத மாமன், மாமி அவளை நாடு காக்க அனுப்பிவிட்டு பெருமிதத்துடன் நிற்கின்றனர். ஓ! புரிகிறது இந்த மண் கண்டுள்ள பாரிய மாற்றம், எழுச்சி மக்களின் மனங்களில் கொழுந்துவிட்டெரியும் இனவீரம், மான உணர்வு, சுதந்திர விடியலின் வேகம்....

அவனின் சிந்தனை அலைமோதலின் முடிவில் ஒரு தெளிவு பிறக்கிறது. ஆனால் முடிவு. ஓ! அதுதான் இன்னும் உறுதியாகவில்லை.

இரவு வந்தது. வழமையான குண்டுச் சத்தங்களைக் காற்று கந்தக நெடியுடன் கொண்டும் வந்தது. "சண்டை நடக்குது. ஆரார் பெத்ததுகள் சாகுதுகளோ! எத்தனை பேர் பரிதவிக்கினமோ" என அவனது மாமி வாய்விட்டு ஏங்கியது கேட்டது. வேங்கைகளின் வீரம் கண்டு நிலவும் கருமுகிலின் பின்னே ஒழிந்துகொள்ள வானமோ மகிழ்ச்சியால் ஆனந்தக் கண்ணீரை சோனா மாரியாகப் பொழிந்தது. அவன் தன்னையறியாமலேயே உறங்கிவிட்டான்.

நேரம் பிந்தியே நித்திரை விட்டெழும்பியவன் அலுப்புடன் முன் கதிரையில் வந்து அமர்கின்றான். கேற் திறந்து சத்தம் கேட்க நிமிர்ந்தவன் இரு பெண் போராளிகள் வரவே சாரங்கினி வருகிறாளோ, என எதிர்பார்த்து ஏமாந்தான். அவனைக் கண்டு தாமதித்து பின்பு அவர்கள் "ஐயா! ஐயா!" என மாமாவை அழைத்தனர். உணர்ச்சியற்ற அவர்களது முகத்திலிருந்தும் குரலிலிருந்தும் எதையும் உணர முடியாது அவன் தவித்தான்.

"வாங்கோ பிள்ளையள்.." மாமா தான் அழைத்தார். "இல்லை ஐயா... ர்த்திரிச் சண்டையில சங்கீதாவுக்குக் கொஞ்சம் காயம்..." சாரங்கினிதான் சங்கீதா என்பதை உணர்ந்த அவன் அதிர்வடைகின்றான். அவர்கள் கதையை முடிக்குமுன், "பிள்ளையள் இந்த மண்ணிற்காக எத்தனையோ தாய் தேப்பன் தங்கட பிள்ளையள அனுப்பினது போலத்தான் நானும் அனுப்பினனான். பிள்ளையின்ர பொடி எப்ப வருமெண்டு சொல்லுங்கோ. இல்லை அதுவும் கிடைக்காட்டி விடுங்கோ. பொடியை எடுக்க எண்டு போய்ச் சாகாதைங்கோ. அவள் நிண்டு போராடின மண்ணிலேயே அவளின்ர உடல் உரமாகட்டும்" என்ற சாரங்கினியின் தந்தையை ஆதங்கத்துடன் பார்த்த அவர்கள் விடை பெறுகின்றனர். ஆயிரம் மின்னல்கள் அவனுள், வெட்டி வெளிந்தன....! அவனுள் சாரங்கினியின் குரல் ஒலிக்கத் தொடங்கியது....

அவனது முடிவு! உறுதியாகிவிட்டது. அவன் மாமாவைப் பார்த்தான். குலுங்கி அழும் அந்த உள்ளங்களிடம் கண்களால் விடைபெற்றான்! "மாமா மாமி! சாரங்கினி சாகேல்ல. இனி அவள் என்னில வாழ்வாள்!" என்றவன் அவளின் சுவடுகளைத் தொடர்ந்து, அண்ணனின் தலைமையில் விடியலைத் தேடி, விரைந்து சென்றான். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம்

**1990** யூன் மாதம் தொடங்கிய போரின் பின்விளைவாக எழுந்த சூழ்நிலைகளிலே தமிழீழத்தின் பெரும்பாலான தொழில் முயற்சிகள் முடங்கிச் செயலற்றுப்போயின. இப்படியாக முடங்கிப்போய்விட்ட தொழிற்றுறைகளுக்குப் புத்துயிருட்டி, தமிழீழத்தின் கைத்தொழில் மேம்பாட்டுக்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காகத்"தமிழீழத் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம்" உருவாக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. செயற்படச் செய்யக்கூடிய அதிகபட்ச எண்ணிக்கையிலான நிறுவனங்களை மீள இயங்கச் செய்வதன் மூலம், எம் நாட்டின் உற்பத்திகளைப் பெருக்கி அதிக மனிதவளப் பயன்பாட்டை ஏற்படுத்தியும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக இந்நிறுவனம் உழைத்து வருகிறது.

மக்களின் நுகர்வுக்கென உயர்தரத்தில் பொருள்களை எம் மண்ணிலே உற்பத்தி செய்வதனை உறுதிப்படுத்துவதன் மூலம், உயர்தரம்கொண்ட உற்பத்திப் பொருட்களை மக்கள் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை உருவாக்குவதும் இந்நிறுவனத்தின் இன்னொரு முக்கிய பணியாக இருக்கப் போகிறது.

இங்கு ஏற்கனவே உள்ளூர் பொருட்கள் என்றால் தரமற்றவை என்ற கருத்து நிலவிவந்தது. இந்தக் கருத்தை தற்போது விற்பனைக்கு வரும் உற்பத்திகள் சிறிது சிறிதாக மாற்றிக்கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையில் சிங்களப் பேரினவாத அரசு நடைமுறைப்படுத்தும் பொருளாதாரத் தடைகளின் பின்னணியில் தோன்றியுள்ள நெருக்கடி நிலையில், எமது உற்பத்திகளின் எட்டக்கூடியதாக உள்ள தரம் கீழே சரிந்தால் விடிவில் நம்பிக்கையோடு வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களின் நம்பிக்கை சிதறுண்டுபோகும். எமது எதிர்கால சந்ததியினருக்காக நாம் இந் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்திருப்பதும் பொருளில்லாமல் போய்விடும்.

இவ்வகை வீழ்ச்சியில் இருந்து எமது மண்ணின் உற்பத்திகளைப் பாதுகாக்கவும், அதன் மூலம் எமது சந்ததியினரைப் பாதுகாக்கவும், எமது உற்பத்திகளின் தனித்துவத்தைப் பேணவும் 'தர நிர்ணயம்' என்பது ஒரு தவிர்க்க முடியாதவிடயம் என்பதை எவரும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

முழுத் தமிழீழம் தழுவிய கைத்தொழில் கொள்கையை நடைமுறைப்படுத்துதல், உற்பத்தியாளர்களின் உற்பத்திகளின் தனித்துவத்தைப் பேணிப்பாதுகாக்க வர்த்தகக் குறிகளைப் பதிவு செய்தல் (Registration of Trade Marks), புதிய கண்டுபிடிப்புக்களுக்கான உரிமங்களைப் பதிவுசெய்தல் (Registration of Patent Rights), கைத்தொழில் நிறுவனங்களைப் பதிவுசெய்தல் போன்ற நடவடிக்கைகளையும் இந்நிறுவனம் மேற்கொள்கிறது.

புகழ்பெற்ற 2 ஆம் ஈழப்போரின் ஆரம்பத்துக்குப் பின்பு உருவாகிய நெருக்கடிகளின் காரணமாக, முற்றுமுழுதாக செயலற்றுப்போன நிறுவனங்களைவிட சில நிறுவனங்கள், நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றன. இவற்றையும் தற்போது ஆரம்பிக்கப்படும் தொழில் முயற்சிகளையும் பதிவுசெய்வதன் மூலம், அடையாளம் காண்பதற்கும் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

முற்றுமுழுதாக இயங்காமலிருக்கும் கைத்தொழில் முயற்சியாளர், உற்பத்தியை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தடையாக உள்ள காரணிகளையும், ஓரளவேனும் செயற்படும் நிறுவனங்கள் தங்கள் உச்சமட்ட உற்பத்தியை எட்டுவதற்குத் தடையாக உள்ள காரணிகளையும் இனங்கண்டு, அவற்றுக்குத் தீர்வுகாண்பதும் தமிழீழ தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தின் நோக்கமாகும்.

மனித பாவனைக்கு ஒவ்வாத பொருட்களை, உற்பத்தியின் போது உள்ளீடுகளாகப் பாவிப்பதனால் ஏற்படும் பாதிப்புக்களை நிறுவனம் கவனத்திற்கொண்டது. உதாரணமாக,'சக்கரின்' என்னும் செயற்கை இனிப்பூட்டி உணவுப் பதார்த்தங்களில் சேர்க்கப்பட்டதன் பலனாக பெரும் தீங்குகள் பல ஏற்பட்டன. இதைத் தொடர்ந்து சக்கரின் பாவனை தொடர்பான ஆய்வுகளில் நிறுவனம் ஈடுபட்டது.

இந்த சக்கரின் பொதுவாக மென்பானங்கள், பழரசங்கள் போன்றவற்றின் உற்பத்தியிலேயே பயன்படுத்தப்படுவதுண்டு. இந்தப் பழக்கத்தின் காரணமாக நீரிழிவு நோயாளர் தவிர்ந்த ஏனைய மக்கள், பலவகை நோய்களினால் பாதிக்கப் பட்டிருப்பதனை சர்வதேச மட்டத்திலான ஆய்வுகள் தெளிவாக வெளிக்காட்டியிருக்கின்றன.

இத்தாக்கங்கள் குறித்த உண்மைகள் உணவுப்பதார்த்த உற்பத்தியாளருக்கு விரிவாக விளக்கப்பட்டன. சக்கரின் பாவனையை நிறுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றை எந்த அளவுக்கு உற்பத்தியாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர், எவ்வாறு கடைப்பிடிக்கின்றனர் என்பதை அறியும் முகமாகத் திடீர்ப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலமும் உற்பத்திகளை ஆய்வுகூடப் பரிசோதனைகளிற்குட்படுத்துவதன் மூலமும் சக்கரின் பாவனையைத் தடைசெய்ய நிறுவனம் முயன்று வருகின்றது.

சக்கரின் பாவனை முற்றாக நீக்கப்பட்டிருப்பது, நிறுவனத்தின் செயற்பாட்டுக்கும் எம்மக்களுக்கும் கிடைத்த வெற்றி என்றே கூறலாம். மென்பானம், பழரசம் போன்றவை நிரப்பப்படும் போத்தல்களின் விபரத்துண்டுகளில் (Label) அவை தயாரிக்கப்பட்ட திகதி, காலாவதியாகும் திகதி குறிக்கப்படுவதற்கு நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டது. இதனால் பாவனைக்கு எற்ற பொருட்களை தாமே பார்த்து அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு பாவனையாளருக்கு உருவாக்கப் பட்டது.

நிறுவனங்களின் உற்பத்திப்பொருட்களுக்கென பிரத்தியேகமான வர்த்தகக் குறிகளைப் பதிவு செய்தல் என்பது, ஒவ்வொரு உற்பத்தியாளரினதும் தனித்துவத்தைப் பேணுவதற்கு சர்வதேசரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் ஒரு விடயமாகும். ஒரு உற்பத்தியாளர் குறிப்பிட்ட ஒரு வர்த்தகக்குறியின் கீழ் ஒரு உற்பத்தியை சந்தைப்படுத்துகின்றார் என்றால், அதே பொருளை உற்பத்தி செய்யும் இன்னொரு உற்பத்தியாளர் முன் குறிப்பிடப்பட்ட அதே வர்த்தகக்குறியின் கீழ் தனது உற்பத்தியைச் சந்தைப் படுத்த முடியாது.

அண்மையில் நடந்த ஒரு சம்பவத்தை வைத்து இதனை விளக்கலாம். எமது பிரதேசத்தில் ரொபிகள் தயாரிக்கும் பல உற்பத்தியாளர்கள் இருக்கிறார்கள் . இவ் உற்பத்தியாளர்களில் ஒருவர் ஏற்கனவே பிரபல்யமடைந்துவிட்ட ரொபி வகை ஒன்றின் சுற்றுறையில் தனது உற்பத்தியை சுற்றி சந்தைப்படுத்தியிருக்கிறார். இது தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. எமது நிறுவனம் குறித்த உற்பத்தியாளருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு சர்ச்சைக்குரிய ரொபியை சந்தையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

ஒருவர் தனது சொந்த முயற்சியினால் புதிய கண்டுபிடிப்பு அல்லது தொழில்நுட்பம் ஒன்றைக் கண்டுபிடித்தால் அக்கண்டுபிடிப்பின் பொருளாதார ரீதியான உரிமைகள் கண்டுபிடித்தவருக்கு மட்டும் குறிப்பிட்ட காலஎல்லைவரை உரித்துடையனவாகும். அக்குறிப்பிட்ட காலஎல்லை வரை இன்னொருவர் அக்கண்டுபிடிப்பினால் கிடைக்கக்கூடிய பொருளாதார ரீதியான பயன்களைப் பெற முடியாது.

இவை மென்பானங்கள், இனிப்புவகைகள், அப்பளம், குளிர்களி (ஐஸ்கிறீம்)போன்ற உணவு வகைகளின் உற்பத்தியாளர்களுக்குக் கலந்துரையாடல்கள் மூலம் போதியளவு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. இக்கலந்துரையாடல்களிலே சுகாதார வைத்தியஅதிகாரிகள், உணவு மருத்துவப் பரிசோதகர்கள் முதலியோர் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை வழங்கினார்கள். இந்தக் கலந்துரையாடல்களிலே உற்பத்தியாளர்களுக்கு தரநிர்ணயத்தின் முக்கியத்துவம், உணவுப் பொருட்களின் உற்பத்தியின் போது கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைகள், உணவுப் பதார்த்தங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டிய வழிமுறைகள் குறித்து விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டன. இத்துடன் உணவுத் தயாரிப்பு நிலையங்களில் தயாரிப்பிலீடுபடுவோர் கடைப்பிடிக்கவேண்டிய சுகாதாரநிலை பற்றியும் வலியுறுத்தப்பட்டது.

கைத்தொழில் முயற்சியாளர்கள் தங்கள் உற்பத்தி முயற்சிகளுக்குத் தேவையான மூலப்பொருட்களைப் பெறுவதில் உள்ள இடையூறுகளைத் தீர்க்கவும் நிறுவனம் முயல்கிறது. குறிப்பாக குடாநாட்டின் நெசவுத் தொழிலாலருக்கு நூல் கொள்வனவில் இருந்த சிக்கலைத் தீர்ப்பதில் நிறுவனம் உதவிவருகிறது.

மலரப்போகும் தமிழீழம் ஒரு வளர்ச்சியடைந்த கைத்தொழில் நாடாகத் திகழும்படி செய்யும் முயற்சியில் இந்நிறுவனம் இம்மண்ணிலுள்ள கைத்தொழில் நிறுவனங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கும். முதலீடுகளுக்கு உத்தரவாதம் வழங்கி வரிச்சலுகையளித்து கைத்தொழில் முயற்சியாளருக்கு ஊக்குவிப்பை வழங்கவும் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம் திடசங்கற்பம் பூண்டுள்ளது.

**நன்றி: 'ஈழநாதம்'**



**பிரத்தியேகமான வர்த்தகக் குறியீட்டை (சுரபி) உடைய தமிழீழத்தின் உற்பத்தி ஒன்று.**

# சொத்தி உபாலி யார் ?...

உபாலி உள்ளபோதும், அவர் அணிந்துள்ள உடுப்பில் கூட எந்தவிதமான கசங்கல்களும் காணப்படவில்லை என்றும், மதுபானம், சிகரட் போன்றவை அவரது பாவனைக்குத் தாராளமாகக் கிடைக்கின்றது என்றும் மேலும் கூறப்படுகிறது. அதாவது சுருக்கமாகக் கூறின், உபாலி விளக்கமறியல் கைதி போல அல்லாமல், பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ள ஒரு நபர் போலவே நடத்தப்படுகின்றார்.

இதேவேளை சொத்தி உபாலியின் சொந்தப் பாவிப்பில் நாரகேன்பிட்டிய வீட்டில் இருந்த பஜிரோ வாகனம், துப்பாக்கிகள் உட்பட பல பொருட்கள் மர்மமான முறையில் மறைந்துள்ளன் அல்லது மறைக்கப்பட்டுள்ளன.

### உபாலியின் உறவுகள்

சொத்தி உபாலி மீதான விசாரணையைப் பொலிசார் இதயசுத்தியுடன் மேற்கொள்வார்களாயின், உபாலியும் எந்தவிதமான ஒழிப்பு மறைப்புமின்றி தகவல்களை வெளியிடுவாராயின், அரசியல் வாதிகள் பலரின் குற்றவியல் நடவடிக்கைகள் அம்பலத்திற்கு வருவதைத் தவிர்க்க முடியாது. எனவே இந்த விசாரணை எந்தத்திசையில் செல்லப்போகின்றது என்பது கேள்விக்குரியதே. ஆனால், ஒன்று மட்டும் உண்மை. சொத்தி உபாலியும் ஏனைய அவரது சகாக்களும் நீதிமன்றத்திற்குச் கொண்டுசெல்லப்பட்டால், ஐ. தே. கவின் அரைவாசிக்கும் அதிகமானோர் குற்றவாளிக் கூண்டில் ஏறவேண்டிவரும். இதில் யார், யார் குற்றவாளிகள்? யார், யார் சுற்றவாளிகள் என்பதல்ல முக்கியம். திரைமறைவில் இடம்பெற்ற பல விடயங்கள் அம்பலத்திற்கு வரும். குற்றச்செயல்களுக்கு எவ்வாறு திட்டமிடப்பட்டது? யார், யார்? உடந்தையாக இருந்தனர் என்பதும் வெளிச்சத்திற்கு வருவதை தடுக்க முடியாமற்போகும்.

உபாலியின் உறவுகள் தனியே அரசியல்வாதிகளுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவரின் நெருங்கிய சகாவாகவும், இராணுவ அதிகாரிகளின் உற்றநண்பனாகவும் உபாலி இருந்துள்ளார் என்பதும் இப்போது தெரியவருகின்றது.

### டி. பியின் நோக்கம்

எதிர்வரும் தேர்தல்களின்போது ஐ. தே. கவில் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய கிரிமினல்களோ, அல்லது ஊழல் பேர்வழிகளோ இல்லை என்று காட்டுவதன் மூலம் தம்மைத் தூய்மையானவன் என்று நிருபிப்பதே விஜேதுங்காவின் நோக்கமாகும். கடந்தகால ஐ. தே. கவின் ஆட்சியில் இடம்பெற்ற சீரழிவுகளுக்கும், சீர்குலைவுகளுக்கும் பிரேமதாசாவும் அவரது ஆதரவாளர்களுமே காரணம் என்பதை உணர்த்தி, இந்தப் பிரச்சினைகளில் தமது கை சுத்தமானது என்று காட்டுவதன் மூலம் பிரேமதாசாவின் செல்வாக்கைச் சரித்து, அவரது விசுவாசிகளின் பலத்தைச் சிதைத்து, தொடர்ந்தும் ஆட்சிப் பீடத்தைத் தக்க வைத்துக்கொள்ளலாம் என்பதே டி. பியின் கற்பனையாகவுள்ளது எனலாம்.

எது எப்படிப் போனாலும், "இலை முள்ளின் மீது விழுந்தாலும், முள் இலையின் மீது விழுந்தாலும் பாதிப்பு இலைக்கே" என்பது போலவே, இன்றைய ஐ. தே. கவின் நிலையும் உள்ளது. குற்றச்செயல்களுடன் தொடர்புடைய கிரிமினல்கள் மீது விசாரணை நடைபெற்றாலும் அல்லது அவர்கள் விடுதலை செய்யப்பட்டாலும் பாதிப்பு அடையக்கூடிய நிலையிலேயே

**தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண் ஒடுக்குமுறையும்...

யூனிஸ்டுக்களின் குறுகிய கண்டேனாட்டத்தை சீனத்தலைமை ஏற்கவில்லை. சோசலிச சமூகமாற்றம் நீண்ட படிமுறை வளர்ச்சியைக் கொண்டதால், பெண்ணினம் தொடர்ந்து தனது விடுதலைக்காகப் போராட வேண்டும். தனது பிரத்தியேகப் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை ஆழமாக ஆய்வு செய்து, அவற்றின் தீர்வுக்காகப் பெண்களே போராட்டங்களை நடாத்த வேண்டும் என்ற முற்போக்கான கொள்கையைச் சீனக்கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை வலியுறுத்தி வந்தது. இந்தக் கருத்தையே சீனப்பெண்கள் சம்மேளனமும் கொண்டிருந்தது என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

சீனப்புரட்சியும், புரட்சியைத் தொடர்ந்து எழுந்த பாரிய சமூக மாற்றங்களும் சீனப்பெண்ணினத்தின் வாழ்க்கை நிலையைப் பெரிய அளவில் மேம்படுத்தியது. எனினும் பெண் விடுதலை சம்பந்தப்பட்ட மட்டில் சீனச் சோசலிச சமுதாயத்தில் சில பிரச்சினைகளும், சிக்கல்களும் ஏற்படத்தான் செய்தது. இரு முக்கிய விடயங்கள் சீன மகளிர் அமைப்புக்கு அதிருப்தியையும், ஏமாற்றத்தையும் கொடுத்தது எனலாம். ஒன்று தொழிற்துறையில் எழுந்த பால் வேறுபாட்டுப் பிரச்சினை, தொழிலாளர் அணியில் பெருந்தொகையில் பெண்கள் சேர்ந்து கொண்டபொழுது அவர்களுக்கு தேர்ச்சியற்ற, மிகக் குறைந்த வேதனமுடைய சாதாரண வேலைகளே வழங்கப்பட்டன. ஆண்களைவிடப் பெண்கள் தகுதி குறைந்தவர்கள், திறமையற்றவர்கள் என்ற தவறான ஆணாதிக்க மதிப்பீடு தொழிற்துறையில் மேலோங்கி நின்றதால் பெண்களுக்கு பாரபட்சம் காட்டப்பட்டது. தொழிலாளிகளாக மாறிய பெண்கள், தொழிற்சாலைகளில் முழுநேர வேலையில் ஈடுபட்டதோடு, வீட்டு வேலைப்பழுவும் அவர்கள் மீது சுமத்தப்பட்டது. சமயலகட்டில் உழைப்பதும், வீட்டைப் பராமரிப்பதும் பெண்களின் இயற்கையான தொழில் என ஆணினம் வாதிட்டது.

இரண்டாவதாக எழுபதுகளில் எழுந்த சீனக் கலாச்சாரப் புரட்சி சோசலிசத்தை முன்னெடுப்பதற்காக நடாத்தப்பட்டதாகக் கூறப்பட்ட இந்த கலாச்சாரப் புரட்சியின் போது பெண் விடுதலைப் பிரச்சினை முற்றாக ஒதுக்கப்பட்டது. பெண் சம்பந்தமான மூடநம்பிக்கைகள், பழமைவாய்ந்த கருத்துக்கள் ஆகியனவற்றுக்கு எதிராகக் கலாச்சாரப் புரட்சியானது போர் தொடுக்காதது சீனப் பெண்ணியக்கத்துக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது.

ருசிய, சீனப் புரட்சி அனுபவத்திலிருந்து ஒரு விடயத்தை நாம் தெட்டத்தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். சோசலிச சமூக மாற்றம் அதாவது பொருளாதார உற்பத்தி உறவுகளில் ஏற்படும் மாற்றம் தன்னிச்சையான முறையில் பெண்விடுதலைக்கு வழி கோலப் போவதில்லை என்பது தான். பெண்விடுதலை என்பது ஒரு பிரத்தியேகமான பிரச்சினை. பொருளாதார புறநிலைகளுக்கு அப்பாற் பட்ட பிரச்சினை. சோசலிசப் புரட்சியின் காரணமாகப் பழைய உற்பத்தி உறவுகள் மறையலாம். புதிய சமூகவடிவம் தோன்றலாம். இதனால் பெண்களின் அடிப்படையான பிரச்சினைகள் தாமாகவே தீர்ந்துவிடுமென எண்ணுவது தவறு. உலக சோசலிசப் புரட்சிகள், தேசிய விடுதலைப் போராட்டங்கள் உணர்த்தும் வரலாற்று உண்மையே இது.

சமீபத்தில் வெற்றியீட்டிய நமீபிய தேசிய விடுதலைப் போராட்டத்தை எடுத்துக் கொள்வோம், நமீபிய விடுகலைப் போராட்டத்தில் பெண்கள் முழுமையாகப் பங்கு கொண்டனர். ஆயுதம் ஏந்திப் போராடினர். நமீபிய நாட்டின் சுதந்திரம் நமீபியப் பெண்களின் விடுதலைக்கு வழிவகுக்கும் என நம்பினர். ஆனால் நடந்தது வேறு.

" நமீபியாவின் புதிய அரசியலமைப்பில் பெண்களுக்கு சமத்துவம் வழங்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. பெண்களின் சகல உரிமைகளுக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அரசியல் யாப்பில் சொல்லப்படுவதற்கும் நடைமுறை யதார்த்தத்துக்கும் பாரிய வேறுபாடு உண்டு. உண்மையில் ஆண்கள் எம்மைக் குழந்தைகள் போலவே நடாத்துகிறார்கள்" என்கிறார் ஒரு நமீபியப் பெண்நிலைவாதி. புதிய நமீபிய நாட்டின் சமூக, அரசியல், பொருளாதார வாழ்விலும் தேசிய நிர்மாணத்துறையிலும் பெண்கள் ஒதுக்கப்படுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டும் இந்த நமீபியப் பெண், தேசிய சுதந்திரத்தின் பின்னரும் ஆணாதிக்கமும், பெண்ஒடுக்குமுறையும் தலைதூக்கியிருப்பதாகக் குற்றம் சாட்டினார்.

சோசலிச புரட்சியை முன்னெடுத்த கட்சிகளும், தேசிய விடுதலை இயக்கங்களும் பெண் ஒடுக்குமுறையை ஒரு பாரிய சமூகப் பிரச்சினையாக முன்வைத்து, பெண்விடுதலையை தமது அரசியல் இலட்சியமாக வரித்துக் கொள்கின்றன. இந்த இலட்சியத்தை நிறைவேற்றும் நோக்குடன் புரட்சிப் போராட்டங்களில் பெண்கள் அணிதிரட்டப்படுகின்றனர். பெண்களின் பங்களிப்பால் போராட்டம் முழுமை பெற்று வெற்றியீட்டுகின்றன. ஆயினும் உலக சோசலிசப் புரட்சிகளதும் தேசிய விடுதலைப் போராட்டங்களதும் வரலாற்று அனுபவத்தை ஆய்வும் செய்யும் போது பல நாடுகளில் ஆணாதிக்கச் சர்வாதிகாரத் தலைமைகள் தோற்றம் பெற்று பெண்ணினத்தின் விடுதலைக்கு குந்தகமா அமைந்து விடுகின்றன. மனிதப் பிறவிகளின் சமத்துவத்தையும், சுதந்திரத்தையும் கௌரவத்தையும், சுபீட்சத்தையும் இலட்சியமாக வரித்துக் கொண்ட சோசலிச பரிசோதனைகளில் சர்வாதிகாரம் ஊடுருவி மனித உரிமைகளும், சுதந்திரங்களும் நசுக்கப்பட்டதால் இந்தத் துர்ப்பாக்கிய நிலை எழுந்தது. சோசலிசப் பரிசோதனைகள் நிகழ்ந்த நாடுகளில் குறிப்பாக சீனாவில் பெண் ஒடுக்குமுறைக்கு எதிராகப் பாரிய சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு பெண்களின் வாழ்க்கை நிலை மேம்படுத்தப்பட்டது. எனினும் ஆணாதிக்கத்தின் அழுத்தங்களும், பழமைவாய்ந்த சிந்தனைகளும் பிற்போக்கான உலகப் பார்வையும் பெண்விடுதலைக்கு முட்டுக்கட்டையாக நிற்கின்றன.

ஒடுக்குமுறையும், சுரண்டல் முறையும், சமூக அநீதிகளும் நிறைந்த சமூக அமைப்புக்கள் மாற்றப்பட்டு சமத்துவத்தினதும், சமூக நீதியினதும் அடிப்படையில் புதிய புரட்சிகர சமுதாயம் கட்டி எழுப்பப்படுவது அவசியம். ஆயினும் சமூக மாற்றத்தால் மட்டும் பெண்விடுதலை கிட்டப் போவதில்லை என்பதைப் பார்த்தோம். பெண்ணினம் சமூக மாற்றத்திற்காக மட்டுமன்றி, தங்களது சொந்த விடுதலைக்காவும் போராட வேண்டும். பெண்விடுதலை என்பது பெண் சமூகத்தின் ஒரு பிரத்தியேகப்பிரச்சினை. இப் பெண்ணின விடுதலைப் போராட்டத்தைப் பெண்களே முன்னெடுக்க வேண்டும். சோசலிச சமூக மாற்றத்தின் பின்னரும் இந்தப் போராட்டம் தொடர வேண்டும். ■

நன்றி:- வெளிச்சம்

# பாதுகாப்புக்காக மன்னாரில் படையினர் மின் விநியோகம்

இராணுவத்தின் கட்டுப்பாட்டிறகுள் இருப்பதாகக் கூறப்படும் மன்னார்த் தீவில், அடிக்கடி இளைஞர்கள் காணாமற் போகின்றனர். இராணுவம் மற்றும் பொலிஸ் நிலையங்களை அண்மித்துச் செல்லும் போது கைது செய்யப்படும் இளைஞர்களிலும் வீடுகள் சோதனையிடப்படும்போது கைதாகும் இளைஞர்களிலும் பலர் விடுவிக்கப்படுவதே இல்லையென கொழும்பிலிருந்து வெளியாகும் வாராந்த சஞ்சிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.


அகதிமுகாம் ஒன்றிலிருந்து கையொப்பமிடச் சென்ற சித்திலிங்கம், புவனேஸ்வரன் ஆகிய இருவரும் அண்மையில் இவ்வாறு காணமற் போனவர்களாவர். இப்பிரச்சினைகளைத் தவிர மன்னாரில் மின்சாரம். போக்குவரத்து சீர்கேடுகள், பொருளாதாரத்தடை என்பவையும் காணப்படுகின்றன. கடல் வலயத் தடைச்சட்டத்தினால் மட்டும் 800 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 3500 பேர் பாதிப் படைந்துள்ளனர். பேசாலையில் 34 வீடுகளையும் வங்காலையில் ஐம்பது வீடுகளையும் படையினர் சேதப்படுத்தியிருப்பதுடன் அவற்றில் சில வீடுகளில் குடியேறியுமுள்ளனர்.

மன்னார் நகரத்தின் பாவனைக்காக மூன்று ஜெனரேட்டர்கள் இருந்தன. இவற்றில் இரண்டு பழுதடைந்து விட்டன. ஒன்றை மட்டும் பாவித்து மாலை 6. 30 மணிமுதல் 10 மணிவரை சுழற்சி முறையில் மின்சாரம் வழங்கப்பட்டது. இந்நடைமுறை நகரத்திற்குள் மட்டுமே நடைபெறுகிறது. தாழ்வுபாடு, எழுத்தூர், எருக்கலம்பிட்டி கிராமங்களில் மின் விநியோகம் இல்லை. நகரில் படையினர் தம் பாதுகாப்புக் கருதியே மின் விநியோகம் செய்கின்றனர். மன்னாரில் பற்றரிகள் 140 ரூபாவுக்கு விற்பனையாகின்றன. மன்னார் தீவினுள் உள்ள இராணுவ அதிகாரிகள், சில பொருட்களுக்கு பாஸ் தேவை யில்லை எனக் கூறுகின்றபோ திலும் கற்பிட்டியில் உள்ள கடற் படையினர் ஒவ்வொரு பொருட் களுக்கும் பாஸ் கேட்கின்றனர்.

மன்னார்த்தீவில் பணியாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அரச அதிகாரிகள், படையினரின் சுற் றிவளைப்புகளின் போது தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்படு கின்றனர்.

அகதி முகாம்களில் உள்ள அக திகள், தமக்குப் போதுமான நிவாரணப் பணம் கிடைப்ப தில்லை எனப் புகாரிடுகின்றனர். ஐந்து பேருள்ள குடும்பத்திற்கு 1200 ரூபா வழங்கப்படுகிறது. பத் துப் பேருள்ள குடும்பமாயினும் 1200 ரூபாவே வழங்கப்படுகிறது. இந்த அகதி முகாம்களில் உள்ள மன்னார் பெரு நிலப்பரப்பை இருப்பிடமாக கொண்ட சிலர். தம்மை அங்கு கொண்டு சென்று விடுமாறு அங்குதாம் சுதந்திர மாகத் தமது தொழிலைப் பார்க் கலாம் என்று கூறுகின்றனர். ஆனால் அவர்களை மன்னார் பெருநிலப்பரப்பிற்கு அனுப்ப இராணுவம் மறுத்து வருகின்றது என அச் சஞ்சிகையில் குறிப்பி டப்பட்டுள்ளது.

இச் சஞ்சிகையைச் சேர்ந்தவர் கள், மன்னார்த்தீவில் உள்ள இராணுவச் சிப்பாய் ஒருவரைச் சந்தித்து வினாவியபோது, இரா ணுவமான எங்களாலேயே மாலை 6 மணிக்குப் பின் வீதி யில் இறங்கமுடியாமல் இருக்கி றது. பொலிசார் எப்படி வீதியில் இறங்கி நிர்வாகத்தை நடாத்த முடியும்? ஜனாதிபதி கொழும்பி லிருந்து வாய்க்கு வந்தபடியெல் லாம் பேசலாம். இங்கு போரி லீடுபடுவது நாங்களே. அவர்கள் இங்கு வந்து பார்த்தால்தான் இங்குள்ள நிலை தெரியும் என அச்சிப்பாய் குறிப்பிட்டார். ■


எமது
சகல
கிளைகளிலும்
பெற்றுக்
கொள்ளலாம்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில், பெண்போராளிகளின் பங்கு பற்றி எழுதப்பட்ட, Women Fighters Of Liberation Tigers என்ற நூலினை விடுதலைப்புலிகளின் சகல வெளிநாட்டுக் கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்



தமிழர் கலைபண்பாட்டுக்கழக யேர்மன்கிளையினர்
நடாத்தும்

**கரும்புலிகள் நினைவுநாள்**

**இடம் :- HENRI - DUNANT STR - 65**
**UNIVERSITÄT - ALTE - PH**
**45131 ESSEN**

**காலம் :- 09.07.94** **நேரம் :- 5:00 மணி**

**நிகழ்ச்சிநிரல்**

- மௌன அஞ்சலி
- தீபமேற்றல்
- வணக்கத்தில் சில வார்த்தைகள்
- கரும்புலிகள் நினைவுப்போட்டியில் பரிசுபெற்றோரின் பேச்சுக்கள், கவிதைகள்
- பரிசளிப்பு
- கவியரங்கம்
- நாட்டிய அஞ்சலி

மண்ணை நேசித்து
மரணத்தை முத்தமிட்டு,
விண்ணதிர வெடித்தவரின்
வீரத்தை வாழ்த்தும் நாள்

உறுதியும், துணிவுமுள்ள அந்த இமயங்களை நினைவு கொள்ளும் இந்நாளில், யேர்மன்வாழ் அனைத்துத்தமிழ் மக்களும் கலந்துகொண்டு உணர்வோடு ஆராதிப்போம்.

தமிழர் கலைபண்பாட்டுக்கழகம்,
யேர்மன்கிளை.

www.tamilarangam.net



## சிறீலங்காவின் அரசியல் சதி...

குமுறையை முழுப்பலம் கொண்டு எதிர்ப்பதற்கு ஆயத்தமாக உள்ளனர். சிறீலங்கா அரசாங்கம் இன்று மட்டும் அல்ல, என்றுமே இலங்கைத் தீவில் உள்ள தமிழ்மக்களின் சம்மதத்தைப் பெறாத நிலையிலேயே தங்கள் அரசியல் அடக்குமுறைச் சட்டங்களையும் அரசியல் மேலாண்மையையும் ஆயுதப் பலத்தின் மூலம் நிறைவேற்றி வருவது வரலாறு.

ஆனால் இன்று, தமிழீழ மக்களின் தேசிய பாதுகாப்பை வழங்கக்கூடிய இறைமையுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசாங்கம் இயக்கத் தொடங்கி விட்ட நிலையில், சிறீலங்கா அரசாங்கத்தின் ஆயுத அடக்குமுறையுடன் கூடிய அரசியல் ஒடுக்குமுறை இலகுவானதல்ல என்பதை உலகு அறியும். சிறீலங்கா ஜனாபதிக்கும் இது நன்கு தெரியும்.

இருந்தபோதிலும் குட்டையைக் கலக்கி மீன்பிடிக்கும் சிறீலங்கா பௌத்த பேரினவாத அரசாங்கம், இந்த தேர்தல் அறிவிப்பின் மூலம் அமையின்மையைத் தோற்றுவித்து இனமோதல்களுக்கு வழிவகுக்க முயல்கிறது.

இருப்பினும் அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் முழுவளர்ச்சி பெற்ற தலைமையைக் கொண்டிருக்கும் தமிழீழ மக்கள், சத்தியத்தின் துணையுடன் மீண்டுமொரு அரசியல் அடக்குமுறையை எதிர்ப்பதற்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

சிறீலங்காவின் தமிழர் பகுதிகளில் பொதுத்தேர்தல் அறிவிப்பு எனும் அரசியல் அடக்குமுறை, தமிழரின் ஆயுத எதிர்ப்பின் தேவையையும் இன்றியமையாமையையும் சட்டபூர்வத் தன்மையையும் வெளிப்படுத்தி நிற்கிறது எனவும், இதனால் சிறீலங்கா அரசாங்கம் எதிர்பார்ப்பதற்கு நேர்மாறான முறையில் தமிழீழ அரசு நோக்கிய அரசின் அங்கீகாரத்தை சர்வதேச சமூகத்திடை இது விரைவுபடுத்தப் போகிறது என அரசியல் அவதானி ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார். ■

## செல்லடி, குண்டடி...

பாதுகாப்புப் படைகளும் திணறிக் கொண்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதேவேளை கொழும்பில் வகைதொகையின்றி தமிழர்கள் கைதாவது அதிகரித்துள்ளதால் கொழும்பை பாதுகாப்பான இடம் என நம்பி இடம் பெயர்ந்த பல்லாயிரம் தமிழர்கள், கொழும்பின் கானல்நீர் தோற்றத்தைக் கண்டு கதிகலங்கிப் போயுள்ளதாகத் தெரியவருகிறது.

அதேவேளை தமிழர்களின் உயிரையோ உடலையோ அழிவுகளையோ பொருட்படுத்தாத சிறீலங்கா அரசாங்கமும், அதன் அடிவருடித் தமிழ்க் குழுக்களும் தேர்தல் தேனிலவுகளில் மூழ்கத் தொடங்கியுள்ளன. ■

## பதவிப் போட்டிக்காக...

அதேவேளை, "யாழ் தேர்தல் மாவட்டத்தைப் பொறுத்தவரை ஒருசில இடங்களே சிறீலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்துவருகிறது. இங்குள்ள வாக்காளர் தொகை சில ஆயிரம் மட்டுமே. ஆனால் முழு யாழ் மாவட்டத்திற்குமான வாக்காளர் தொகை ஆறு இலட்சத்திற்கும் அதிகம். ஏனைய இடங்களில் வாக்களிப்புக்கான வசதிகளைச் செய்யாமல் சிறீலங்கா அரசாங்கம் தேர்தலை நடாத்தி வாக்களிக்கக் கூடிய நிலையில் உள்ள ஒருசில ஆயிரம் பேர்களை மட்டும் கொண்டு எல்லாப் பிரதிநிதிகளையும் தெரிவுசெய்தால் அது தேர்தலாகுமா? எனவே நாம் இதற்கெதிராக நீதிமன்றம் செல்வதுபற்றி யோசித்து வருகிறோம். வன்னித் தேர்தல் மாவட்டத்தைப் பொறுத்த மட்டிலும் முல்லைத்தீவின் முழுப் பகுதியிலும் மன்னாரில் பெரும்பாலான பகுதியிலும் இதேநிலை நிலவுகிறது. இங்கும் பெரும்பான்மையான மக்கள் வாக்களிப்பதற்கு வசதிகள் செய்யப்படமாட்டாது. எனவே இந்த மக்களுக்கு அரசாங்கம் வாக்களிப்பதற்கு வசதிகளை ஏற்படுத்தாமல் தேர்தலை நடத்த முற்படுவது அடிப்படை மனித உரிமை மீறலாகும்" எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த சிவசிதம்பரம் கூறியுள்ளார்.

தமிழீழ மக்களின் இறைமை, அவர்கள் சொல்லொணாத் துன்பங்களை தாங்கி உயிர்தியாகங்களினால் உருவாக்கிய தமிழீழ அரசு நோக்கிய அரசு போன்றவற்றைப் பற்றிக் கவலைப்படாது, வாக்காளர் எண்ணிக்கையைக் கணக்குப் பார்த்து பதவி எண்ணிக்கையைக் கணக்குப் போடும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு சிறீலங்கா அரசாங்கம் தமிழீழப் பிரதேசங்களில் தேர்தலை நடாத்தும் வசதியை ஏற்படுத்தல் வேண்டும் என்பது தான் முக்கியமாக இருக்கின்றதே ஒழிய, அங்குள்ள மக்களின் தாயக உரிமை பற்றிய அங்கீகாரமோ அவர்களுடைய எதிர்கால அரசியல் அதிகாரம் பற்றிய அக்கறையோ இருப்பதாகத் தெரியவில்லை. ■

## ஜனாதிபதி தெரிவு...

லீம்களிடமும் செல்வாக்கு இழந்த நிலையிலுள்ள இன்றைய ஜனாதிபதியான டி. பி. விஜயதுங்கா, 50 வீதமான வாக்குகளைப் பெறக்கூடிய நிலை இல்லை என்பதும் அனைவரும் அறிந்ததே.

இந்நிலையில் இத்தனைவீத வாக்காளர் வாக்களித்தால்தான் தேர்தல் செல்லும் என்றநிலை இல்லாத சிறீலங்காப் பாராளுமன்றத் தேர்தலை முதலில் நடாத்தி, அதில் எதிர்பார்க்கும் வெற்றியைத் தான் பெற்றுவிட்டால், சிறீலங்காப் பாராளுமன்றத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் முறையை மாற்றியமைத்து, தமிழர்களின் வாக்குகளாலும் பிரதிநிதித்துவ உரிமையாலும் ஏற்படக்கூடிய அரசியல் நெருக்கடியைத் தவிர்க்கலாம் என்பதே டி. பி. விஜயதுங்காவின் பொதுத்தேர்தல் முயற்சியின் அடிப்படை என அவதானிகள் கூறுகின்றனர்.

பெரும்பாலும் சிறீலங்காப் பாராளுமன்றமே ஜனாதிபதியைத் தெரிவுசெய்யக்கூடிய, இந்தியப் பாணியிலான அரசியல் அமைப்புத் திருத்தங்களை ஐக்கிய தேசியக் கட்சி அறுதிப்பெரும்பான்மை பெற்றால், புதிய பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட இருப்பதாகப் பேசப்படுகின்றது.

எனவே சிறீலங்காப் பாராளுமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மை பெறும் நோக்கில் தமிழர்கள் மீதும், டி. பி. விஜயதுங்காவுக்கு ஒருதனியான திடீர் அன்புப் பிரவாகம் எடுக்கக்கூடுமெனக் கூறப்படுகின்றது. இதன் அடிப்படையிலேயே இங்கு இருப்பது பயங்கரவாதமே எனப்பேசிவந்த ஐக்கிய தேசியக் கட்சி தற்பொழுது, புதிய அரசாங்கம் இனப் பிரச்சினைக்கான தீர்வைக்கொண்டுவர முயற்சிக்கும் எனப் புதிய சித்தாந்தம் பேசத்தொடங்கியுள்ளது. ■

# இந்தியாவிலிருந்து சிறீலங்கா திரும்பிய அகதிக்கு 2 வருட கடூழியச் சிறை

### □விடுதலைப் புலிகளுக்கு உணவு வழங்கியதாக குற்றச்சாட்டு

இந்தியாவிலிருந்து திருப்பியனுப்பப்பட்ட சின்னையா கஜேந்திரன் எனும் 49 வயதான அகதி ஒருவர், 4-12-92 இல் திருகோணமலை அகதிமுகாமில் வைத்துச் சிறீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையாளர் அலுவலகத்தின் வேண்டுகோளின் பேரில் இலங்கை திரும்பிய இவர், இந்திய அமைதிகாக்கும் படையினர் யாழ்ப்பாண குடாநாட்டில் இருந்த வேளையில் அவர்களால் ஒன்றரை மாதம் சிறைப்படுத்தப்பட்டிருந்தார். இதன் பின்னரே இவர் அகதியாகத் தமிழகம் சென்றிருந்தார்.

திருகோணமலை அகதி முகாமிலிருந்து நாடு திரும்பிய இவரைக் கண்ட சிலர் (சிறீலங்காப் படைகளுடன் கூட்டுப் பணிபுரியும் தமிழ்க்குழுக்களைச் சார்ந்தவர்கள்) இவர் புலிகளுக்கு 1-1-87 க்கும் 17-1-89க்கும் இடைப்பட்ட காலத்தில் கரவெட்டியில் வைத்து உணவு வழங்கியதாக சிறீலங்காப் படைகளிடம் புகார் செய்ததை அடுத்து, சிறீலங்காப் படைகளினால் கைது செய்யப்பட்டார். சுமார் ஒன்றரை வருடங்களின் பின் இவர் விடுதலைப் புலிகளுக்கு உணவு வழங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவருக்கு ஏழு வருட காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனை சிறீலங்கா நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளது.

தமிழ் அகதிகள் நாடு திரும்புவதற்கு உதவி செய்வதாக கூறும் ஐக்கிய நாடுகள் ஆணையாளர் அலுவலகம், நாடு திரும்பும் தமிழ் அகதிகள் அரசியல் பழிவாங்குதல்களுக்கு உள்ளாகும் போது மௌனமாகி விடுவது அதனுடைய நடுநிலைத் தன்மைக்கு சவாலாக மாறிவருகிறது. ■

## கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் பதில் செயலாளர் அதிகார துஸ்பிரயோகம்

சிறீலங்காவின் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் பதில் செயலாளர் டாக்டர் விக்கிரம வீரசூரிய, ஐக்கிய தேசியக் கட்சியே தேர்தலில் வெல்லும் என ஆங்கில வார இதழ் ஒன்றுக்குக் கூறியதன் மூலம், அரசாங்க ஊழியர் ஒருவர் நேரடியாக அரசியலில் ஈடுபடக் கூடாது என்ற பொதுமரபை மீறி அதிகார துஸ்பிரயோகம் செய்துள்ளதாக சிறீலங்கா முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி. வி. குணரத்தினா கூறியுள்ளார்.

இவர் இது தொடர்பாக கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் ஒத்திவைப்புப் பிரேரணை கொண்டு வந்து, சம்பந்தப்பட்டவர் மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி கேட்டபோது, முன்னாள் சுற்றாடல் பாராளுமன்ற விவகாரத்திற்கான சிறீலங்காவின் அமைச்சரும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சருமான டாக்டர் விமல் வீரசூரிய, டாக்டர் விக்கிரம வீரசூரிய மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என அடித்துக் கூறிவிட்டார். ■

# திருமலை சுதந்திர வர்த்தக வலயம் முதலீட்டாளர்கள் வரமறுத்ததால் கைவிடப்பட்டது

சிறீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவால் திருகோணமலையில் 600 ஏக்கர் காணியில் நிறுவத் திட்டமிட்ட சுதந்திர வர்த்தக வலயம், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வரமறுத்ததால் கைவிடப்பட்டுள்ளது.

சர்வதேச சமூகமானது, இலங்கைத்தமிழர் பிரச்சினையை நன்கு இனங்கண்டு வருவதினால் அப்பிரச்சினை தீரும் வரை முதலிடுவது ஆபத்துக்களை எதிர்நோக்கும் செயலாக அமையும் என சர்வதேச முதலீட்டாளர்கள் கருதுகின்றனர்.

இதனால் திருகோணமலையில் பிறநாட்டவர்களின் முதலீடுகளுடனான தொழில் முயற்சிகளை உருவாக்கி, அதன் மூலம் சிங்களக் குடியேற்றத்தை ஊக்குவிப்பதற்கும், அதனை எதிர்த்தால் தமிழர்களுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் பகைமை ஏற்பட வழி பிறக்குமெனவும் விஜயதுங்கா போட்ட திட்டங்களை நிறைவேற்றமுடியாத சூழ்நிலை தோன்றியுள்ளது.

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் தமது நாட்டின் நிலை பற்றி சர்வதேச சமூகத்தவர்களுக்கு எடுத்துக்கூறி வருவதன் மூலம், சர்வதேச சமூகத்தினரை விழிப்புணர்வு அடையச் செய்துவருகின்றனர்.

ஐரோப்பிய சமூகத்தின் நிதி உதவிகளையும் எதிர்பார்த்தவாறு பெறமுடியாமல் சிறீலங்கா திண்டாடத் தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. ■

## நாம் எமது...

பார்ப்பதில்லை. குடியிருப்புக்கள் மேல் மட்டுமே குண்டு வீச்சுக்களையும் செல் வீச்சுக்களையும் நடாத்துகின்றன' என மதத் தலைவர் ஒருவர் நகைச்சுவையாகக் கூறினார்.

புகையிலை போன்ற பணப் பயிர்களை ஏன் சாகுபடி செய்கின்றார்கள் என்று கேட்டதற்கு, யுத்த சூழலில் கிளாலிப் போக்குவரத்துத் தடைப்பட்டால் வெங்காயம் போன்ற விளைவுப் பொருட்கள் அழுகிவிடும். எனவே அவற்றைச் சந்தைப்படுத்த முடியால் போய்விடும். ஆனால் புகையிலை போன்ற விளைபொருட்கள் நீண்ட காலத்திற்கு சேமிப்பதற்கு ஏற்றவையாதலால் அவற்றை விற்பனை செய்து பணமாக மாற்றுவது இலகுவானதாக உள்ளது. முதலில் விடுதலைப் புலிகள் புகையிலை செய்கையை விரும்பவில்லை. ஆயினும் பின்னர் பணப் பொருளாதாரத்தின் ஏற்றுமதிப் பொருளாக புகையிலை பயன்படுவதன் அவசியத்தை விளக்கியதும், அதனை அவர்கள் ஏற்றுக் கொண்டனர் என புகையிலை சாகுபடியாளர் ஒருவர் தெரிவித்ததாக அவர் கூறினார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் பொருளாதார வளர்ச்சி தொடர்பாக பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், நிபுணர்கள் அடங்கிய குழு எமக்கு விளக்கியது.

யாழ்ப்பாணத்தில் ஐரோப்பிய பொலிசாரைவிட மிக அழகாக உடையணிந்த தமிழீழ காவல் துறையினர் மிக செம்மையாக செயற்படுவதையும் காணக்கூடியதாக இருந்தது.

தமிழீழ நீதிமன்றங்கள் மக்களுடைய வழக்குகளை விசாரிக்கின்றன. சிறு சிறு குற்றங்களுக்கு சமூகப் பணி செய்யும்படி தீர்ப்பளிக்கப்படுகிறது. இத்தகைய தீர்ப்புப் பெற்ற சிலர் சமூகப் பணி செய்து கொண்டிருக்கையில் அவர்களுடன் உரையாடினோம். அப்பொழுது அவர்கள் மன மகிழ்ச்சியுடன் அந்த சமூகப் பணிகளை தமது சமூகத்திற்கு செய்வதை உணர முடிந்தது.

மாணவர்கள், கல்விநிலையங்கள் குண்டு வீச்சு சேதங்களுக்கு இலக்காகிய நிலையிலும் கல்விக்கு யாழ் குடாநாட்டில் முதலிடம் கொடுக்கப்படுகிறது.

மின்சாரம் இல்லாத நிலையிலும் இரவு நேரத்தில் கோயில்கள், தேவாலயங்கள் போன்றவை பொதுமண்டபங்களுக்கு மின்சாரத்தை ஜெனரேட்டர்கள் மூலம் வழங்குகின்றன. இத்தகைய மண்டபங்களில் ஒன்றுகூடும் மாணவர்கள் இரவில் கல்வியைக் கற்கின்றனர்.

இவ்வாறு கூறிய அந்தப் பிரதிநிதி, தமிழ் மக்களுடைய இந்த யதார்த்த நிலையை ஏற்காத எந்தப் பேச்சுவார்த்தைகளாலும் அமைதியை ஏற்படுத்த முடியாது என உறுதியாக் கூறினார். ■

# 'சிப்போட்' உற்பத்தி வெற்றி தந்துள்ளது

விசுவமடுவில் அமைந்துள்ள ஆலையில் உள்ளூர் வளங்களான வைக்கோல், இலுக்புல் முதலியவற்றைப் பயன்படுத்தி சிப்போட் தயாரிக்க, வன்னிப் பகுதியில் கைத்தொழில் பகுதியினர் எடுத்த முயற்சி பெரும் வெற்றியாக முடிந்துள்ளது. இங்கு 3'X 3' அளவில் சிப்போட்கள் தயாரிக்கப்படுகின்றன.

கடந்த மே தினத்தன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன ஊர்தியின் அங்கமாக அமைந்த வீடு, இச்சிப்போட்களால் ஆக்கப்பட்டு, ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையில் தற்போது தயாரிக்கப்பட்டுவரும் ஓடுகளால் வேயப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.


இச்சிப்போட்களின் தரத்தை மேலும் மேம்படுத்துவதற்குத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கைத்தொழில் பகுதியினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். தற்போது இவை கிளிநொச்சியில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன. வெகுவிரைவில் குடாநாட்டிலும் இவை விற்பனைக்கு விடப்படவிருக்கின்றன எனக் கைத்தொழில் பகுதியினர் தெரிவித்துள்ளனர். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதுவரலாற்றின் பிறந்தநாள்...

## அது, கரும்புலிகள் நாள்




ஓரேயொரு வெடி தான்,
அட்டதிக்கும் அதிர்ந்து குலுங்கும்.
சரித்திரத்தைத் தலைகீழாக்கி விட்டு,
சந்தனமேனி காற்றில் கரையும்.
உலகம் ஒரு தரம் புருவம் உயர்த்தும்.
வார்த்தை வலைக்குள்ளே -
சிக்காத தற்கொடை,
எவருக்கும் தெரியாமல் உறங்கும்.
வழியனுப்பி வைத்த விழிகள் கலங்கும்.
என்றாலும்,
கண்ணீர்க்கோடு கன்னத்தில் இருக்காது.
சாவுக்குத் தேதி குறித்து;
நேரம் கணித்து;
இலக்கு நோக்கி நகர எவரால் முடியும்?
வாழ்வு வருடங்களால் மட்டும்,
கணிக்கப்படுவதில்லை.
சங்கை பெறுகின்ற சாவும்,
வாழ்வாகிப் போகும்.
யூலை ஐந்தாம் தேதி
வருடத்தில் வரும் ஒரு நாளல்ல...
நெல்லியடியில்... மில்லர் தொடக்கிய
புது வரலாற்றின் பிறந்தநாள்,
தமிழருக்குள் நம்பிக்கை மொட்டவிழ்ந்து
விடுதலை வாசம் வீசத் தொடங்கிய நாள்,
ஊழிக்கூத்தின் அரங்கேற்ற நாள்,
ஆம்...
அது, கரும்புலிகள் நாள்.

- மாலிகா -

## இரத்தக் குளியலில் விடியலின் உயிர்ப்பு

மின்னி மறையும் கணப்பொழுது!
பூமியின் குலுக்கலோடு
பிளந்த அதிர்வு!
வெடிகுண்டின் அணைப்பு
அறுபட்டு,
ரவையின் வேகமுடன்
உடலின் சிதறல்!
மண்ணின் கொதிப்போடு
பீறிட்டுத் தெறித்த
இரத்தக் குளியலில்
விடியலின் உயிர்ப்பு!
முடிவாய் உதிர்க்குஞ்சாம்பல்,
நெடுஞ்சாண் கிடையில்
பேழை உறக்கம்
ஒன்றுமேயில்லை...
மனங்களில் உங்கள் முகங்கள்,
முடிவான இலட்சியம்
மறையும்போது...
உதிர்த்துவிட்ட புன்னகை,
கடைசியான கையசைப்பு,
கண்களுக்குள் தேக்கிக்கொண்டு
நுரைதள்ளும் கடலலையைக்
கேட்டோம்;
உங்கள் காற்தடங்கள் பட்டு
தேய்ந்துபோன
புற்களைக் கேட்டோம்;
தூர விலகிய
தொடுவானைக் கேட்டோம்,
துகள்களான உங்கள்
உடல்கள் எங்கே என்று.
சிலிர்த்தெழுந்து பொங்கிநின்றன.
விடிவெள்ளியாகி
விழுதுகளாய் நின்றவரே,
உம்மைத்
தொழுது நிற்கின்றோம்.
பொழுது புலரும்.
அழுத கண்கள் ஓயும்.
அவை எம்மோடு அணிதிரளும்!

- சுதாமதி -




U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
HOF JECKLIN, 7415 RODELS
SWITZERLAND
Tel/Fax: 081-831797

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 34
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943

Printed by Observer Group Newspapers.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்